Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 49 | சர்வதேச மின் செய்தித்தாள் | மே 15 2023


# முள்ளிவாய்க்கால் நினைவு நாள்

# Mullivaikkal Remembrance Day

ஈழத்தமிழின அழிப்பு நாள்
Eelam Thamil GENOCIDE DAY
தமிழ்த்தேசிய துக்க நாள்
Thamil National MOURNING DAY

2009 மே May 18

2023 14 Years ஆம் ஆண்டு



Only in 2009 Over 146. 679 Eelam Thamils were murdered and more then 70,000 Thamils unaccounted. Over 95,000 Thamil Women Widowed by Sri Lanka's Government Forces, More then 50,000 Thamils Children Orphaned.

1948 தொடக்கம் தமிழீழத்தில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடர்கிறது...

Since 1948 Structural Genocide Continues Against Eela Thamils by Sri Lankan Government

The Genocide of Thamils in Sri Lanka's one of the biggest tragedies of 21st century and the World still remains Silent

Government of Canada & United Nations Recognize Thamil Eelam Genocide and demand International Investigation on Genocide of Eelam Thamils

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
NEW LOCATION
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copies
Inside 32 Pages, B&W 20lb
c $ 310.00
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 /Sq. Ft (c$ 34.99 / ft.)
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Us: Silver Print House - 647 712 1266

விளம்பரத்துக்கு
அழையுங்கள்:
437.345.4203

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**போராட்டப் பளுவை ஒரு தோளிலும், பொருளாதாரப் பளுவை மறுதோளிலுமாக, உறுதி தளராது சுமந்து நிற்கும் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டுகிறேன்.**






## சங்கத்தமிழ்


**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca




அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# பண்பின் உறைவிடம் லெப். கேணல் கலையழகன்






கலையழகன் என நினைக்கும் போது, என்றும் மாறாத புன்னகை பூத்த முகமே எல்லோருக்கும் நினைவிற்கு வரும். கள்ளம் கபடமற்ற சிரிப்பும், எல்லோருடனும் அன்பாக, பண்பாக பழகும் தன்மையும், அனைவரையும் உபசரிக்கும் இயல்பும் அவனது இலட்சணங்கள். ஆனால் அவனுக்குள் இருந்த அற்புதமான திறமையும், ஆழமான ஆளுமையும், பன்முகத்தன்மையும் பலருக்குத் தெரியாது. குழந்தைத்தனமான முகத்திற்கு சொந்தக்காரன் பல்வேறு பொறுப்புக்களை தோளில் சுமந்து திரிந்த ஒரு அற்புதமான போராளி என்பது சிலருக்கும் மட்டும் தெரியும்.




ஆரம்பப் பயிற்சியை முடித்துக்கொண்ட கலையழகன், 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேசியத்தலைவர் அவர்களால் தொடங்கப்பட்ட கேணல் கிட்டு அரசறிவியல் கல்லூரி மாணவனாக இணைத்துக் கொள்ளப்பட்டான். தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப அரசறிவியலும், படையப்பயிற்சியும் இக் கல்லூரி மாணவர்களிற்கு மாறிமாறி வழங்கப்பட்டது. அக்கல்லூரியின் முதன்மை மாணவர்களில் ஒருவனாக மாவீரன் கலையழகன் திகழ்ந்தான். பேச்சாற்றல், நுட்பமாகப் பதில் கொடுக்கும் தன்மையினை கல்லூரியில் அவன் வளர்த்து கொண்டான். அங்கு அவனது ஒழுக்கம், கட்டுப்பாடு, மற்றவர்களோடு பழகும் தன்மை, எல்லோருக்கும் உதவும் பண்பு, நேர்மை என்பன அவனைத் தூய்மையான போராளியாக வெளிச்சம் போட்டுக்காட்டியது.

நான்கு வருடங்களிற்கு மேலாக அரசறிவியல் கற்ற கலையழகன் தேசியத்தலைவர் அவர்களது கருத்துரைகளினாலும், தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் தொடர் வகுப்புக்களினாலும் முழுமையான போராளியாகப் புடம் போடப்பட்டான். இந்தக்காலப் பகுதியில் கொமாண்டோப் பயிற்சியிலிருந்து கனரகப்பீரங்கிப் பயிற்சி வரைக்குமான பல்வேறு வகையான படையப்பயிற்சிகளை அவன் பெற்றான். 1995ஆம் ஆண்டு மாதகலில் ஆரம்பித்த அவனது போர் நடவடிக்கைகள் ரிவிரச, சத்ஜெய, ஜெயசிக்குறு, ஓயாத அலைகள்-03, ஆனையிறவுச்சமர் என நீண்டது. அண்மைய முகமாலை தாக்குதல் களத்திலும் அவன் பங்குபற்றியிருந்தான். இக்கல்லூரியின் முதலாவது அணி மாணவர்களின் பட்டப்படிப்பு நிறைவடைந்த போது, மிகச்சிறந்த மாணவர்கள் சிலரில் ஒருவனாக கலையழகன் தெரிவு செய்யப்பட்டு தலைவர் அவர்களினால் சிறப்புப் பரிசும் “திறவோர்” எனும் பட்ட வழங்கி மதிப்பளிக்கப்பட்டான். அரசியல் அறிவும், படைய அறிவும் ஒருங்கே இணைந்து தலைவர் அவர்கள் எதிர்பார்த்த பல்துறைசார் போராளியாக அவன் இந்தக் காலகட்டத்தில் வளர்ந்திருந்தான்.

கல்லூரிக் காலங்களில் பகுதி நேரமாக கலையழகன் தொலைத் தொடர்பாளனாக செயற்பட்டான். பின்பு சிறிது காலம் மொழி பெயர்ப்பு அறிவினை பெறுவதற்கான கல்வியையும், பாதுகாப்பு பயிற்சியையும் பெற்ற கலையழகனுக்கு தேசியத்தலைவர் அவர்களைப் பற்றிய வரலாற்றுப் பதிவுகளை ஆவணமாக்கும் பணியில் ஈடுபடும் வாய்ப்பு கிடைத்தது. இவ்வரிய வாய்ப்பினை தனது வாழ்நாளில் தனக்கு கிடைத்த பெரும் பேறாகவே அவன் கருதியிருந்தான். கால ஓட்டத்தில் அவனுக்கு வேலைச்சுமை அதிகரித்த போதும் தலைவர் அவர்களின் வரலாற்றை ஆவணமாக்கும் பணியினை தானே செய்யவேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் அவனுக்கிருந்தது. தலைவர் அவர்களது தொடக்க கால நிகழ்வுகளை தேடி எடுத்து தொகுப்பதிலும், தலைவர் அவர் களின் தொடக்க காலத் தோழர்களிடமும், ஆதரவாளர்களிடமும் தகவல்களைத் திரட்டி அதனைச் சரிபார்த்து ஆவணமாக் குவதிலும் அவன் அதிக ஆர்வம் செலுத்தியிருந்தான், வேறு சில தேசப்பற்றாளர்களுடன் சேர்ந்து கலையழகனின் கடும் உழைப் பின் பயனாகவே **‘Leader for All Season**’ என்ற தலைவர் அவர்களைப்பற்றிய புகைப்பட ஆவணநூலும், **‘விடுதலைப் பேரொளி**’ என்ற தலைவர் அவர்களைப்பற்றிய தொகுப்பு நூலும் வெளிவந்தன.

செஞ்சோலை, காந்தரூபன் சிறார்களுக்கான எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைவதற்காக, அவர்களிற்கான அழகான, அமைதியான இருப்பிடங்களை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்ற தலைவர் அவர்களின் பெருவிருப்பத்தினை நிறைவேற்றும் பொறுப்பு கலையழகனிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப்பணியை விரும்பி ஏற்றுக்கொண்ட கலையழகன் அதற்காக கடுமையாக உழைத்தான் . புலம் பெயர்ந்த மக்கள், அமைப்புக்கள், மத்தியில் இதற்கான நிதி வளங்களை திரட்டுவதற்காக கடும் முயற்சியெடுத்தான். ஏராளமானோரை அவன் சந்தித்தான், கதைத்தான், திட்டங்களை வழங்கினான். இறுதியில் அவன் இந்தப்பணியில் முழுமையாக வெற்றியடைந்திருந்தான். செஞ்சோலை - காந்தரூபன் சிறார்களுக்கான இருப்பிடங்கள் அமைக்கப்பட்டு தலைவர் அவர்களால் அவை திறந்து வைக்கப்பட்டமை அவனுக்குப் பெரும் மன மகிழ்வையும் திருப்தியையும் தந்திருந்தது. அவனது ஆன்மா அன்று நிறைவடைந்திருந்தது. இதே போலவே நவம் அறிவுக் கூட போராளிகளிற்கான அமைவிடத்திற்கும் கலையழகனின் பங்கு கணிசமானதாக இருந்தது.



எமது தேசத்திற்கான வெளிநாட்டுத் தொடர்புகளை, அனைத்துலக பணிகளை செய்வதற்கான தயார்ப்படுத்தலுக்காக கலையழகன் பல்வேறு நாடுகளிற்கு அனுப்பப்பட்டான். வெளிநாட்டுப் பயணமானது அவன் கல்லூரியில் கற்ற பல விடயங்களை நேரில் பார்த்து அறியக்கூடியதாக இருந்தது. புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் தாயகப்பற்று, விடுதலையுணர்வு, வாழ்க்கைநிலை என்பவற்றை அவன் அறிந்து கொண்டான். எமது பொறுப்பாளர்கள், செயற்பாட்டாளர்களின் கடின உழைப்புப் பற்றியும், எதிர் கொள்கின்ற பிரச்சினை குறித்தும் இங்கு சகதோழர்களிற்கு எடுத்துரைத்தான். அதே நேரம் தேசியத் தலைவர், விடுதலைப் போராட்டம் குறித்த தெளிவான கருத்துக்களை அவன் செல்லுமிடமெல்லாம் முன்வைத்தான். நட்பு ரீதியாக நிறையப் பேருடன் உறவாடி தொடர்புகளைப் பேணி வந்தான். புலம்பெயர்ந்த எமது உறவுகளின் தாயகம் தொடர்பான பிரச்சினைகளை அந்த மக்களின் நிலையில் நின்று பார்க்க வேண்டுமென்று வலியுறுத்தியவன். குறிப்பாக கனடாவில் வாழும் தமிழர்களிற்கான தாயகப்பணிகளை ஒருங்கிணைப்பதில் அவன் கடுமையாக உழைத்தான். புலம்பெயர் தமிழர்களின் பலத்தை, வளத்தை ஒருங்கிணைப்பதில் அவன் ஆற்றிய பணி அளப்பரியது. அவை வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டியவை.

2006ம் ஆண்டு நடுப்பகுதியில் கலையழகன் அனைத்துலகத் தொடர்பக துணைப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இதற்கு இவனது பண்பும், ஆளுமையும், விடயங்களை இலகுவாகக் கையாளும் ஆற்றலும் காரணமாக இருந்தன. சக போராளித் தோழர்களை மதித்து, அவர்களோடு மனம் திறந்து பழகி, அனுசரித்து, அவர்களது தேவைகளை விளங்கி பூர்த்தி செய்யும் பக்குவம் அவனுக்கிருந்தது. போராளிகளை வளர்க்க வேண்டும், வேலைகளுக்குள்ளால் உள்வாங்க வேண்டும், நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டுமென்று அவன் விரும்பிச் செயற்பட்டான். அவனை விட வயதில் கூடியவர்களும், அனுபவசாலிகளும் இருக்குமிடத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்மை அவனிடமிருந்தது. அந்தக் கவர்ச்சி மிக்க ஆளுமை எல்லோரையும் அவன் பால் ஈர்த்தது. குறுகிய காலத்தில் அவன் மிக வேகமாக வளர்ந்தான். அவனது ஆற்றல், ஆளுமையின் வீச்சு, முதிர்ச்சியடைந்த தன்மை என்பவை மூலம் ஒரு பெரிய பொறுப்பைத் தனியே செய்யக்கூடிய நிலையினை அவன் அடைந்திருந்தான் . அவன் நல்லவனாக மட்டுமல்லாமல் வல்லவனாகவும் திகழ்ந்தான் என்பது தான் உண்மை.



இவ்வாறான நேரத்தில் தான் 18.04.2007 அன்று எதிர்பாராத வெடிவிபத்தில் கலையழகன் வீரச்சாவு என்ற செய்தி வந்தவுடன் நாம் எல்லோரும் துடிதுடித்துப் பதறிப்போனோம். ஆழிப் பேரலை வந்து தாக்கியது மாதிரியான உணர்வு, பூமியதிர்ந்து நிலம் பிளந்து போன மாதிரியான நிலை, இதயத்தை யாரோ சம்மட்டியால் அடித்த அதிர்வு. வார்த்தைகளில் வடிக்க முடியாத துயரமும் வலியும். வேதனைச்சகதியில் சிக்கித் தவிக்கின்ற சோகம் . ஏன் இவ்வளவு வேகமாக எமை விட்டுப்பிரிந்தான் என்று மனதில் ஆழமான வலியுடன் எழும்பும் வினா. கலையின் இழப்பின் பெறுமதி, இழப்பின் இதயவலி, அதன் ஒட்டுமொத்தப் பரிமாணம் எனக்கே முழுமையாகத் தெரிந் திருந்தது. என்னையே முழுமையாகத் தாக்கியிருந்தது.

அவன் அழகானவன், பண்பானவன், பழகுவதற்கு இனிமையானவன், கள்ளம்கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவன். ஆளுமையெடுத்து செயற்கரிய பணிகளைச் செய்தவன். முதல் நாள் உயிரோடு வலம் வந்தவனை மறுநாள் விதைகுழியில் விதைத்துவிட்டு வந்தோம். இது எவ்வளவு துயரமாக, கொடுமையாக இருந்தது. ஆனாலும் எவ்வளவு இழப்பு வரினும், இடர்வரினும் உறுதி தளரோம். லெப். கேணல் கலை யழகனது தலைவர் மீதான பற்றும் பாசமும், விடுதலை வேட் கையும், தேசிய உணர்வும் கொண்ட எண்ணங்களை நெஞ்சினில் சுமந்து அவனது இலட்சியக் கனவை நனவாக்குவோம் என அவனது விதைகுழி மீது சத்தியம் செய்கின்றோம். நினைவுப்பகிர்வு

- வீ .மணிவண்ணன்

விடுதலைப்புலிகள் வைகாசி - ஆனி. 2007




# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்!

மே 01, 2023

சர்வதேசமெங்கும் தொழிலாளர் தினம் இன்றைய தினம் முன்னெடுக்கப்படுகையில் கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இன்று காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் முன்பாக கண்டிவீதியில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இன்றைய மே தினத்தில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சியாக 2261வது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளிற்கு நீதி கோரியே இன்றும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.






இதனிடையே தமிழரசுக்கட்சி மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் தொழிலாளர் தினங்கள் கிளிநொச்சி மற்றும் மல்லாவியில் இடம்பெற்றிருந்தது.

மே தின ஊர்தி பவனியில் நில ஆக்கிரமிப்பு மற்றும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு என்பவற்றுக்கெதிரான அடையாளங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

ஊர்தியுடன் பயணித்தோர். வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், தமிழர் கடல், நில வளங்களை சுரண்டாதே, இந்த மண் எங்களின் சொந்த மண் போன்ற கோசங்களை எழுப்பிய வண்ணம் பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்.

# படுகொலை செய்யப்பட்ட சக ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி தொடர்ந்து பயணிப்போம்!

மே 03, 2023

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படும் போதும் பேனாவுடனே அலைந்தோம். எம்மை அடக்க நினைக்க வேண்டாம். ஊடக சுதந்திரம் உறுதிபடுத்தபடுத்தப்பட வேண்டும் என மூத்த ஊடகவியலாளர் குமாரசாமி செல்வகுமார் தெரிவித்தார்.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ் ஊடக அமையத்தினால் இன்றைய தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தினை தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர்களது பிரச்சினை தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஊடகவியலாளர்களின் கருத்துக்களை காது கொடுத்து கேட்க கூட இந்த அரசு தயங்குகின்றது.







பயங்கரவாத தடை சட்டத்தை விட பாரதூரமான, பயங்கர வாத எதிர்ப்பு சட்டத்தை மீண்டும் கொண்டுவர முயல்கிறார்கள் .இந்த சட்டத்தை கண்டு நாங்கள் பயப்படவில்லை. அதாவது எமது சக ஊடகவியலாளர்கள் வீதி களில் சுடப்பட்ட பொழுது நாம் பேனாவை மட்டுமே கையில் கொண்டு அலைந்தோம். இந்த அட்டூழியங்களை பேனா கொண்டு தான் சர்வதேசத்திற்கு சொன்னோம்.

நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு விசாரணை வேண்டும். நீதி வேண்டும். அது வரை , படுகொலை செய்யப்பட்டவர்களின் பாதையில் நாமும் பயணிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்



# தையிட்டி விகாரையை அகற்ற கோரி வெள்ளி வரை தொடர் போராட்டம்!

மே 03, 2023




யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ ராஜமாகா விகாரையை அகற்ற கோரி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு தையிட்டி பகுதியில் தனியார் காணிக்குள் புதிதாக விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குறித்த விகாரையை அகற்ற கோரியும் அதனை சூழவுள்ள 14 குடும்பங்களுக்கு சொந்தமான சுமார் 100 பரப்பு காணியை விடுவிக்க கோரியும் இன்றைய தினம் புதன்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதியில் தையிட்டி கலைவாணி வீதியில் ஆரம்பித்த போராட்டம் பேரணியாக விகாரை வரையில் சென்று விகாரைக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தினை அடுத்து விகாரையை சூழவுள்ள பகுதிகளில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு , பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.










# 64 ஆவது படைப்பிரிவு முகாமிற்கு தமிழர் காணி சுவீகரிப்பு!

மே 04, 2023



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் புதன்கிழமை (3) பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரி ஒட்டுசுட்டான் நகர மையப்பகுதியில் நீர்ப்பாசன திணைக்களத்தின் 25 ஏக்கர் காணி, இரண்டு தனிநபர் காணிகள் மற்றும் இந்து மயானம் ஆகியவற்றை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள 64ஆவது படைப்பிரிவு முகாமுக்கான காணி ஆவணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கு பதிலளித்த பிரதேச செயலாளர், மக்களின் காணிகள், இந்து மயானம் என்பன விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால், இன்னும் விடுவிக்கப்படவில்லை.

எஞ்சியிருக்கும் அபகரிக்கப்பட்ட 25 ஏக்கர் தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களம் தமது கருத்தினை இதுவரை வழங்கவில்லை. அவர்களுடைய கருத்துக்குப் பின்னரே இவ்விடயம் தொடர்பாக முடிவெடுக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல காலமாக மயானம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், அப்பகுதி மக்கள் மயானத்துக்கு பல மைல்கள் செல்லவேண்டிய நிலை காணப்படுகிறது. 'விடுவிக்கிறோம்' என ஏமாற்றி வருகின்றனர் என கூறும் மக்கள், மயானத்தை விரைவில் விடுமாறும் சிரமங்களை எதிர்கொள்ளும் நிலையில் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ஊடகவியலாளருக்கு எதிரான வழக்கு புலனாய்வாளருக்கு அழைப்பாணை!

மே 4, 2023

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் கடற்படை அதிகாரி தொடர்ந்த வழக்கானது கடந்த 2019 ம் ஆண்டு முதல் இடம்பெற்று வரும் நிலையில் இன்றையதினம் (04.05.2023) முல்லைத்தீவு நீதவான் நீதி மன்றில் குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றது.

இதன் போது வழக்கு தொடுனரான கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதோடு வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 21.09.2023 க்கு தவணையிடப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் திட்டமிட்டு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட ஊடகவியலாளர் முல்லைத்தீவு பொலிஸாரால் 20.04.2019 கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதற்கமைய இன்றைய தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமனற நீதிபதி ரி சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி. எஸ். எஸ். தஞ்சயன் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது வழக்கு தொடுனரான முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் கடற்படை புலனாய்வு அதிகாரி வருகைதராத நிலையில் வழக்கு தொடுனரான கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதோடு வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 21.09.2023 க்கு தவணையிடப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 07.04.2019 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தார்.

இதன் போது செல்வபுரம் பேரூந்து தரிப்பு நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களையும், ஊடகவியலாளர்களையும் இனம் தெரியாத நபர் ஒருவர் போராட்டகாரர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததோடு தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்தவேளை அவரை ஆர்ப்பாட்ட காரர்கள் அடையாளப்படுத்த முற்பட்ட வேளை ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் தலையிட்டு குறித்த நபர் யார் என்று வினவியபோது அதற்கு அவர் யார் என சொல்ல மறுத்து குறித்த இடத்தினை விட்டு தப்பி ஓடிய போது ஆர்ப்பாட்ட காரர்களால் பிடிக்கப்பட்டு மீண்டும் விசாரித்த போது தான் கடற்படை அதிகாரி என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸாரை சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தபோது அவர்கள் குறித்த இடத்திற்கு வர தாமதமான நிலையில் குறித்த நபரை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அவர்




கடற்படையினை சேர்ந்தவரா என அடையாளப்படுத்திய போது கடற்படையினர் அவர் தங்களுடைய நபர் என தெரிவித்த போது அவரை குறித்த இடத்தில் வருகைதந்த பொலிஸாரிடம் ஒப்படைத்து திரும்பியுள்ளார்.

இந்நிலையினை தொடர்ந்து குறித்த கடற்படை அதிகாரி ஊடகவியலாளர்களை பழிவாங்கும் நோக்கில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் உண்மைக்கு புறம்பாக முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் 20.04.2019 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைத்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு வழக்கு விசாரணைகள் தொடந்தும்

# தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைப் பகுதிக்கு போராட்டத்துக்கு சென்றோர் கைது!

மே 04, 2023



யாழ்ப்பாணம், தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைப் பகுதிக்கு போராட்டத்துக்கு சென்ற இருவர் காங்கேசன்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று அதிகாலை போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட சிலரை பார்க்க சென்றவர்களில் இருவரே கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டமைக்கான காரணம் இதுவரை பொலிஸார் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி புதன்கிழமை (03) மாலை முதல் போராட்டம் இடம்பெற்றுவரும் நிலையில் இரவு முதல் போராட்டகாரர்களை அச்சுறுத்தி பொலிஸார் அவர்களை அங்கிருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

குறிப்பாக அப்பகுதிக்குள் ஊடகவியலாளர்கள் உட்பட பொதுமக்கள் யாரும் நுழையமுடியாதவாறு பொலிஸார் வாகனங்களை வீதிக்கு குறுக்கே நிறுத்தி தடையேற்படுத்தினர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி ந.காண்டீபன் உள்ளிட்ட சிலர் பொலிஸாருடன் வாதம் புரிந்த நிலையில் போராட்டக்களத்தில் முற்றுகைக்குள்ளாகினர்.

இதன் காரணமாக அப்பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு தையிட்டி பிரதேசத்தில் இதுவரை காலமும் விடுவிக்கப்படாமல் உள்ள பொதுமக்களின் காணிக்குள் அமைக்கப்பட்டு வருகின்ற பௌத்த விகாரைக்கு மேலதிகமாக அதனை சுற்றியுள்ள பொது மக்களின் காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை எதிர்க்கும் முகமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாக பொதுமக்களும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து புதன்கிழமை (03) கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விகாரையை சுற்றியுள்ள காணிகளையாவது விடுவிக்குமாறு கோரியும், சட்டவிரோதமாக கட்டப்பட்ட தையிட்டி விகாரையை அகற்றுமாறு கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், அதனை தொடரச்சியாக மூன்று நாட்களுக்கு முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் வெசாக் தினமான வெள்ளிக்கிழமை வரையில் தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக குறித்த பகுதியில் பந்தல் அமைக்க முற்பட்ட நிலையில், பொலிஸார் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்த நிலையில் தனியார் காணியொன்றில் பந்தல் அமைக்க முயன்றபோதும் அதற்கு இடமளிக்காத பொலிஸார் பந்தல் காரர்களை அச்சுறுத்தியதுடன் பந்தல் களையும் கைப்பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

போராட்டகாரர்களை அச்சுறுத்தி பொலிஸார் அவர்களை அங்கிருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட சிலருக்கு வெளியில் இருந்து உணவு, நீர், மருந்து என்பவற்றை எடுத்து செல்ல அனுமதிக்காத பொலிஸார் சில மணி நேரங்களுக்கு பின் மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டால் உணவு, நீர், மருந்து என்பவற்றை எடுத்துச் செல்ல அனுமதித்தனர்.



எவ்வாறாயினும் குறித்த விகாரைக்கான கட்டுமானப் பணிகள் தற்போது முழுமைப்படுத்தப்பட்டு கலசம் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதிகோரி வலிந்து காணாமலக்கப்பட்ட உறவுகளின் தாய்மாருக்கு அச்சுறுத்தல்!

மே 04, 2023



வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறு வலியுறுத்திப் போராடிவரும் தம்மை காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் அச்சுறுத்துவதாகவும், சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனக்கூறி மிரட்டுவதாகவும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் உறுப்பினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து கேசரியிடம் கருத்து வெளியிட்ட வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையின் தலைவி மதியசுரேஷ் ஈஸ்வரி, நீதியைக்கோரி 2000 நாட்களுக்கும் மேல் போராடிவரும் தமது சங்கத்தின் உறுப்பினர்கள் தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் கடிதங்கள் ஊடாகத் தொடர்ந்து அச்சுறுத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக இழப்பீடு மற்றும் மரணச்சான்றிதழ் பெறுவதற்கான பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளுமாறு வலியுறுத்தி தமது சங்கத்தில் அங்கம்வகிக்கும் தாய்மாருக்கு காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் கடிதங்கள் அனுப்பப்படுவதாகச் சுட்டிக்காட்டிய அவர், 'ஏனையோர் போராட்டங்களில் ஈடுபடுவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். எனவே நீங்கள் அச்சப்படாமல் வருகைதந்து பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளுங்கள்' என்று தொலைபேசி அழைப்பின் ஊடாக மீளவலியுறுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அதேபோன்று இவ்வாறு கடிதம் மூலம் 3 தடவைகள் அழைக்கப்பட்டதன் பின்னரும், அலுவலகத்துக்கு வருகை தராதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் தமது சங்க உறுப்பினர்களை அச்சுறுத்துவதாகவும் மதியசுரேஷ் ஈஸ்வரி தெரிவித்தார்.

'அடுத்துவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் காணாமல்போனோர் விவகாரம் தொடர்பில் பதில் கூறவேண்டிய நிலையில் இலங்கை இருக்கின்றது. எனவே பாதிக்கப்பட்ட தாய்மாரை இவ்வாறு அச்சுறுத்துவதன் ஊடாக அவர்களுக்கு மரணச்சான்றிதழையும் இழப்பீட்டையும் வழங்கிவிட்டு, அதனை மனித உரிமைகள் பேரவையில் ஒரு வெற்றியாகக் காண்பிப்பதற்கு அரசாங்கம் முற்படுகின்றது' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கைதானவர்கள் பலாலி காவல்துறை நிலையத்தில் தடுத்து வைப்பு!

மே 04, 2023

ஜனநாயக ரீதியில் போராடிய அப்பாவிகள் ஒரு சிலரை கைதுசெய்து பலாலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாக சட்டத்தரணி சுகாஷ் கனகரத்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர்களை விடுவிப்பதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றோம். பொலிஸ் பொறுப்பதிகாரியை நாங்கள் சந்திக்க வந்த வேளை எங்களை காக்க வைத்துவிட்டு திருப்பி அனுப்பியுள்ளார்கள்.

பொலிஸாருடைய அராஜகமும் அடக்குமுறையும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. ஆனால் இவற்றுக்கு நாங்கள் பணியப்போவதில்லை. ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுத்துக் கொண்டே இருப்போம்.

பலாலியில் இராணுவ பாதுகாப்புக்குள், இராணுவ முகாம்களை தாண்டி பொலிஸ் நிலையத்தை அமைத்திருக்கின்றார்கள்.

இந்த பொலிஸ் நிலையத்திற்கு வருவதற்கு கூட நாங்கள் இராணுவத்தினூடாகவே வரவேண்டி இருக்கின்றது. இதுவும் இலங்கையில் இராணுவ ஆட்சி நடைபெறுகின்றது என்பதை வெளிப்படுத்தும் முகமாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

எந்தவிதமான ஜனநாயகத்திற்கு எதிரான விடயத்திற்கும், பொலிசார் மற்றும் இராணுவத்தினரால் பொதுமக்களது வாழ்வாதாரங்களை அழிக்கின்ற செயற்பாடுகளுக்கு எதிராகவும் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.




# யாழ்ப்பாணத்தில் இருந்து துபாய்க்கு வாழைப்பழம் ஏற்றுமதி!

மே 04, 2023

நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் இருந்து துபாய்க்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்யும் திட்டத்தின் நிகழ்வு நேற்றைய தினம் (3) நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நிலாவரை சந்தியில் அமைக்கப்பட்டுள்ள வாழைக்குலை பதப்படுத்தல் நிலையத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.



யாழ் குடாநாட்டில் கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை பிரதேச



செயலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் கதலி வாழைக்குலைகள் நிலாவரையில் உள்ள வாழைப்பழம் சுத்திகரிப்பு நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு அங்கிருந்து நேரடியாக துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு துபாய் நாட்டுக்கு வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.

இதன் மூலம் நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைப்பதோடு உள்ளூர் விவசாயிகளுக்கும் பெரிதும் நன்மை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 10 ஆயிரம் கிலோ வாழைப்பழங்கள் வாரந்தோறும் ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் பணிப்பாளர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், வாழைக்குலை ஏற்றுமதியாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இத்திட்டமானது அனுராதபுரம் ராஜாங்கனை வாழைப்பழ ஏற்றுமதி திட்டத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வலிகாமம் வடக்கு வசாவிளானில் மக்களின் காணியில் இராணுவ வைத்தியசாலை!

## வலிவடக்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ச. சஜிவன்

மே 06, 2023

வலிகாமம் வடக்கு வசாவிளன் பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான காணியில் இராணுவ வைத்தியசாலை அமைக்கப்பட்டு வருகிறது. எவ்வித அனுமதியும் இன்றி இந்த வைத்தியசாலை கட்டப்பட்டு வருகிறது என வலிவடக்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ச. சஜிவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி வடக்கு தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டு வருவது தொடர்பில் பிரதேச சபைக்கூட்டத்தில் கலந்துரையாடி அதனை நிறுத்த வேண்டும் என பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

அதேபோல் வசாவிளான் பகுதியில் 245 கிராம சேவையாளர் பிரிவில் இராணுவ வைத்தியசாலை கட்டப்பட்டு வருகின்றது. இதில் 8 குடும்பங்களை சேர்ந்த பொதுமக்களின் காணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் கூறியிருந்தேன் கடந்த ஒருவருடமாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

பிரதேச சபையால் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படாது இருந்துள்ளது. தற்போது தையிட்டி விகாரை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள் அதேபோல் வசாவிளான் பகுதியில் அமைக்கப்படுகின்ற இராணுவ வைத்தியசாலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வலிவடக்கு பிரதேசத்தை பொறுத்தவரையில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து சிறிது சிறிதாக விடுவிக்கப்படும் பகுதியாகவே காணப்படுகிறது. தற்போதும் பல பிரதேசங்கள் விடுவிக்கப்படாமல் உள்ளது விடுக்கப்படும் என கூறப்பட்டுவந்தாலும் அது நடந்தபாடாக இல்லை.



எனவே இனியாவது காணிகளை விடுவிக்கின்ற நடவடிக்கைகள் மற்றும் அனுமதியின்றியும் பொதுமக்களின் காணிகளில் கட்டப்பட்டு வருகின்ற அனைத்து வேலைத் திட்டங்களையும் நிறுத்துவதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்புச் செயற்பாட்டிற்கு கந்தரோடையில் கவனயீர்ப்புப் போராட்டம்!

மே 07, 2023

யாழ். கந்தரோடையின் வரலாற்றைச் சிங்கள பௌத்த வரலாறாகத் திரிபுபடுத்தும் நோக்குடன் திட்டமிட்ட பௌத்த விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தமிழ்த்தேசத்தின் இருப்பை அழித்து வரலாற்றைத் திரிபுபடுத்தும் நோக்கில் முனனெடுக்கப்படும் கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்புச் செயற்பாட்டிற்கு எதிராக இன்று ஞாயிற்றுக் கிழமை (07.05.2023) யாழ்.கந்தரோடையில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




தமிழர் வாழ்வுரிமை மையம் மற்றும் ரோடைச் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

கந்தரோடையில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தொன்மையான தமிழ்ப் பௌத்தச் சின்னங்கள் அமைந்துள்ள பகுதிக்கு முன்பாக இன்று காலை-10 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பமானது. தொடர்ந்து பௌத்த விகாரை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் காணி அமைந்துள்ள பகுதிக்கு அருகில் வரை பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள் அங்கும் சுமார் வரை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




மேற்படி போராட்டத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ், கட்சியின் பிரச்சாரச் செயலாளர் சட்டத்தரணி ந.காண்டீபன், தமிழரசுக் கட்சியின் வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சே.கலையமுதன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், தமிழ்த்தேசியப் பேரவை, தமிழர் வாழ்வுரிமை மையம் ஆகியவற்றின் உறுப்பினர்கள், கந்தரோடை சிவில் - சமூகச் செயற்பாட்டாளர்கள், கந்தரோடை மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கந்தரோடையில் பௌத்த மயமாக்கலை உடன் நிறுத்து, மண் துறந்த புத்தனுக்கு எங்கள் மண் மீது ஆசையா? தமிழர் வரலாற்றைத் திரிவுபடுத்தாதே, இனவாதத்தைக் கைவிடு... புத்த தர்மத்தைக் கடைப்பிடி, கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்பை நிறுத்து! உள்ளிட்ட பல்வேறு சுலோகங்களைத் தமது கைகளில் ஏந்தியும், பல கோஷங்களை எழுப்பியும் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.






# வடக்கு, கிழக்கு தமிழர் தாயகமெங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்க ஏற்பாடு!

மே 08, 2023

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து 09 ஆம் முதல் வரும் மே 15ம் திகதி வரை வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திங்கட்கிழமை (08) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் இதனை தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில், தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியினை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றினையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டினை முன்னெடுக்கவுள்ளோம்.

சிங்கள பேரினவாதத்தின் இனவழிப்பு 2009 இல் உச்சத்தை தொட்ட போது முழு உலகமும் சிங்கள வல்லாதிக்கத்துடன் கைகோர்த்து எமது இனம் கொத்து கொத்தாக கொன்று குவிக்கப்படுவதினை வேடிக்கை பார்த்தன.

1948ம் ஆண்டு முதல் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக 1958, 1976, 1983 ஆண்டுகளில் இனப்படு கொலைக்கு உள்ளான தமிழினம், ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட பின் தினம் தினம் திட்டமிட்ட பாரிய இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர்.

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் தமிழர் என்ற இன அடையாளத்துக்காகவே சிங்கள இராணுவத்தால் கொன்று புதைக்கப்பட்டனர்.

நவாலி தேவாலயம், செஞ்சோலை என இனவழிப்பின் கரங்கள் நீண்டன. 2001ம் ஆண்டு தொடங்கிய சமாதான பேச்சுவார்த்தையின் பின், 2006ம் ஆண்டு எட்டாம் மாதம் தமிழினத்தை அழித்தொழிப்பதற்காக சிங்கள பேரினவாதத்தால் தொடங்கப்பட்ட யுத்தத்தில் சர்வதேசத்தில் தடை செய்யப்பட்ட கொத்தணி குண்டுகள், இரசாயன ஆயுதங்கள் மட்டுமன்றி உணவுத்தடை, மருந்துத்தடை கூட ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது.

விடுதலைக்காக உயிரினை துச்சமாக மதித்து களத்தில் நின்ற எமது மக்கள் பட்டினி சாவினை எதிர்கொள்ள கூடாது என்று தமிழர் புனர்வாழ்வு கழகமும், விடுதலை சார்ந்த அமைப்பும் தம்மிடம் இருந்த அரிசியினை பங்கிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியாக காய்ச்சி, அதை மக்களுக்கு வழங்கி, மக்களினை பட்டினி சாவிலிருந்து காத்தனர். எறிகணைகளும் கொத்து குண்டுகளும் எமது மக்களை கொத்து கொத்தாக கொன்ற போதும் பட்டினியால் மக்கள் இறக்கவில்லை.

இந்த உயிர் காத்த கஞ்சியினையே இன்று நாம் எமது உரிமை போராட்டத்தின் ஓர் வடிவமாக, எமது மக்களின் மீதான இனவழிப்பின் சர்வதேச நீதி தேடலின் ஓர் கருவியாக எமது இளம் சமுதாயத்திற்கு கடத்த வேண்டிய ஒரு கட்டுப்பாடில் நாம் அனைவரும் உள்ளோம். நாம் எமது இனவிடுதலையை அடையும் வரை இக்குறியீடு கடத்தப்படும் என உறுதியெடுக்கின்றோம்.

நாம் முன்னெடுக்கும் இச்செயல்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் எல்லா வேறுபாடுகளையும் துறந்து தமிழினமாக எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களின் மாவட்டத்திற்கு வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கஞ்சிக்கு உரிய அரிசி மற்றும் இதர பொருட்களை வழங்கி விடுதலைக்கான பயணத்தில் பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.






அத்துடன் தமிழர் தாயகம் எங்கும் இயங்கும் சமூக கட்டமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், ஆலய நிர்வாகங்கள், சமூக இயக்கங்கள், தமிழ் தேசியத்தை நேசிக்கும் அரசியல் கட்சிகள், தனி நபர்களாகவும் கூட்டாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சியினை உங்களை சூழ உள்ளவர்களுக்கு, குறிப்பாக இளையவர்களுக்கு பரிமாறி வரலாற்றையும் எங்கள் இனத்தின் வலிகளையும் தொடராக உலகெங்கும் உள்ள அனைவருக்கும் கடத்துமாறு வேண்டி நிற்கின்றோம் - என்றனர்.

# புல்மோட்டை அரிசிமலை கடற்கரையில் புதிதாக புத்த விகாரை

மே 08, 2023

திருகோணமலையிலுள்ள புல்மோட்டை அரிசிமலை என்கிற தமிழ் பேசும் மக்களின் பிரதேசம் யுத்தம் முடிந்த நாள் முதல் பௌத்த மயமாக்கலை எதிர்கொண்டு வருகின்றது.

இப்பகுதியில தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள ஆசிரி கந்த புராண ராஜமஹா விகாரைக்கான (Asiri Kanda Purana Rajamaha Viharaya) அடிக்கல் மஹிந்த ராஜபக்சே அதிகாரத்தில் நாட்டப்பட்டு இருந்தது.

அதே போல 500 ஏக்கர் காணி அரசாங்கத்தால் பௌத்த பிக்குகளுக்கு இங்கு வழங்கப்பட்டு இருந்தது.

நல்லாட்சி காலத்திலும் 25 ஏக்கர் காணி பௌத்த பிக்குகளின் தேவைக்கென வழங்கப்பட்டு இருந்தது.

அதே போன்று அரிசிமலையுள்ள 500 ஏக்கர் காட்டு பகுதியும் பௌத்த தொல்லியலுக்குரிய இடமாக பிரகடனம் செய்யப்பட்டு இருக்கின்றது (Archaeological Forest Reserve).

பௌத்த பிக்குகள் தவிர சாதாரண மக்கள் இப்பகுதியை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டு இருக்கின்றது.

இப்பகுதி எங்கும் புத்த துறவிகளுக்கானது என்றும் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டு இருக்கிறது.

இங்கு பிக்குகளுக்கான தியான மண்டபங்கள், வாழ்விடங்கள் உட்பட பல அமைக்கப்பட்டு இருக்கின்றன.

அதே போன்று அரிசிமலை கடற்கரையின் தென்மேற்கே உள்ள காட்டு பகுதியில் கூட புத்த கோவில் ஒன்றை நிறுவி இருக்கிறார்கள்.


இதுமட்டுமல்லாது இப் பகுதியை சூழ பல இடங்களிலும் புத்தர் சிலைகளையும் சிறிய பௌத்த கோவில்களை நிறுவி இருக்கின்றார்கள்.

இங்குள்ள பாணமுரே திலகவன்ச நாயக்க தேரர் (Panamure Thilakawansa Nayaka Thera) பௌத்தமயமாக்களின் பிரதான சூத்திரதாரியாக இருக்கின்றார்.

இவர் வடக்கு கிழக்கு பௌத்த மகா சங்கத்தின் தலைவராகவும் அறியப்படுகின்றார்.















அதே போன்று கோட்டாபய ராஜபக்சே நியமித்து இருந்த கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் உறுப்பினராகவும் கடமையாற்றி இருந்தார்.

அண்மையில் பொன்மலைக்குடா பகுதியில் காணி அபகரிப்புக்காக தமிழ் முஸ்லீம் மக்களை அச்சுறுத்திய சிங்கள காடையர்க்ளுக்கு மேற்படி பிக்கு தான் தலைமை தாங்கி இருந்தார்.

# தமிழர்களை அவர்களது தாயகத்திலிருந்தும் வெளியேற்றவா புதிய புத்தகோயில்கள்?

சுரேஷ் பிரேமச்சந்திரன்

மே 08, 2023

வடக்கின் பல பகுதிகளில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு புதிதாகக் கட்டப்படும் புத்த கோயில்கள் தமிழர்களை அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்தும் விரட்டியடிப்பதற்கான முயற்சியா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை சுதந்திரம் அடைந்தபொழுது டொனமூர் அரசியல் சட்டம் அமுலில் இருந்தது. சிறுபான்மை இனத்திற்கு எதிராக எந்த சட்டமும் கொண்டுவரக்கூடாது என்று அந்த அரசியலமைப்பில் 29ஆம் சரத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் அந்த 29ஆவது சரத்து இருக்கத்தக்கதாகவே ஒட்டுமொத்த மலையக தமிழர்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாகப்பட்டார்கள். மேலும் அவர்களது சிவில் அரசியல் சமூக உரிமைகளும் மறுதலிக்கப்பட்டது.

இதன் பின்னர், தென்பகுதியில் இருந்த தமிழ் மக்களின் வர்த்தகங்களை குறிவைத்து அவற்றை இல்லாமல் செய்து 1956இலும் 1977, 1981, 1983 போன்ற பல சந்தர்ப்பங்களில் தென்பகுதியில் இருந்த வடக்கு-கிழக்கு தமிழர்கள் மாத்திரமல்லாமல் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும் அவர்களது தாயக பிரதேசமான வடக்கு-கிழக்கிற்கு கப்பல் மூலமும் விமானம் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இப்பொழுது வடக்கு-கிழக்கைக் குறிவைத்து அங்குள்ள புராதன சைவ ஆலயங்களை உடைத்து, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி, தான்தோன்றித்தனமான முறையில், தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்து, அவற்றில் புத்தகோயில்களைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து அதற்கு இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக சிங்கள குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு யுத்தத்திற்குப் பின்னர், ஹம்பாந்தோட்டை போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள்.

கிழக்கில் ஏற்கனவே முக்கியமான பகுதிகளில் மிகப்பாரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சிங்கள பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டு விட்டது.

இப்பொழுது வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஒருமுறை தமிழீழக் கோரிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க வேண்டும் என்றால் வடக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 25வீதம் சிங்கள மக்களாக இருக்க வேண்டும் என அரச இராணுவ உயர் மட்டங்கள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே வடக்கு-கிழக்கில் 1000 புத்த விகாரைகளைக் கட்டுவதற்கு 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கோடிக்கணக்கான நிதியும் ஒதுக்கப்பட்டது.

இதன் மூலம் வடக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி அவர்களது நாடாளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து வடக்கையும் ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறிமாறி ஆட்சிக்கட்டிலில் ஏறும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கின்றது. ஏற்கனவே யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்டு விட்டார்கள்.

இலங்கை அன்னிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்பதற்காக தமிழ் மக்களும் இன மத பேதமின்றி போராட்டக்களத்தில் முன்னின்று போராடினார்கள். அந்தக் காலத்தில் தமிழ் மக்கள் தனிநாட்டிற்காகவோ அல்லது சுயாட்சிக்காகவோ போராடவில்லை.

ஆனால் சுதந்திரமடைந்ததன் பின்னர், சிங்கள அரசியல் தலைமைகள் கொண்டுவந்த தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை சட்டதிட்டங்களும் மொழி, கல்வி, வேலை வாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் காட்டிய பாரபட்சமும், தமிழ் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களில் இருந்து விரட்டி விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் தனித்துவத்தையும் இல்லாமல் செய்வதற்கு முற்பட்டவையுமே தமிழ் மக்களை சுயாட்சிக்காகவும் பின்னர் தனிநாட்டிற்காகவும் போராடும் சூழ்நிலைக்குத் தள்ளியது.

இலங்கையின் தென்பகுதியில் இனமோதல்களை உருவாக்கி, தமிழர்களுக்கு அவர்களது தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குதான் பாதுகாப்பான பிரதேசம் என்ற அடிப்படையில் அவர்களை வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு விரட்டியடித்ததுடன் அரசே கப்பல்கள் மூலம் தமிழ் மக்களை அப்பிரதேசங்களுக்கு அனுப்பியும் வைத்தது. இவ்வாறான நடவடிக்கைகள் அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக வலியுறுத்தப்பட்டதுமான எமது தாயகபூமியான வடக்கு-கிழக்கிலிருந்தும் அரசின் நடவடிக்கையினூடாக நாம் விரட்டியடிக்கப்பட்டால் நாம் எங்கே செல்வது?

உலகின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமெனவும் சிறுபான்மை தேசிய இனங்கள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் பழங்குடியின மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் அழிவிலிருக்கின்ற உயிரினங்களும் தாவர இனங்களும் காப்பாற்றப் படவேண்டும் என்றும் குரலெழுப்பும் ஐ.நா. சபையும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் இவ்வாறான விடயங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதும் கண்டிக்காமல் இருப்பதும் இலங்கை அரசின் தமிழர் விரோத செயற்பாட்டிற்கு உலகநாடுகளும் ஐ.நா. சபையும் துணைபோகின்றதா என்ற அச்சத்தையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இப்பொழுது, வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, மிகப்பெருமளவிலான வேகமான சிங்கள பௌத்த மயமாக்கல் என்பது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் இருப்பு காப்பாற்றப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் மொழி, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அரசு தனது சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றுள்ளது.

# ஞானம் பெற்றவர் புத்தர் ஞானம் அற்றவர் சரத் வீரசேகர!

மே 09, 2023

படைத் துறையில் வல்லவராக இருப்பவர், தத்துவத் துறையில் வல்லவராக, சட்டத் துறையில் வல்லவராக இருப்பதில்லை என்பதை சரத் வீரசேகரவின் கூற்றுக்கள் தெளிவாகக் காட்டியுள்ளன. ஞானம் பெற்றவர் புத்தர்... ஞானம் அற்றவர் சரத் வீரசேகர என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் கடுமையாகச் சாடியுள்ளார்.



இதுதொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை (09.05.2023) அவர் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை சிவபூமி. பாம்பையும், வேம்பையும், கல்லையும், மண்ணையும், நீரையும், தீயையும் வானையும், காற்றையும் சிவனாக வழிபடுவோர் சைவர். இயற்கையை, ஐம்பூதங்களை, சிவபெருமானாகக் கொள்வோர் சைவர்.

நாகர்களாய், இயக்கர்களாய், தமிழர்களாய், சைவர்களாய், இலங்கையின் ஆதி குடிகளாய் வாழ்கின்ற மக்களுக்கு இயற்கையே கடவுள். தாயின் கருவறையில் வினைவழிப் பிறந்த மனிதரைக் கடவுளாகத் தமிழர் கொள்வதில்லை, சைவர் கொள்வதில்லை. புத்தரையும், இயேசுவையும், முகமதுவையும் வழிபாட்டிடங்கள் அமைத்தே வழிபட வேண்டும்.

சைவர்களுக்கு தமிழர்களுக்கு நிலமே கோயில், நீரே கோயில், காற்றே கோயில், வானமே கோயில், நெருப்பே கோயில்.

எனவே, தமிழர்கள், சைவர்களின் கோயில்கள் அரசுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுக் கட்டப்பட்டவை அல்ல. எத்திசைச் செல்லினும் சைவர்களுக்கு அத்திசை கோயிலே.

வினைவழிக் கருவறையில் பிறந்து தெளிவு பெற்றவர்கள் போதித்தவர்கள் வழிவந்த மதங்கள் யாவும் இலங்கைக்கு வந்தேறி மதங்கள். அரசுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைய வழிபாட்டிடங்கள் அமைக்கும் மதங்கள்.

மேற்கத்திய மத மாற்றிகளின் பரப்புரை மதமாற்ற உத்திகளில் ஒன்று Planting Churches. ஆசிய ஆபிரிக்க நாடுகளில் மக்களிடையே Planting Churches உத்தியைப் பயன்படுத்துமாறு கோடிக் கணக்கில் பணம் வழங்கும் மதமாற்றச் சபைகள் ஆலோசனை சொல்கின்றன. அதே உத்தியை இலங்கையில் புத்த மத மேலாதிக்கவாதிகள் கடைப்பிடிக்கிறார்கள்.

புத்த மதத்தவர் குடியேற்றம், சைவ மக்களின் நிலம் அபகரிப்பு, தொல்லியல் போர்வை, இவை காரணங்களாக அமையத் தான் தோன்றியாக அமைந்த சைவக் கோயில்களின் அருகே புத்த கோயில்களை அமைக்கிறார்கள் சரத் வீரசேகர உள்ளிட்ட புத்த மேலாதிக்க வாதிகள்.

இவர்கள் கேட்கிறார்கள், தென் இலங்கையில் அமைந்த சைவக் கோயில்கள் சட்டத்துக்குள் அமைந்தனவா? என. நிலத்தையும் நீரையும் காற்றையும் வானையும் நெருப்பையும் வழிபடச் சட்டம் எங்கே தேவை? அவற்றுக்கான குறியீடுகளான பாம்பும் வேம்பும் மயிலும் வேலும் சூலமும் சிவபெருமானும் பிள்ளையாரும் முருகனும் அமையச் சட்டங்கள் ஏன் தேவை?

புதிதாக வந்தவர் புத்தர். புதிதாக வந்தவர் இயேசு. புதிதாக வந்தவர் முகமது. இவர்கள் சார்ந்த வழிபாட்டிடங்கள் அமைக்கவே சட்டங்கள் தேவை எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் ஆரம்பம்!

மே 09, 2023

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் வீடு அமைந்துள்ள வல்வெட்டித்துறை, ஆலடி பகுதியில் கஞ்சி வழங்கும் நிகழ்வை மாணவர்கள் ஆரம்பித்து வைத்தனர்.





குறித்த கஞ்சி வழங்கும் நிகழ்வு தொடர்பில் பல்கலைகழக மாணவர் ஒன்றியம் தெரிவிக்கையில்,

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியினை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இன



வழிப்புக்கு உள்ளான வரலாற்றினையும், வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளோம்.

இந்த உயிர் காத்த கஞ்சியினையே இன்று நாம் எமது உரிமை போராட்டத்தின் ஓர் வடிவமாக, எமது மக்களின் மீதான இனவழிப்பின் சர்வதேச நீதி தேடலின் ஓர் கருவியாக எமது இளம் சமுதாயத்திற்கு கடத்த வேண்டிய ஒரு கட்டுப்பாடில் நாம் அனைவரும் உள்ளோம்.

நாம் எமது இனவிடுதலையை அடையும் வரை இக் குறியீடு கடத்தப்படும் என உறுதியெடுக்கின்றோம்.



நாம் முன்னெடுக்கும் இச்செயல்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் எல்லா வேறுபாடுகளையும் துறந்து தமிழினமாக எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்களின் மாவட்டத்திற்கு வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கஞ்சிக்கு உரிய அரிசி மற்றும் இதர பொருடகளை வழங்கி விடுதலைக்கான பயணத்தில் பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் தமிழர் தாயகம் எங்கும் இயங்கும் சமூக கட்டமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், பொது நிறு



வனங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், ஆலய நிர்வாகங்கள், சமூக இயக்கங்கள், தமிழ் தேசியத்தை நேசிக்கும் அரசியல் கட்சிகள், தனி நபர்களாகவும் கூட்டாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சியினை உங்களை சூழ உள்ளவர்களுக்கு, குறிப்பாக இளையவர்களுக்கு பரிமாறி வரலாற்றையும் எங்கள் இனத்தின் வலிகளையும் தொடராக உலகெங்கும் உள்ள அனைவருக்கும் கடத்துமாறு வேண்டி நிற்கின்றோம் – என்றனர்.

# வெடுக்குநாறி பூசகரும் மற்றும் ஆலயநிர்வாக உறுப்பினரும் கைது!

மே 11, 2023

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசாரியார் மற்றும் ஆலயநிர்வாக உறுப்பினர் ஒருவர் நெடுங்கேணி பொலிசாரால் இன்று கைதுசெய்யப்பட்டனர்.

வெடுக்குநாறிமலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த இறை விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விக்கிரகங்கள் மீண்டும் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து ஆலயத்தில் பூஜை நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம் பெற்றுவந்ததுடன் நேற்றயதினம் சங்காபிஷேக நிகழ்வு இடம்பெற்றது. அதில் மழையினையும் பொருட்படுத்தாமல் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை விசாரணை ஒன்றிற்காக ஆலய நிர்வாகத்தினரை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு நெடுங்கேணி பொலிசாரால் நேற்றயதினம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து ஆலயத்தின் பூசாரிமற்றும் நிர்வாக உறுப்பினர் உட்பட இருவர் இன்றையதினம் காலை நெடுங்கேணி பொலிஸ்நிலையத்திற்கு சென்றுள்ளனர். அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிசார் அவர்களை கைது



செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று (11) வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ். வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தயவு செய்து உடனடியாக மீளக் குடியமருங்கள்!

## தெல்லிப்பழைப் பிரதேச செயலக நிர்வாகம்

மே 11, 2023

வலிகாமம் வடக்கில் அண்மையில் சில பிரதேசங்கள் பொதுமக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டது. 30 ஆண்டுகளிற்குப் பின்பு விடுவிக்கப்பட்ட அவ் இடங்களில் பல பொதுமக்களின் மிகவும் பெறுமதி வாய்ந்த உடைமைகளும், சொத்துக்களும் இருந்தன. இருப்பினும், சில காணி உரிமையாளர்கள் தமக்குரிய நிலப் பிரதேசங்களை அடையாளப்படுத்தி அங்கு தமக்கு சொந்தமான உடமைகளை பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதில் அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர் எனத் தெல்லிப்பழைப் பிரதேச செயலக நிர்வாகம் சுட்டிக் காட்டியுள்ளது.

பொதுமக்கள் தமக்குரிய பொறுப்பினைச் சரிவர உணர்ந்து தமக்குச் சொந்தமான மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள தமக்குரிய சொத்துக்கள் மற்றும் உடைமைகளைத் திருட்டுக் கும்பல்களிடமிருந்து பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாம் மிகவும் தயவுடன் வேண்டி நிற்கின்றோம் எனவும் தெல்லிப்பழைப் பிரதேச செயலக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அவ் நிலப் பரப்புக்கள் விடுவிக்கப்பட்டவுடன் ஊடகங்கள் மூலமாகவும், கிராம மட்ட அலுவலர்கள் ஊடாகத் தொலைபேசி வாயிலாகவும் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்களில் உள்ள, தங்களது நிலப் பிரதேசங்களை உரிய முறையில் அடையாளப்படுத்திப் பெறுமதியான தங்களது சொத்துக்களையும், உடமைகளையும் பாதுகாக்குமாறு நாம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

எமது கோரிக்கைக்கு அமைவாக பல பொது மக்கள் தமது நிலப் பிரதேசங்களையும், சொத்துக்களையும் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இருப்பினும் சில காணி உரிமையாளர்கள் தமக்குரிய நிலப் பிரதேசங்களை அடையாளப்படுத்தி அங்கு தமக்குச் சொந்தமான உடமைகளைப் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதில் அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர்.

இந்தகைய சந்தர்ப்பங்களை தமக்கு மிகவும் சாதகமாகப் பயன்படுத்தி பல்வேறு பிரதேசங்களிலிருந்து நாளாந்தம் வருகை தரும் பல திருட்டுக் கும்பல்கள் மிகவும் பெறுமதியான சொத்துக்களையும், உடைமைகளையும் திருடிச் செல்கின்றன. இத்தகைய சம்பவங்கள் பகல், இரவு என அனைத்து வேளைகளிலும் மிகவும் நூதனமான முறையில் நடைபெறுவதால் பொதுமக்களின் உடைமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடமும் நாம் கோரிக்கை முன்வைத்திருந்தோம்.




இருப்பினும் மிகப் பரந்தளவிலான பிரதேசங்களில் உள்ள பல பொதுமக்களின் உடைமைகளை 24 மணி நேரமும் பாதுகாப்பதற்குரிய காவல் பணிகளை மேற்கொள்வது என்பது பொலிஸாரின் இயலுமைக்கு மிகவும் சவாலாக உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எமது கிராம மட்ட அலுவலர்களும், பொலிஸாரும் இவ் உடைமைகளை பாதுகாப்பதில் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தாலும் திருட்டுக் கும்பல்களை 24 மணி நேரமும் கண்காணித்துக் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் சவாலாக உள்ளது.

பொதுமக்களினால் அடையாளப்படுத்தப்படாது பாதுகாக்கப்படாத காணிகளில் பல சமூக விரோதிகளும் சமூக நலனுக்கு அப்பாற்பட்ட பல தீய செயல்களை செய்ய வாய்ப்பளிக்கும் என்பதால் காணி உரிமையாளர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு நாம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

காணி உரிமையாளர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பின் தமது நம்பிக்கைக்குரிய உறவினர் அல்லது நன்பரின் உதவியின் ஊடாக தமக்குரிய காணிகளை அடையாளப்படுத்தி அங்கு உள்ள உடமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியமான ஒன்று என்பதை நாம் நினைவூட்ட விரும்புகின்றோம்.

பல்வேறு சவால் மிக்க வகையில் மேற்கொள்ளப்படும் எமது நிர்வாக நடவடிக்கைகள் ஊடாக பொதுமக்களின் பாவனைக்காக மீளவும் ஒப்படைக்கப்படும் காணிகளையும், அங்கு உள்ள உடமைகளையும் பாதுகாப்பது என்பது அவ் காணி உரிமையாளர்களின் மிக முக்கிய பொறுப்பு என்பதுடன் அவ்வாறான பொறுப்பினை நிறைவேற்றத் தவறுவது காணி விடுவிப்புத் தொடர்பில் நாளாந்தம் நாம் மேற்கொள்ளும் நிர்வாக நடவடிக்கைக்கும் அது மிகவும் சவாலாக இருக்கும் என்பதை தயவுடன் நாம் நினைவூட்ட விரும்புகின்றோம்.

எனவே, எமது பிரதேசத்தில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள தங்களிற்கு சொந்தமான இருப்பிடங்களில் இயலுமான வரையில் மீளக்குடியமர முயற்சி செய்யுங்கள். உடனடியாக அது சாத்தியமற்றது எனில் தமக்குச் சொந்தமான காணிகளை நன்கு துப்பரவு செய்து அவற்றை முறையாக அடையாளப்படுத்தி அங்கு உள்ள தங்களது உடமைகளையும், சொத்துக்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு நாம் தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

திருட்டுக் கும்பல்களுக்கும், சமூக விரோதிகளுக்கும் தங்களது காணிகளும், வீடுகளும் பயன்படுவதை தவிர்ப்பது எமது சமூகத்திற்கும், எமது மக்களுக்கும் தாங்கள் ஆற்றும் மிக முக்கியமான சமூகப் பொறுப்பு மிக்க கடமை என்பதை உணர்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு நாம் மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

எமது பிரதேசத்தில் பல காணிகள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுப் பல ஆண்டுகள் சென்ற பின்பும் தமது காணிகளைப் பொறுப்பேற்றுத் துப்பரவு செய்து அங்கு மீளக்குடியமர அல்லது குறிப்பிட்ட காணிகளை விவசாய தேவைகள் போன்ற ஏதேனுமாரு தேவைக்குத் தானும் பயன்படுத்த முயற்சி செய்யாத பொதுமக்கள் இவ் விடயத்தில் தமது சமூகப் பொறுப்பை உணர்ந்து விசேட கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு நாம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் விடயத்தில் தங்களிற்கு ஏதேனும் உதவிகள் தேவைப்படின் தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க எமது அலுவலகம் தயாராகவே உள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள் எனவும் தெல்லிப்பழைப் பிரதேச செயலக நிர்வாகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# வெடுக்குநாறி பூசகரும் மற்றும் ஆலயநிர்வாக உறுப்பினர் விடுதலை!

மே 11, 2023

சிறீலங்கா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசாரியார் மற்றும் ஆலயநிர்வாக உறுப்பினர் ஆகியோர் வவுனியா நீதிமன்றால் இன்று விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா – வெடுக்குநாறிமலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த இறை விக்கிரகங்கள் அண்மையில் உடைத்து அழிக்கப்பட்டநிலையில் வவுனியா நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மீண்டும் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது.

எனினும் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்ட போது நீதிமன்ற உத்தரவு கருத்தில்கொள்ளப்படாமல் தொல்பொருட்களுக்கு சேதம்விளைவிக்கப்பட்டதாக தெரிவித்து நெடுங்கேணி பொலிசாரால் ஆலயபூசாரியும், நிர்வாக உறுப்பினர் ஒருவரும் இன்று கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் வவுனியா நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். எனினும் குறித்த வழக்கின் முறைப்பாட்டாளர்களாக ஆலய நிர்வாகமும் பூசாரியும் இருப்பதனால் அதேவழக்கில் அவர்களை சந்தேக நபர்களாக பெயரிடுவது வழக்கிற்கு முரனாக அமையும் என்பதை சுட்டிக்காட்டிய நீதவான் வழக்கிலிருந்து அவர்களை விடுவித்திருந்தார்.



அத்துடன் ஆலயத்தில் கட்டுமானங்களையோ மாற்றங்களையோ ஏற்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், பூஜை வழிபாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை இறை விக்கிரகங்களை உடைத்தவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையினை விரைந்து எடுக்குமாறும் பொலிசாருக்கு பணிக்கப்பட்டது.

# மன்னாரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறல்!

மே 11, 2023

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் மூன்றாவது நாளாக வியாழக்கிழமை (11) காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை முன்பாக இடம் பெற்றது.

இதன் பொழுது மன்னார் மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், வீடுகளுக்கு சென்று அரிசி விறகு என்பன திரட்டப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி ஆக்கப் பெற்று பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இனப்படுகொலை இடம்பெற்ற வேலை மக்களின் அடிப் படை ஆதாரமாக காணப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பான துண்டு பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

அதிகளவான மக்கள் உணர்வுபூர்வமாக கலந்து கஞ்சியை அருந்தி சென்றனர்.





# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறல்!

மே 11, 2023

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களினால் ஆரம் பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (11) வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை பரிமாறி தமிழ்மக்கள் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றினையும் , வலிகளையும் இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டினை யாழ்ப் பாண பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள் ளனர்.

அந்தவகையில் இன்று பிற்பகல் 1 மணியளவில் வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலத்திற்கு முன்பாக குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாடசாலை மாணவர், பொதுமக்கள் என பலரும் கஞ்சி அருந்தி சென்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் கலந்து கொண்டனர்.





# வெடுக்குநாறி பூசகரும் மற்றும் ஆலயநிர்வாக உறுப்பினர் கைதை கண்டித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!




மே 11, 2023

வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தின் பூசாரி மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் கைதை கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை சுற்று வட்ட வீதியில் குறித்த ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை (11) பிற்பகல் முன்னெடுக்கபட்டது.




ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ‘தமிழர்களின் தொன்மையை அழிக்காதே, வெடுக்குநாறி எங்கள் சொத்து, தொல்லியல் திணைக்களம் அரசின் கைக்கூலி, நீதியில்லா நாட்டில் நீதிமன்றம் எதற்கு, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்’ போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

சுமார் 30 நிமிடம் நடைபெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் சிலரும் கலந்து கொண்டனர்.



# முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தை விடுவியுங்கள்!

## மாவீரர்களின் பெற்றோர்

மே 11, 2023



இலங்கை இராணுவத்தால் வடகிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள துயிலுமில்லங்களை விடுவிக்க கோரி குரல்கள் ஒலிக்க தொடங்கியுள்ளது.

முல்லைதீவில் அளம்பில் மாவீரர் இல்லத்தை விடுவிக்குமாறு கோரி உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுப்போம் என மாவீரர்களின் பெற்றோர் அறிவித்துள்ளனர்.

அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த இடத்தை ஆக்கிரமித்து 23 ஆவது சிங்க படையணி முகாம் அமைந்துள்ளது.

"எங்கள் பிள்ளைகள் புதைக்கப்பட்ட இடத்தில் இராணுவத்தினர் விவசாயம் செய்கிறார்கள், கிரிக்கெட் விளையாடுகிறார்கள், உணவகம் நடத்துகிறார்கள்.

எங்கள் பிள்ளைகளுக்கு அமைதியான முறையில் அஞ்சலி செலுத்துவதற்கு அவர்கள் உடனடியாக கல்லறையை விட்டு வெளியேற வேண்டும்." என்று குரல்கள் எழுந்துள்ளன.

அளம்பில் மாவீரர் மயானம் அமைந்துள்ள காணியை மீளப் பெற்றுத் தரவேண்டும். விதைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு பெற்றோர்களும் உறவுகளும் அஞ்சலி செலுத்தும் வகையிலும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை நிறைவேற்றத் தவறினால் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

போர் காலத்திலும், போரின் முடிவுற்றதைத் தொடர்ந்தும் வடக்கு - கிழக்கு முழுவதும் 25 மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பம்!

மே 12, 2023













தமிழினப் படுகொலையை குறிக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் இன்று(12) யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் ஆரம்பமானது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாள் நினைவஞ்சலி, இன்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முன்பாக இடம்பெற்றது.

ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமாகிய நினைவேந்தலின் போது, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

இதன்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளும் அஞ்சலி செலுத்தினர். இறுதியில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

# ஈகைச்சுடர் திலீபனின் நினைவிடத்திலும் மற்றும் யாழின் பல்வேறு பகுதிகளில் முள்ளிவாக்கால் கஞ்சி!

மே 12, 2023

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

நல்லூரில் ஈகைச்சுடர் திலீபனின் நினைவிடம், தொண்டமனாறு, வடமராட்சி, நாவற்குழி என பல்வேறு பகுதிகளிலும் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில், முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவாக, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குமாறு யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம் அனைத்து தரப்பிடமும் கோரிக்கை விடுத்துள்ளதுடன், மாணவர்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல்வேறு பகுதிகளிலும் கஞ்சி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.








# உருத்திரபுரம் சிவன் ஆலயத்தை அபகரிப்பதற்கான முயற்சியில் தொல்பொருள் திணைக்களத்தினர்?

மே 12, 2023

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயம் அமைந்துள்ள காணியில் தொல்பொருட்கள் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்தியுள்ளது.




இந்துக்களின் பொற்காலமாகக் கருதப்படும் சோழர்காலத்தில் முற்றுமுழுதாக திராவிடக் கட்டடக் கலைமரபை பின்பற்றி உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம் கட்டப்பட்டது.

வரலாற்றுத் தொன்மையும், பழமையும் வாய்ந்த சிவாலயத்தை அபகரிப்பதற்கான முயற்சிகள் தொல்பொருளியல் திணைக்களத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் உருத்திரபுரஸ்வரபுரம் ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்லியல் சின்னங்கள் அமைந்துள்ளதாக தொல்லியல் திணைக்களம் கூறியுள்ளது.

ஆகவே குறித்த நிலப்பரப்பினை எல்லைப்படுத்தும் நடவடிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானித்து கரைச்சி பிரதேச சபையினால் அறிக்கையொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.


பிரதேச செ... கரைச்சி - கிளிநொச்சி
DIVISIONAL SECRETARIAT, KARACHCHI - KILINOCHCHI
021 228 5730 | 021 228 5880 | 021 228 5670
021 228 5633 | 021 228 5602
KN/KR/LB/LL/250 | 2023.05.04
உருத்திரபுரீஸ்வரர் ஆலயக்காணி தொடர்பானது
ARCH/JF/ZONE/06/076 ... 2023.04.19 ...
... 18ஆம் திகதி (2023.05.18) ...
தொடர்புகளுக்கு: ... - 0773521843
பா.ஜெயகரன்
பிரதேச செயலாளர்,
கரைச்சி.
Divisional Secretary Karachchi

# மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளுக்கு தயாராகும் முள்ளியாக்கால் முற்றம்!

மே 14, 2023

தமிழின படுகொலைகளின் போது உயிர் நீத்தவர்களையும், உணவின்றி வறுமையில் சிக்கியபோது கஞ்சியை மட்டுமே உட்கொண்டு வாழ்ந்த போர்க்கால வாழ்க்கையையும் நினைவு கூரும் வகையில், இந்த வாரம் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறல் வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

2009ஆம் ஆண்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் இந்த ஆண்டும் நினைவேந்தல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மே 12 முதல் மே 18 வரை அனுஷ்டிக்கப்பட்டு வரும் இனப்படுகொலை வாரத்தின் முதல் நாளான நேற்றுமுன்தினம் மாலை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மக்களும் சிவில் அமைப்பு பிரதிநிதிகளும் இணைந்து வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டதோடு, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது.










## கனடாவில் கடவுச்சீட்டு சேவை வழமைக்கு திரும்பியுள்ளதாக அறிவிப்பு!

மே 03, 2023

கனடிய கடவுச்சீட்டு சேவை வழமைக்குத் திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்று வந்த பாரிய தொழிற்சங்கப் போராட்டங்களினால் கடவுச்சீட்டு விநியோகம் செய்யும் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது.

சமஷ்டி பொதுச் சேவை தொழிற்சங்கம் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டதனால், கடவுச்சீட்டு சேவைகள் மட்டுமன்றி பல்வேறு சேவைகள் தடைப்பட்டன.

கடந்த 12 நாட்களாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடவுச்சீட்டுக்காக விண்ணப்பம் செய்வோருக்கு தாமதமின்றி சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## கனடாவின் வருமான முகவர் நிறுவன பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது!

மே 03, 2023

கனடாவின் வருமான முகவர் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சுமார் 35000 வருமான முகவர் நிறுவன பணியாளர்கள் போராட்டத்தில் குதித்திருந்தனர்.

தமது கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதனால் போராட்டம் கைவிடப்படுவதாக வருமான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சம்பளத்தை 12.6 வீதத்தினால் உயர்த்துவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

எதிர்வரும் 2024ம் ஆண்டு வரையில் இவ்வாறு சம்பள அதிகரிப்பு அமுல்படுத்தப்பட உள்ளது.

இதன்படி, இன்று முற்பகல் முதல் கனடிய வருமான முகவர் நிறுவன பணியாளர்கள் கடமைக்குத் திரும்புவார்கள் என தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

சுமார் இரண்டு வாரங்களாக வருமான முகவர் நிறுவன பணியாளர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## கனடாவில் கடுமையான வெப்பநிலை குறித்து அறிவிப்பு!

மே 04, 2023

கனடாவின் வடக்கு பகுதியில் கடுமையான வெப்பநிலை நிலவும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வழமையாக ஆண்டின் இந்தக் காலப் பகுதியில் நிலவும் வெப்பநிலையை விடவும் கூடுதல் அளவில் வெப்பநிலை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளின் வெப்பநிலை தொடர்பிலான பதிவுகள் இந்த மாதம் மாற்றமடையும் என தெரிவிக்கப்படுகின்றது.

சில இடங்களில் நூறாண்டுகள் இல்லாத அளவிற்கு கூடுதல் வெப்பநிலை பதிவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் அமுத்தம் காரணமாக பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பர்ட்டா, சஸ்கட்ச்வான், மானிடோபா, வடமேற்கு பகுதிகள் என்பனவற்றில் கடுமையான வெப்பநிலை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு அல்பர்ட்டாவில் கடுமையான வெப்பநிலை தொடர்பில் கனடிய சுற்றாடல் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, ஒன்றாரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் வழமையை விடவும் குறைந்தளவு வெப்பநிலை நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில் கட்டுத்தீயினால் சுமார் 30,000 பேர் இடம்!

மே 08, 2023

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில் சுமார் 30000 பேர் வரையில் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுத் தீ காரணமாக இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த வாரம் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக இவ்வாறு பெருமளவிலான மக்கள் இடம்பெயர நேரிட்டுள்ளது.



உலங்கு வானூர்திகளின் உதவியுடனும், தீயணைப்புப் படையினரின் உதவியுடனும் தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாணத்தின் வடக்கு பகுதியில் தொடர்ந்தும் கட்டுத்தீ பரவுகை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



மாகாணத்தில் மொத்தமாக 108 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் இதில் 31 இடங்களில் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுத் தீ காரணமாக ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரையில் மதிப்பீடு செய்யப்படவில்லை.

# கனடாவின் பல நகரங்களில் அதிகரித்த சராசரி வாடகை கட்டணம்!

மே 11. 2023

கனடாவின் மிக பிரபலமான 15 நகரங்களில் இந்த ஆண்டு பிறந்ததில் இருந்து ஒவ்வொரு மாதமும் வாடகை கட்டணம் அதிகரித்தே வருவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

கனடாவில் குடியிருப்புகளின் தேவை அதிகரித்துள்ள நிலையில், பற்றாக்குறை மிகுந்து காணப்படுவதாகவே கூறுகின்றனர். இதனாலையே பெரும்பாலான பிரபல நகரங்களில் வாடகை கட்டணமானது உயர்வதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வான்கூவர் நாட்டின் வாடகை கட்டணத்தை பொறுத்தமட்டில் உச்சத்தில் இருக்கும் நகரமாக வான்கூவர் உள்ளது. இங்கு ஒரு படுக்கையறை உயர் மாடிக் குடியிருப்புக்கு சராசரி மாத வாடகை $2,600 மற்றும் இரண்டு படுக்கையறைக்கு $3,800.

கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் ஒரு படுக்கையறை உயர் மாடி குடியிருப்புக்கு மாத வாடகை 18.2 சதவீதம் அதிகரித்துள்ளது. ரொறன்ரோ வாடகை கட்டண உயர்வில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

ஒரு படுக்கையறை உயர் மாடிக்குடியிருப்புக்கு சராசரி மாத வாடகை $2,400 மற்றும் இரண்டு படுக்கையறைக்கு $3,090 என தெரியவந்துள்ளது. ரொறன்ரோவில் கடந்த ஆண்டினை ஒப்பிடுகையில் சராசரியாக 20 சதவீதம் அளவுக்கு வாடகை கட்டணம் அதிகரித்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் பர்னபி பகுதியில், கடந்த ஆண்டை விட 14.1 சதவீதம் அதிகரித்து, ஒரு படுக்கையறை உயர் மாடிக் குடியிருப்புக்கு சராசரி மாத வாடகை $2,350 மற்றும் இரண்டு படுக்கையறைக்கு $3,000 என தெரிவிக்கின்றனர்.

மேலும் விக்டோரியா மற்றும் Kitchener பகுதிகளில் ஒரு படுக்கையறை உயர் மாடிக்குடியிருப்புக்கு சராசரி மாத வாடகை



$2,000 மற்றும் 1,880 டொலர் எனவும் இரண்டு படுக்கையறைக்கு $2,500 மற்றும் $2,250 என ஆய்வில் தெரியவந்துள்ளது.

# ஒட்டாவா நகர் அருகில் பொலிசார் மீது துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி!

மே 11, 2023

ஒட்டாவா நகருக்கு கிழக்கே குடியிருப்பு ஒன்றில் இருந்து முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் ஒன்ராறியோ பிராந்திய பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த சம்பவத்தில் மேலும் இரு பொலிசார் காயங்களுடன் தப்பியதாகவும் கூறப்படுகிறது. புதன்கிழமை நள்ளிரவு சுமார் 2 மணியளவில் போர்கெட் கிராமத்திலேயே தொடர்புடைய துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் ஒன்ராறியோ பிராந்திய பொலிசார் தெரிவிக்கையில், லாவல் தெருவில் உள்ள ஒரு வீட்டில், துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதாக யாரோ ஒருவர் புகார் அளித்த நிலையில், அதிகாரிகள் தொடர்புடைய பகுதிக்கு அழைக்கப்பட்டனர்.

இதனையடுத்து மூன்று அதிகாரிகள் சம்பவயிடத்திற்கு விரைந்துள்ளனர். ஆனால் அந்த பொலிசார் மூவர் மீதும் துப்பாக்கியால் தாக்கியுள்ளனர். மூவரும் ஒட்டாவா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ள நிலையில், எஞ்சிய இருவரும் குணமடைந்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் ஒருவர் கைதாகியுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கனடாவில் பறவைக் காய்ச்சல் காரணமாக 1 மில்லியனுக்கு மேல் பறவைகள் பலி!

மே 14, 2023

கியூபக்கில் பறவை காய்ச்சல் காரணமாக பலியான பறவைகளின் எண்ணிக்கை ஒரு மில்லியன் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு முதல் இந்த ஆண்டு இதுவரை காலம் வரையில் சுமார் ஒரு மில்லியன் பறவைகள் உயிரினம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நோய் காரணமாகவும் நோய் தற்று பரவுகை காரணமாக கொல்லப்பட்ட பறவைகள் என்பவற்றின் மொத்த எண்ணிக்கை இவ்வாறு ஒரு மில்லியனை கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனேகமான பறவை பண்ணைகள் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்னெடுத்து வந்த போதிலும் பறவை காய்ச்சல் தொற்று பரவுகை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத்தின் சுமார் 20 இடங்களில் தொடர்ந்தும் பறவை காய்ச்சல் அபாயம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கியூபெக் மாகாணத்திற்கு அடுத்தபடியாக ஆல்பர்ட்டாவில் கூடுதல் எண்ணிக்கையில் பறவை காய்ச்சல் பரவியுள்ளது.

பறவைக் காய்ச்சல் நோய் காரணமாக பண்ணையாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கியே வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது



# கனடாவில் வீடற்றவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரிப்பு!

மே 14, 2023

கனடாவில் வீடற்றவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்நாட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

மேலும், வீடற்றவர்களுக்கு உதவும் பணியாளர் தொகையும் சடுதியான அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது.

2021ம் ஆண்டுடன் நிறைவடைந்து ஐந்தாண்டு காலப் பகுதியில் வீடற்றவர்களுக்கு உதவும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பணியாளர் எண்ணிக்கை சுமார் 60 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

வீடற்றவர்களுக்கு உதவிகளை வழங்கும் அதிகமான பணியாளர்கள் பெரும் நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



வீடற்றவர்களுக்கு உதவும் பணிகளில் ஈடுபட்டு வரும் பணியாளர்களும் வறுமை நிலையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



# அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கத்தின் ஊடக அறிக்கை!

மே 11, 2023

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் கீழ் கடந்த பத்தாண்டுகளாக வழங்கப்பட்டுவந்த முதுகலை “அனைத்துலக தொடர்புகள்” (M.A. International Relations) எனும் பாடப்பிரிவு வரும் 2023-24 ஆம் கல்வியாண்டு முதல் மூடப்படுவதாக பல்கலைக்கழகம் அறிவித்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. அரசியல் அறிவியல் துறையின் தலைவரும் பேராசிரியருமான உமா மகேஸ்வரி அவர்கள் தீடீரென அனைத்துலக தொடர்புகள் எனும் பாடப்பிரிவினை மூட வேண்டும் என பல்கலைக்கழகத்திற்கு கோரிக்கை வைத்ததாக தெரிகிறது. இதை பரிசீலித்த பல்கலைக்கழக நிர்வாகம் இவ்வாண்டு முதல் அனைத்துலக தொடர்புகள் எனும் பாடப்பிரிவினை மூட அனுமதித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆண்டுக்கு 150 மாணவர்களுக்கு மேல் விண்ணப்பித்து அதில் 20 மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழகம் இடமளித்து வந்தது. தனியார் பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் இதே பாடப்பிரிவினை ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டு பயில வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் நிலையில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஆண்டுக்கு ரூ.4000/-- ல் இப்படிப்பை பயில முடியும். பல்கலைக்கழக நிர்வாகம் இப்பிரிவை எவ்வித முன்னறிவிப்புமின்றி மூடுவது என்பது மாணவர்களின் எதிர்காலத்திற்கு பெரும் கேடாக அமைவதோடு, பல்கலைக்கழகத்தில் இருக்கும் பாடப்பிரிவுகளை கொஞ்சம் கொஞ்சமாக மூடிவிட்டு முழுவதும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு தாரைவார்க்க செய்யும் சதித்திட்டமும் இருப்பதாக தெரிகிறது. முதுகலை அனைத்துலக தொடர்புகள் எனும் பாடப்பிரிவை நிரந்தரமாக மூடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கம் 11.05.2023 (வியாழக்கிழமை) அன்று மதியம் 2.30 மணியளவில் சென்னைப் பல்கலைக்கழக சேப்பாக்கம் வளாகத்தில் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளது. ஊடக நண்பர்கள் பல்கலைக் கழகத்தின் இந்த முடிவுக்கு எதிரான போராட்டத்தை மக்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டும் என்று விரும்புகிறோம். நன்றி!

இவண்,
கார்த்திகேயன்,
செயலாளர்,
அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கம் ,



**பத்திரிகை செய்தி!**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் கீழ் கடந்த பத்தாண்டுகளாக வழங்கப்பட்டுவந்த முதுகலை 'அனைத்துலக தொடர்புகள்' (M.A. International Relations) எனும் பாடப்பிரிவு வரும் 2023-24 ஆம் கல்வியாண்டு முதல் மூடப்படுவதாக பல்கலைக்கழகம் அறிவித்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. அரசியல் அறிவியல் துறையின் தலைவரும் பேராசிரியருமான உமா மகேஸ்வரி அவர்கள் தீடீரென அனைத்துலக தொடர்புகள் எனும் பாடப்பிரிவினை மூட வேண்டும் என பல்கலைக்கழகத்திற்கு கோரிக்கை வைத்ததாக தெரிகிறது. இதை பரிசீலித்த பல்கலைக்கழக நிர்வாகம் இவ்வாண்டு முதல் அனைத்துலக தொடர்புகள் எனும் பாடப்பிரிவினை மூட அனுமதித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆண்டுக்கு 150 மாணவர்களுக்கு மேல் விண்ணப்பித்து அதில் 20 மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழகம் இடமளித்து வந்தது. தனியார் பல்கலைக்கழகம் அல்லது கல்லூரியில் இதே பாடப்பிரிவினை ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டு பயில வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் நிலையில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஆண்டுக்கு ரூ.4000/- -ல் இப்படிப்பை பயில முடியும். பல்கலைக்கழக நிர்வாகம் இப்பிரிவை எவ்வித முன்னறிவிப்புமின்றி மூடுவது என்பது மாணவர்களின் எதிர்காலத்திற்கு பெரும் கேடாக அமைவதோடு, பல்கலைக்கழகத்தில் இருக்கும் பாடப்பிரிவுகளை கொஞ்சம் கொஞ்சமாக மூடிவிட்டு முழுவதும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு தாரைவார்க்க செய்யும் சதித்திட்டமும் இருப்பதாக தெரிகிறது. முதுகலை அனைத்துலக தொடர்புகள் எனும் பாடப்பிரிவை நிரந்தரமாக மூடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கம் 11.05.2023 (வியாழக்கிழமை) அன்று மதியம் 2.30 மணியளவில் சென்னைப் பல்கலைக்கழக சேப்பாக்கம் வளாகத்தில் போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளது. ஊடக நண்பர்கள் பல்கலைக்கழகத்தின் இந்த முடிவுக்கு எதிரான போராட்டத்தை மக்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டும் என்று விரும்புகிறோம். நன்றி!

**இவண்**
கார்த்திகேயன்,
செயலாளர்,
அனைத்து தமிழ்நாடு மாணவர் சங்கம் ,
தொடர்புக்கு: +91 95005 55321/ +91 80150 00662.









# மணிப்பூரில் கலவரம் – 40 தமிழ்க் குடும்பங்களின் வீடுகள், கடைகள் எரிப்பு! தமிழக முதல்வருக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்

மே 05, 2023

மணிப்பூர் மாநிலத்தில் மூண்டு எழுந்துள்ள கலவரத்தில் 40க்கும் மேற்பட்ட தமிழர் குடும்பங்களின் வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை அங்குள்ள தமிழர்கள் எனக்குத் தெரிவித்துள்ளனர்.

மணிப்பூரில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. அங்கு வாழும் தமிழ்க் குடும்பங்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்கள் இழப்பீடு பெறவுமான அவசர நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.



# முல்லைத்தீவைச் சேர்ந்த 10 பேர் தமிழ்நாட்டில் அகதிகளாக சென்றனர்!

மே 08. 2023

முல்லைத்தீவைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் உட்பட பத்து ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு சென்றுள்ளனர்.

தனுஷ்கோடியை கப்பலில் சென்றடைந்ததாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

பின்னர் இந்திய கடலோர பொலிஸார் விசாரணைக்காக இலங்கையர்களை மண்டபம் நிலையத்திற்கு அழைத்து சென் றுள்ளனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த 10 பேர் பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் புதிய உச் சத்தைத் தொட்டதைத் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந் துள்ளது.

தங்களுக்கு முறையாக வேலை கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகளின் விசாரணையை தொடர்ந்து இலங்கையர்களை மண்டபம் மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைத்தனர்.

கடந்த மாதம் கப்பலில் 5 பேர் தமிழகம் வந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மண்டபம் புனர்வாழ்வு மையத்தில் சுமார் 250க்கும் மேற்பட்ட அகதிகள் தற்போது தங்கியுள்ளனர்.



# உலக செய்திகள்

## ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் அரச அதிபர் மாளிகை மீது டிரோன் தாக்குதல்!

மே 03, 2023

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் புடினின் வதிவிடமான அரச அதிபர் மாளியை இலக்கு வைத்து இரண்டு டிரோன்களால் புதன்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டது.

உக்ரேனிய ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்யா கூறுகிறது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினைக் கொல்லும் நோக்கத்துடன் ட்ரோன் தாக்குதல் நடத்த உக்ரைன் முயற்சித்ததாக ரஷ்யா குற்றம் சாட்டியது,



தாக்குதல் நடத்தப்பட்ட நேரத்தில் அங்கு ரஷ்ய அதிபர் புடின் இருக்கவில்லை அத்துடன் கிரெம்ளினுக்கு எந்த பொருள் சேதமும் இல்லை என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிரெம்ளினுக்கு எந்த பொருள் சேதமும் இல்லை என்று ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிரெம்ளின் இந்த நடவடிக்கைகளை திட்டமிட்ட பயங்கரவாத செயல் என்றும், வெற்றி தினமான மே 9 அணிவகுப்புக்கு முன்னதாக ஜனாதிபதியை படுகொலை செய்யும் முயற்சி என்றும் மதிப்பிட்டுள்ளது.

இத்தாக்குதலை தொடர்ந்து புடினின் நாளாந்த வேலைகளில் எந்தவொரு மாற்றங்களும் இருக்காது. அவை வழமை போன்று இருக்கும் என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

உக்ரைனின் இத்தாக்குதல் அச்சுறுத்தல்களுக்கு மத்தியல் உறுதியளித்தது போல் இரண்டாம் உலகப்போரின் வெற்றி விழா அணிவகுப்பு நடைபெறும் என ரஷ்யா அறிவித்துள்ளது.

முன்னாள் ரஷ்ய அதிபர் டிமிட்ரி மெட்வெடேவ் உக்ரைன் அதிபரை ஜெலென்ஸ்கியை அகற்ற அழைப்பு விடுத்தார்.

அத்துடன் கிய்வ் பயங்கரவாத ஆட்சியை நிறுத்தும் மற்றும் அழிக்கும் திறன் கொண்ட ஆயுதங்களைப் பயன்படுத்த நாங்கள் கோருவோம் என்று ரஷ்ய டுமா மற்றும் புட்டின் கூட்டாளியின் பேச்சாளர் வியாசெஸ்லாவ் வோலோடின் கூறினார்.

மாஸ்கோவில் உள்ள கிரெம்ளின் மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் தனது நாட்டிற்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி மறுத்துள்ளார்.

இது புடினின் உயிரை கொல்லும் முயற்சி என்று ரஷ்யா முத்திரை குத்தியுள்ளது.

ஃபின்லாந்தின் தலைநகர் ஹெல்சின்கியில் புதன்கிழமை அவர் நோர்டிக் தலைவர்களை சந்தித்தபோது, ஜெலென்ஸ்கி நாங்கள் புடினைத் தாக்கவில்லை என்றார்.

நாங்கள் புட்டினை நீதிமன்றத்திடம் விட்டுவிடுகிறோம். நாங்கள் எங்கள் பிரதேசத்தில் போராடுகிறோம். நாங்கள் எங்கள் கிராமங்களையும் எங்கள் நகரங்களையும் பாதுகாக்கிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

நாங்கள் புடினையோ அல்லது மாஸ்கோவையோ தாக்கவில்லை. அதற்கு போதுமான ஆயுதங்கள் எங்களிடம் இல்லை என்றார்.

உக்ரைனின் இத்தாக்குதலுக்கு கண்டித்த ரஷ்யா பதிலடி கொடுப்பதாக உறுதியளித்தது.

## மன்னர் சார்லஸின் கிரீடம் மற்றும் செங்கோலில் உள்ள வைரங்களைத் திரும்பித் தருமாறு தென்னாபிரிக்கர்கள் கோரிக்கை!

மே 04, 2023

பிரித்தானியா அரச செங்கோலில் இருக்கும் உலகின் மிகப்பெரிய வைரத்தை திருப்பித் தருமாறு தென்னாப்பிரிக்கர்கள் சிலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

530 காரட் எடை கொண்ட இந்த வைரம் 1905 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த அந்நாட்டின் காலனித்துவ அரசாங்கத்தால் பிரித்தானிய முடியாட்சிக்கு வழங்கப்பட்டது.

அதிகாரப்பூர்வமாக கல்லினன் ஐ என்று அழைக்கப்படும், பிரித்தானியா செங்கோலில் உள்ள வைரமானது, பிரிட்டோரியாவிற்கு அருகில் வெட்டப்பட்ட 3,100 காரட் கல்லான கல்லினன் வைரத்திலிருந்து வெட்டப்பட்டது.

அதே கல்லில் இருந்து வெட்டப்பட்ட ஒரு சிறிய வைரம், குல்லினன் II என அழைக்கப்படுகிறது, இது இம்பீரியல் ஸ்டேட் கிரீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது, இது பிரிட்டிஷ் மன்னர்களால் சடங்கு சந்தர்ப்பங்களில் அணியப்படுகிறது. செங்கோலுடன், இது லண்டன் கோபுரத்தில் மற்ற கிரீட நகைகளுடன் வைக்கப்பட்டுள்ளது.



இந்த வைரம் எதிர்வரும் சனிக்கிழமையன்று மன்னர் சார்லஸ் III தனது முடிசூட்டு விழாவில் வைத்திருக்கும் அரச செங்கோலில் அமைக்கப்பட்டுள்ளது.

காலனித்துவ காலத்தில் கொள்ளையடிக்கப்பட்ட கலைப் படைப்புகள் மற்றும் கலைப்பொருட்கள் திரும்பப் பெறுவது பற்றிய உலகளாவிய உரையாடலின் மத்தியில், சில தென்னாப்பிரிக்கர்கள் வைரத்தை மீண்டும் கொண்டு வர அழைப்பு விடுத்துள்ளனர்.

வைரம் தென்னாப்பிரிக்காவுக்கு வர வேண்டும். இது நமது பெருமை, நமது பாரம்பரியம் மற்றும் நமது கலாச்சாரத்தின் அடையாளமாக இருக்க வேண்டும்," என்று ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள ஒரு வழக்கறிஞரும் ஆர்வலருமான மோதுசி கமங்கா கூறினார்.

அவர் வைரத்தை திரும்பப் பெறுவதற்காக சுமார் 8,000 கையொப்பங்களைச் சேகரித்த ஆன்லைன் மனுவை ஊக்குவித்தார்.

பொதுவாக ஆப்பிரிக்க மக்கள் காலனித்துவத்தை நீக்குவது என்பது மக்களுக்கு சில சுதந்திரங்களை அனுமதிப்பது மட்டுமல்ல, எங்களிடமிருந்து பறிக்கப்பட்டதை திரும்பப் பெறுவதும் கூட என்பதை உணர ஆரம்பித்துவிட்டனர் என்று நான் நினைக்கிறேன் என்றார்.

கேப் டவுன் டயமண்ட் மியூசியத்தில் ஒரு மனிதனின் முஷ்டி அளவுள்ள முழு கல்லினன் வைரத்தின் பிரதியும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

# சர்வதேச மாநாடு ஒன்றில் ரஷ்ய உக்ரைன் எம்.பிக்களிடையே கைகலப்பு!

மே 04. 2023

துருக்கி நாட்டில் இடம்பெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் ரஷ்ய மற்றும் உக்ரைன் பிரதிநிதிகள் இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கருங்கடல் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் (PABSEC) நாடாளுமன்றப் பிரதிநிதிகள் மாநாட்டில் இடம்பெற்றது.

குறித்த மாநாட்டின் ஆரம்ப நாளான நேற்றைய தினம் (04-05-2023) ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினரான ஒல்கா திமோபீவா நேர்காணல் ஒன்றில் பங்குபற்றிய போது, அவருக்குப் பின்னால் உக்ரைன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒலெக்ஸாண்டர் மரிகோவிஸ்கி, உக்ரைன் தேசியக் கொடியை விரித்துப் பிடித்தார்.

இதையடுத்து ஒலெக்ஸாண்டர் மரிகோவிஸ்கியின் கையிலிருந்து உக்ரைன் கொடியை மற்றொரு ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினரான வெலேறி ஸ்டாவிட்ஸ்கி பறித்தார்.

அதன்பின் இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதன் போது இவ்விருவரையும் அங்கிருந்தவர்கள் பிரித்தனர்.



மேலும் ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டாவிட்ஸ்கி, மருத்துவ சோதனைக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

# இங்கிலாந்து மன்னர் சார்லஸ்சின் முடிசூட்டு விழா!

மே 06, 2023

இங்கிலாந்தை 70 ஆண்டுக்காலம் ஆட்சி செய்து வந்த ராணி 2-ம் எலிசபெத், கடந்த ஆண்டு செப்டம்பர் 8-ந் திகதி தன்னுடைய 96 வயதில் காலமானார்.



அவரின் மறைவுக்கு பின்னர் ராணி 2-ம் எலிசபெத்தின் மூத்த மகனும், இளவரசருமான சார்லஸ் இங்கிலாந்தின் மன்னரானார். அவர் 3-ம் சார்லஸ் என்று அழைக்கப் படுகிறார்.

மன்னராக சார்லஸ் அரியனை ஏறியபோதும், அவருக்கான அதிகாரப்பூர்வ முடிசூட்டு விழா நடைபெறாமலேயே இருந்து வந்தது. இந்த நிலையில் இன்று சட்டபூர்வமாக அவர் மன்னராக முடிசூட்டிக்கொள்ளவுள்ளார்.

முடிசூட்டு விழாவிற்காக பக்கிங்காம் அரண்மனையில் இருந்து சார்லஸ் மற்றும் அவரது மனைவி கமீலா ஆகியோர் குதிரைகள் பூட்டப்பட்ட மிகச் சிறிய தங்க ரதத்தில் வெஸ்ட்மின்ஸ்டர் அபேவுக்கு சென்று அங்கு மத சடங்குகளின் பின்னர் 3-ம் சார்லஸ் மன்னராக முடிசூட்டினார்.



அதேவேளை இளவரசர் ஹாரி தனது தந்தையின் முடிசூட்டு விழாவிற்கு வந்துள்ளார். அதுமட்டுமல்லாது கமிலாவின் மகன் டாம் பார்க்கர்-பவுல்ஸ் மற்றும் மகள் லாரா லோப்ஸ் மற்றும் அவர்களது தந்தை மற்றும் கமிலாவின் முன்னாள் கணவர் ஆண்ட்ரூ ஆகியோர் அபேவிற்குள் சென்றுள்ளனர்.

# பிரிட்டனில் முடியாட்சி எதிர்ப்பு குழுவின் தலைவர் கைது!

மே 06, 2023

பிரிட்டனில் முடியாட்சியை எதிர்க்கும் குழுவின் தலைவர்கைது செய்யப்பட்டுள்ளார். இன்று இடம்பெறவுள்ள முடிசூட்டும் நிகழ்விற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னர் சார்ல்ஸின் ஊர்வலபாதையில் ஆர்ப்பாட்டம் செய்த நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். ரிப்பப்ளிக்கின் தலைமை நிறைவேற்று அதிகாரி கிரஹாம் ஸ்மித் டிரபல்ஹார் , முடிசூட்டும் நிகழ்வு பிரதானமாக இடம்பெறும் டிரபல்கர் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டங்களிற்காக குளிர்பானங்கள் பதாகைகளை சேகரித்துக்கொண்டிருந்தவேளை பொலிஸார் அவரை கைதுசெய்துள்ளனர்.

வான் ஒன்றின் பின்னால் நூற்றுக்கணக்கான பதாகைகளுடன் நடந்துசென்றுகொண்டிருந்தவேளை ஸ்மித் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே இன்றைய தினத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை சகித்துக்கொள்ளப்போவதில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை டிரபல்கர் சதுக்கத்தில் மஞ்சள் டீசேர் அணிந்தவாறு வெள்ளை கொடிகளை ஏந்தியவாறு நூற்றுக்கும்மேற்பட்ட முடியாட்சி எதிர்பாளர்கள் காணப்படுகின்றனர்.



# அகம் அனைத்துலக நிறுவன தொடக்க விழா!

மே 05, 2023

அகம் சர்வதேச நிறுவனம்
Akam International Foundation

05.05.2023 அன்று அகம் அனைத்துலக நிறுவன தொடக்க விழா, தென் கிழக்கு லண்டன் புறொம்பிளியில் (South East London, Bromley, UK) மிகச்சிறப்பாக ஆரம்பமானது.

மங்கள விளக்கினை 1970ல் தமிழ்மாணவர் பேரவை ஆரம்பித்தவர்களில் முக்கியமான ஒருவரான திரு பொன்னுத்துரை சத்தியசீலன் அவர்களும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு சிவாஜிலிங்கம் அவர்களும் மற்றும் அகம் அனைத்துலக நிறுவன சுவிஸ் செயற்பாட்டாளர், நெதர்லாந்து செயற்பாட்டாளர்களும் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து பிரித்தானியக் கொடி, தமிழீழ தேசியக்கொடி மற்றும் அகம் அனைத்துலக நிறுவனக் கொடி ஏற்றலுடன் நகிழ்வுகள் ஆரம்பமானது.

அகம் அனைத்துலக நிறுவன பொறுப்பாளர் திரு பாபு கொள்கையுரை ஆற்றினார்.

அதில் “அனைவரும் ஒன்றிணைந்து எமது அரசியல் தீர்வுக்கான சாணக்கிய பொறி முறைகளை வலுப்படுத்தி எமது இலட்சியத்தை வென்றெடுக்க ஒன்றுபடல் வேண்டும் எனவும், இந்நன்னாளில் தேசியத்தோடு நிற்கும் அனைத்து மக்களையும், அமைப்புக்களையும் அகம் நேசக்கரம் நீட்டி வரவேற்பதுடன் “நான் பெரிது நீ பெரிது என்றில்லாமல்” நாங்கள் எல்லோரும் இணைந்து எமது இலட்சியத்தை வென்றெடுப்போம் என்றும், அகத்தின் மிக முக்கியமான விடயமாக இளையோரை உள்வாங்குதல் அமையும் என்றும், அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும், பயிற்சிகளையும் வழங்கி அவர்களின் நுட்ப அறிவையும் கொண்டு அவர்களை வருங்கால தலைவர்கள் ஆக்குவதற்கான அனைத்து வழிகளையும் மேற்கொள்ளும் என்றும் குறிப்பிட்டார்.

சிறப்புரை திரு ச.வி. கிருபாகரன் - பொதுச்செயலாளர் தமிழர் மனித உரிமை மையம், பிரான்ஸ் அவர்களால் வழங்கப்பட்டது. அவர் அகம் நிறுவனத்தின் அவசியத்தை உணர்ந்துகொண்டு உரையாற்றினார். அதில் அகத்தின் தற்போதைய தேவைகள் மற்றும் எதிர்கால செயல்த் திட்டங்கள் சம்பந்தமாகவும் அத்துடன் தற்கால அரசியல் சூழல் சம்பந்தமாகவும் உரையாற்றி இருந்தார்.




அரங்க நிகழ்வாக தயாகப்பாடல்கள், நடனம், கவிதை மற்றும் தமிழர் பாரம்பரியக் கலையான சிலம்பம் ஆகியன இடம்பெற்றன.

சரியான நேரத்திற்கு ஆரம்பமாகி நேர்த்தியாக நிகழ்ச்சிகள் நடைபெற்றதையிட்டு கலந்து கொண்ட பலரும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இறுதியாக கொடியேந்தல் நிகழ்வுடன் அகம் சர்வதேச நிறுவனத்தின் தொடக்க விழா இனிதே நிறைவேறியது.

















# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....**

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**



எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



LILAND INSURANCE INC.

## LIFE INSURANCE

Mortgage Insurance Line of Credit Insurance

- Life Insurance (Whole / Term) ஆயுள் காப்புறுதி
- Non-Medical Up to Age 85 வயது வரை மருத்துவ பரிசோதனை அற்ற
- Critical Illness Insurance with 100% Cash back கொடிய நோய்களுக்கான காப்புறுதி கட்டிய பணம் முழுவதும் மீள பெற முடியும்

**20 வருடம் மட்டும் பணம் செலுத்தும் காப்புறுதி**

இருபது வருடங்களுக்கு பின் பணம் கட்ட வேண்டியதில்லை. ஆனால் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும். இருபது வருடங்களுக்கு பின் விரும்பினால் காசு பெறுமதியை **Cash Back Value** பெறமுடியும்.

**Living Benefits / Income Replacement**

- If you get sick, accident or soft tissue injury
- For Self-Employed
- For Business People if you don't have benefits
- 2 years, 5 years up to Age 70 (Long Term Disability) Claim எடுக்காவிட்டால் 50% பணம் மீள பெறமுடியும்

**Super Visa, RRSP Loan, RESP (Education)**

கொடிய நோய்களுக்கான காப்புறுதி (Critical Illness) for 25 Sickness நோய் வராத பட்சத்தில் கட்டிய பணம் முழுக்க மீளப்பெற முடியும்.

(24 Yrs Experience)

**INCOME TAX**

E-FILING Tax

REFUND within 10 Days

- ★ Accounting
- ★ Bookkeeping
- ★ Payroll - HST
- ★ New Business Registration



இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

**Philip Chandran**
Liland Insurance
**416-450-9043**
philipsam0715@hotmail.com

வருமான வரித்திணைக்களத்திற்கு நேரடியாக வருமான வரிப்படிவங்களை அனுப்புதல்.

உங்கள் வருமானவரி மீளளிப்புப் பணத்தை 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளல்.

*INSURANCE IS LIKE YOUR MUM AND DAD*


வன்னிச் சங்கம் - ஒன்ராரியோ, கனடா.

## VUnited Care for Kids Inc.

Organization – Reg # 1913383. Charitable Organization.

Head office address: 8-3500 McNicoll Ave, Toronto (ONT), M1V4C7.

Secretary@vcarekids.org info@vcarekids.com 416-644-1113.

President:
Mr. Sivakumaran Ratnasingam

Vice President:
Mr. Ganeshalingam Veluppillai.

Secretary:
Mr. Sivasuthan Ponnaiah.

Vice Secretary:
Mr. Niththiyanantham Balasingam

Treasurer:
Mr. Vijayakumar Kumarasingam.

Board Members:
Mr. Kalanathan Sellaiah
Mr. Ratnakaran Sivapatham
Mr. Santhirasegaram Sivasithampar
Mr. Nirojan Navaratnam.
Mr. Tamilcelvan Kanapathipillai.
Mr. Sivaruban Mahalingam.
Mr. Ashokkumar Velautham.
Mr. Karunainathan Murugesu.
Mr. Gunabalasingam Balasingam.
Mr. Punniasingam Subramaniyam.
Mr. Rajeswaran Sabaratnam.
Mr. Uthayakumar Kumarasingam.
Mr. Piratheepan Tharmarajah.
Mr. Kanagaradanam Rasaiah.
Mr. Nevethanan Ganesanathan.
Mr. Mahenthirarajah Suppaiah.

Internal Auditors:
Mrs. P. Punithawathy
Mr. K. Ampalavanar.

26-4-2023.

அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்,
V United Care For Kids Inc Ontario (வன்னிச் சங்கம்).

அன்புடையீர்!

### பொதுச்சபைக் கூட்டம், General Meeting- 2023.

V United Care For Kids Inc Ontario அமைப்பினது வருடாந்த பொதுக் கூட்டமானது எதிர்வரும் வைகாசி மாதம் 27ந் திகதி 2023ம் ஆண்டு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அங்கீரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது சமூகந் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 635 Middlefield Rd, Scarborough (ONT). காலம்: வைகாசி 27, 2023. பிற்பகல் 1.00 மணி (சனிக்கிழமை).

The Annual General Meeting of V United Care For Kids Inc Ontario is scheduled to be held on the 27th of May in the year 2023. All authorized members of the General Assembly are therefore requested to attend this meeting.

Location: 635 Middlefield Rd, Scarborough (ONT). Date: May 27, 2023, 1.00 PM (Saturday).

Thank you.

### நிகழ்ச்சிநிரல். Agenda.

1. மௌன வணக்கம். Silent salutation.
2. தலைவர் உரை. Chairman's Speech.
3. செயலாளர் அறிக்கையும், செயற்திட்ட அறிக்கையும். Secretary's Report and Project Report.
4. பொருளாளர் அறிக்கை. Treasurer's Report.
5. சமர்ப்பிக்கப்பட்டஉபவிதித் திருத்தங்கள். Amemdments to the bill submitted.
6. இயக்குனர்சபை உறுப்பினருக்கான தேர்வு. Selection for a member of the Board of Directors.
7. பிறவிடயங்கள். Other matters.
8. கூட்ட நிறைவு. Closure of meeting.

Mr. R. Sivakumaran
President
VUnited Care For Kids Inc On.

Mr. P. Sivasuthan
Secretary
VUnited Care For Kids Inc On.

# துன்பப்படும் மக்களுக்கு சேவை புரிவதே அரசியல்!

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



“அரசியல் என்பது மக்கள்மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவைபுரியும் பணி. மக்களின் நல்வாழ்விற்கு ஆற்றப்படும் தொண்டு. எனவே, அரசியல் வேலை செய்யும் எமது போராளிகள் மக்களுக்குச் சேவை ஆற்றுவதையே இலட்சியமாகக் கொண்டு மக்களின் தொண்டர்களாகப் பணிபுரியவேண்டும்.

எமது இயக்கம் ஒரு விடுதலை இயக்கம். மக்களின் விடிவிற்காகவும் விடுதலைக்காகவும் போராடும் ஒரு புரட்சிகர இயக்கம். நாம் மக்களுக்காகவே எமது உயிரை அர்ப்பணித்துப் போராடுகிறோம். எனவே, நாம் எமது மக்களை நேசிக்கவேண்டும். அவர்களுடன் அன்புறவை வளர்த்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் அரசியல்வாதிகள் அல்லர். நாம் புரட்சிவாதிகள். நாம் பழைய அரசியல் வாதிகள் போல மக்களை அணுகக்கூடாது. மாலைகள் அணிந்து, மேடைகள் மீது முழுங்கி, மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு, மக்களுக்குப் பொய்சொல்லி, மக்களை ஏமாற்றி அந்தக் காலத்து அரசியல் வாதிகள் நாடகமாடினார்கள். நாம் மக்களை வித்தியாசமாக அணுகவேண்டும். மக்களுக்கு உண்மைநிலையை விளக்கவேண்டும், பொய்யான, நடைமுறைச்சாத்தியமற்ற வாக்குறுதிகளை நாம் மக்களுக்கு வழங்கக்கூடாது. எந்தக் கொள்கையின் அடிப்படையில் போராடுகிறோம். நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன என்பதையெல்லாம் நாம் மக்களுக்கு எடுத்து விளக்கவேண்டும். உண்மைநிலையை எடுத்து விளக்கும் பொழுதுதான் மக்கள் எம்மீது நாம்பிக்கை கொள்வார்கள்.

நாம் மக்களை எங்களிடம் வரவழைக்காமல் நாம் மக்களிடம் செல்லவேண்டும். மக்கள் வாழும் சமூக உலகத்தில் நுழைய வேண்டும். கிராமங்களுக்குள் இறங்கி வேலைசெய்யவேண்டும். மக்களுடன் பழகி, மக்களின் பிரச்சினைகளை இனம்கண்டு கொள்ளவேண்டும். அவர்களின் துன்ப துயரங்களைப் பகிர்ந்துகொள்ளவேண்டும். கஷ்ப்படும் மக்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்யவேண்டும். மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் பொழுதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்வார்கள். எமது போராட்டமானது மக்களின் விடிவை நோக்காகக் கொண்டது என்பதை உணரும்பொழுதுதான் மக்கள் எமது போராட்டத்திற்கு பங்களிக்க முன்வருவார்கள்.

சாதாரண ஏழை மக்களின் சமூக வாழ்விற்குள் பிரவேசிக்கும்பொழுது அங்கு ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைக் கண்டுகொள்வீர்கள். மக்கள் தமது பிரச்சினைகளை எடுத்துச்சொல்வார்கள். அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வையும் எதிர்பார்ப்பார்கள். நாம் ஒரு அரசு அல்ல. எம்மிடம் பெரிய அளவில் பொருளாதார வளங்களும் இல்லை. மக்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்த்துவிடும் வல்லமை எம்மிடமில்லை. ஆயினும் எமது வசதிக்கும் வல்லமைக்கும் உட்பட்ட வகையில் நாம் மக்களுக்கு உதவச் சகல முயற்சிகளையும் எடுக்கவேண்டும். மக்களின் அவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் சிறிய வேலைத் திட்டங்களை அமைத்து, மக்களின் ஒத்துழைப்புடன் அவற்றை நாம் செயற்படுத்தவேண்டும். மக்கள் மத்தியில் கூட்டு வாழ்வையும், கூட்டுறவு முயற்சிகளையும் ஊக்குவிக்கும் வகையில் இந்த வேலைத் திட்டங்கள் அமைவது சிறப்பானதாகும். இப்படியான பல வேலைத் திட்டங்களை எமது இயக்கம் ஏற்கனவே செயற்படுத்திவருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பூரணமான அரசயில் தெளிவும் விழிப்புணர்வும் ஒரு போராளிக்கு அவசியமானது. அரசியல் விழிப்புணர்வு மூலம் தான் சுதந்திரப் போராட்ட உணர்வே எழுகிறது. அரசியல் தெளிவும் சுதந்திர உணர்வும் உள்ளவர்களே விடுதலைப் போராளிகள் என்ற தகைமையைப் பெறுகிறார்கள். அரசியல் வேலைசெய்யும் போராளிகளுக்குப் பூரணமான அரசியல் தெளிவு அவசியம். அப்படியான தெளிவு இருந்தால் தான் மக்கள் மத்தியில் அரசியல் பிரச்சார வேலைகள் செய்ய முடியும். நாம் எதற்காகப் போராடுகிறோம், எமது அரசியல் இலட்சியம் என்ன என்பதை எல்லாம் எமது மக்களுக்கு எடுத்து விளக்குவதற்கு ஆழமான அரசியல் அறிவு அத்தியாவசியமானது.

அரசியல்வேலை என்பது வெறும் பிரச்சாரமாக மட்டும் அமைத்துவிடக்கூடாது. ஏனெனில், பெரும்பாலான எமது மக்கள் போராட்டம்பற்றி தெளிவு உள்ளவர்களாகவே இருக்கிறார்கள். முன்பொருகாலம் போராட்டம்பற்றித் தெளிவில்லாத மக்கள் இருந்திருக்காலம். ஆனால் இனறைய நிலை வேறு, இன்று எமது மக்கள் போராட்டத்தின் அவசியம்பற்றி நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனினும் போராட்டத்தின் விளைவுகள் அவர்களை நேரடியாகப்பாதிக்கின்றன. போராட்டத்தின்நிமித்தம் அவர்கள் கஷ்டப்படுகின்றார்கள். பெரும் துன்பத்தைச் சுமந்துவருகிறார்கள். அவர்களை இந்தத் துன்பங்களிலிருந்து மீளச் செய்வதற்கு நாம் முயற்சிக்கவேண்டும். இந்த நோக்கிலேதான் எமது வேலைத்திட்டங்கள் அமையவேண்டும்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் சாவும், அழிவும், துன்பமும் துயரமும் தவிர்க்கமுடியாதவை. பெரிய தியாகங்கள் அர்ப்பணிப்புகள் புரிந்துதான் நாம் எமது விடுதலையை வென்றெடுக்கவேண்டும். சுதந்திரம்பெற்ற மக்களின் வரலாறும் இதுதான். எத்தனை துன்பங்களை எதிர்கொண்ட போதும் எமத மக்களின் மனவுறுதி தளர்ந்துவிடக்கூடாது. நம்பிக்கையீனம் தோன்றிவிடக்கூடாது. மக்களுக்கு உறுதியும் நம்பிக்கையும் ஊட்டும் வகையில் எமது பிரச்சாரங்கள் அமையவேண்டும்.

நாம் ஒரு தேசியப் போராட்டத்தை முன்னெடுத்துவருகிறோம். நாம் வர்க்கப்போராட்டத்தை முன்நடத்தவில்லை. தேசியப் போராட்டம் என்றால் எல்லா வர்க்கத்தினரையும் ஒரே அணியில், ஒரே இலட்சியத்தில் ஒன்றிணைத்து தேசிய விடுதலைக்காகப் போராடுவது என்பதுதான் அர்த்தம். எமது மக்கள் சமுதாயத்தை மூன்று வர்க்கப் பிரிவினராக வகுக்கலாம். ஒன்று வசதிபடைத்த மேற்தட்டு வர்க்கம்,இரண்டுடாவ நடுத்தர வர்க்கம். மூன்றாவது சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைப்பாட்டாளி வர்க்கம்.

தேசியப் போராட்டத்தின் நிமித்தம் எல்லாச் சமூகப் பிரிவினரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. மேற்தட்டு வர்க்கத்தினரும், நடுத்தரவர்க்கத்தினரும் வெவ்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். எனினும் சமூகத்தின் கீழ்மட்டத்திலுள்ள ஊழைமக்களே பெரிய அளவிலான பாதிப்பிற்கு இலக்காகியுள்ளார்கள். வேலையில்லாப் பிரச்சினை இம் மக்கள் மத்தியில் பூதாகாரமாக எழுந்துள்ளது. இம் மக்களின் நாளாந்த வாழ்க்கை ஒரு ஜீவமரணப் போராட்டமாக மாறியுள்ளது, நாம் சகல சமூக மட்டங்களிலுமுள்ள எமது மக்களோடு இணைந்து, அவர்களுக்கு உதவி செய்து அனைவரையும் அணைத்துச்செல்லும் அதேவேளை ஏழை மக்களின் துயரங்களைத் துடைப்பதில் எம்மாலான முழு முயற்சிகளையும் செய்யவேண்டும். வேலையற்று, வறுமைக்கோட்டில் நின்று அல்லல் படும் இம் மக்களுக்கு வேலைவாய்ப்பளித்து, அவர்களின் கூட்டு உழைப்பை ஊக்குவிக்கும் வகையில், எமது வளத்திற்கும் சக்திக்கும் ஏற்ற வகையில் வேலைத் திட்டங்களை அமைத்துக்கொடுக்கவேண்டும்.


மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு, அவர்களின் சுமைகளை நாமும் தாங்கி, அவர்களின் கஷ்டங்களைப்போக்குவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவது தான் உண்மையான அரசியல் வேலை. இந்தப் புரிந்துணர்வுடன்தான் நாம் மக்கள் களத்தில் இறங்கி வேலைசெய்யவேண்டும்.

குறிப்ப: 22.07.1992 அன்று, அரசியல் பயிற்சிப் பள்ளியில், அரசியல் வேலைசெய்யும் போராளிகள் மத்தியில் தலைவர் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகளை இங்கு தருகிறோம்.


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லக்ஷ்மி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# அந்நியப் படை வீரனே!

## (அயர்லாந்து மண்ணில் பிரிட்டிஷ் படை வீரனுக்கு ஒரு கடிதம்)

படை வீரனே!
இங்கு வரவேண்டும் என்று நீ யாரையும் கேட்கவில்லை
அது எங்களுக்குத் தெரியும்.

நீ ஆணைகளுக்கு அடிபணிகிறாய்
அது எங்களுக்குத் தெரியும்.

உனக்கு ஒரு மனைவி
ஒரு காதலி
ஒரு தாய் உண்டு
அது எங்களுக்குத் தெரியும்.
உனக்குக் குழந்தைகள் உண்டு
அதுவும் எங்களுக்குத் தெரியும்.

ஆனால் படை வீரனே!
எங்கு நீ நிற்கிறாயோ
அங்கே உனக்கு மரணம் நிச்சயம்.
எங்கு நீ நடக்கிறாயோ
அங்கே ஏற்படும் உனக்கொரு எரிகின்ற காயம்.
எங்கு நீ உறங்குகிறாயோ
அங்கு உனக்கு அமைதியே இல்லை.
ரத்தவெள்ளத் தீய கனவினூடே
விம்மித் தணிகிறது பூமி.
படை வீரனே!
நீ மடிந்தால்
நாய்கள்தான் உன்னைப் புதைக்கும்.

இந்த மண்ணிற்கு நீ வந்தபோது
புரிந்துகொள்ள வந்ததாகக் கூறினாய் நீ.
படை வீரனே, உனது புரிதல் எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கிறது
ஐரிஷ் மண்ணில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகளும்
கதவுகளை நீங்கள் தட்டுவதும்
தலைகளில் இடிக்கும் துப்பாக்கிக் கட்டையும்
சிறைகளும் விஷவாயுவும்
இருண்ட மூலைகளில் எங்கள் மீது விழும் அடி உதைகளும்
எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கின்றன.

படை வீரனே!
ஐரிஷ் மக்களின் எலும்புகளுக்கு
நீ கொண்டுவரும் சமாதானம்
எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கிறது.
எங்கள் இல்லங்களில் வெடிக்கும் குண்டுகள்
தெருக்களில் குவிந்துவரும் இடிபாடுகள்
நெடுங்கால நண்பர்களின் மரணங்கள்
கண்ணீர்கள், ஈமச்சடங்குகள்
எங்களுக்கு சலிப்பூட்டியுள்ளன.

படை வீரனே!
இந்த மண்ணிற்கு நீ வந்துபோது
புரிந்துகொள்ள வந்ததாகக் கூறினாய்.
இதுதானா உன் புரிதல்?

நாங்கள் இங்கு கனவு காண்கிறோம்.
இந்தப் பூமி எங்கள் பூமி எனக்
கனவு காண்கிறோம்.
கத்தோலிக்கரும் புராடஸ்டண்டுகளும்
ஆத்திகரும் நாத்திகரும்
ஒருநாள் இங்கு கூடி
ஐரிஷ் ஆண்களாய் ஐரிஷ் பெண்களாய்
கனவு காண்பர்.
மரணமே இல்லாத
பசுமையானதொரு பூமியை
இறங்கிவரும் ஒரு நிசப்தத்தை
நாங்கள் கனவு காண்கிறோம்.

இந்தக் கனவை நாங்கள் காண்பதற்கு
படை வீரனே!
நீ வேண்டியதில்லை.
அதுதான் எங்களது புரிதல்.

வீட்டுக்குப் போ படை வீரனே!
நீ இங்கிருப்பது
காற்றை நாசப்படுத்துகிறது.
உனது புன்முறுவல்
எங்களை அலங்கோலப்படுத்துகிறது.
வீட்டுக்குப் போ படை வீரனே!
உன்னைப் பிணமாக நாங்கள்
உன் வீட்டுக்கு அனுப்புவதற்கு முன்.

ஆங்கிலம் மூலம்: பேட்டிரிக் கால்வின்
தமிழில்: எஸ்.வி.ராஜதுரை




KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
FREE EFILE SERVICE
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
www.kevtax.com
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866 / FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


AR GROUP
Arasan
ARASAN RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643





# தமிழரின் தாயகம்: ஒரு வரலாற்று ஆவணம்



இந்திய உபகண்டத்தில் தெற்கே இந்துமா சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவான இலங்கையில், இற்றைக்கு ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் யாழ்ப்பாண அரசு, கோட்டை அரசு, கண்டி அரசு என அழைக்கப்பட்ட மூன்று அரசுகளும் பல வன்னிச் சிற்றரசுகளும் இருந்தன. யாழ்ப்பாண அரசின் கீழும் வன்னிச் சிற்றரசுகளின் கீழும் இருந்த வந்த நிலப்பகுதியான தற்போதைய வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் வடமேற்கு மாகாணத்தின் சில பகுதி களையும் (புத்தளம் மாவட்டம்) உள்ளடக்கியதாக இருந்தது.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கீசரின் வரு கையைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் விளைவாக, இந்த அரசுகள் தமது தனித் துவங்களை இழக்கலாயின. 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் - அதாவது 1597 ஆம் ஆண்டு - சிங்களவரின் இராச்சியமாகிய கோட்டை அரசு போர்த்துக்கீசர் வசமாகியது 1619 ஆம் ஆண்டு, தமிழரின் இராச்சியமாகிய யாழ்ப்பாண அரசு போர்த்துக்கீசரால் கைப்பற்றப்பட்டது. கண்டி அரசுதான் இறுதிவரை போர்த்துக் கீசரால் வெல்லப்பட முடியாத அரசாக இருந்தது. போர்த்துக் கீசரின் ஆட்சிக்காலம் (1505-1658) 1658 ஆம் ஆண்டு டச்சுக்காரரின் வருகையைத் தொடர்ந்து முடிவுற்றது.




படம்: 1

1658 ஆம் ஆண்டு மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிர தேசங்களை போர்த்துக்கீசரிடமிருந்து டச்சுக்காரர் கைப்பற் றினர். போர்த்துக்கீசர், டச்சுக்காரர் ஆகியோர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத் திருந்தபோதிலும் கூட, அவர்கள் தமிழ்ப் பிரதேசங்களையும் சிங்களப் பிரதேசங்களையும் ஒன்றாக இணைக்கவில்லை. டச்சுக்காரர் தமது ஆட்சிக்காலத்தில் தமது ஆதிக்கத்தின் கீழிருந்த இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை மூன்று நீதி மாவட்டங்களாகப் பிரித்தனர்.

1. யாழ்ப்பாண நீதி மாவட்டம்.
2. கொழும்பு நீதி மாவட்டம்.
3. காலி நீதி மாவட்டம்.

இதன்படி தற்போதைய வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழர் பிரதேசங்கள் முழுவதும் யாழ்ப்பாண நீதி மாவட்டம் என்ற பெயரில் ஒரே பிரதேசமாகவே டச்சுக்காரரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது (படம் - 1).

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் டச்சுக்காரரின் ஆட்சிக் காலம் (1658-1796) முடிவடைந்து, ஆங்கிலேயரின் ஆதிக்கம் இத்தீவில் உதயமாகியது. ஆரம்பத்தில் இலங்கைத் தீவின் கரையோரப் பிரதேசங்களே ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்தன.

எனினும் 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைத் தீவு முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டது. இவ்வாறு இலங்கைத் தீவு முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்த ஆங் கிலேய ஆடுசியாளர்கூட, ஆரம்பத்தில் தமிழ்ப் பிரதேசங் களையும் சிங்களப் பிரதேசங்களையும் ஒன்றாக இணைக் கவில்லை. கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் என்பன தனித் தனி நிர்வாகப் பிரிவுகளாக ஒரு பிரதேசத்துடன் இன்னொன்று இணைக்கப்பட்டாமலேயே இருந்தன.

19831 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் போது இலங் கையில் மூன்று நிர்வாகப் பிரதேசங்கள் இருந்தன என்பதனை, அக்குடிசன மதிப்பீட்டுத் தகவல்கள் காட்டுகின்றன. 19831 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டுத் தரவுகளின் சுருக்கம் பின்வருமாறு உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | தமிழர் மாவட்டங்கள் : | 213641 பேர் |
| | (அ) யாழ்ப்பாணம் | 146528 பேர் |
| | (ஆ) திருகோணமலை | 16335 பேர் |
| | (இ) மட்டக்களப்பு | 27574 பேர் |
| | (ஈ) மன்னார் | 20257 பேர் |
| | (உ) நெடுந்தீவு | 02947 பேர் |
| 2. | சிங்கள மாவட்டங்கள் : | 448361 பேர் |
| | (அ) கொழும்பு | 234791 பேர் |
| | (ஆ) காலி | 88242 பேர் |
| | (இ) தங்காலை | 95582 பேர் |
| | (ஈ) சிலாபம் | 29746 பேர் |
| 3. | கண்டிய மாகாணங்கள்: | 288486 பேர் |
| | மொத்தம்: | 950488 |


இதன்படி 1831 ஆம் ஆண்டளவில் இலங்கையில் மூன்று தனி நிர்வாகப் பிரதேசங்கள் இருந்தன என்பதும், தமிழர் பிர தேசங்கள் அனைத்தும் ஒரே பிரதேசமாக இணைந்திருந்தன என்பதும் புலனாகின்றது. 1834 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "சிலோன் கஸெற்றியர்" (Ceylon Gazetteer) என்ற நூலில், தமிழர் பிரதேசங்களும் சிங்களவர் பிரதேசங்களும் தெளிவாக வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**" தமிழர்கள் இலங்கையின் வடக்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் வாழ்கின்றனர். இவர்களது மாவட்டங்கள் குமுக்கன் ஆறு தொடக்கம் யாழ்ப்பாணத்தைச் சுற்றி புத்தளம் வரையில் பரந்துள்ளது."**

(குறிப்பு- குமுக்கன் ஆறு என்பது தற்போதைய கிழக்கு மாகாணத்தினதும் தென்மாகாணத்தினதும் எல்லையில் அமைந்துள்ளது.)

**"சிங்களவர்கள் இலங்கையின் உட்பகுதியில் அமைந்துள்ள மாவட்டங்களிலும் குமுக்கன் ஆறு தொடக்கம் வடக்கே சிலாபம் வரையுள்ள கரையோரப் பிரதேசங்களிலும் வாழ்கின்றனர்."**

1796 ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்ட போதிலும், 1833 ஆம் ஆண்டு வரை தமிழர் பிரதேசங்கள் ஒரு தனி நிர்வாகப் பிரதேசமாகவே இருந்து வந்தது. 1833 ஆம் ஆண்டு போல்றுாக் - கமரன் அரசியல் திட்ட அறிக்கையினைத் தொடர்ந்தே, இலங்கைத்தீவின் மாகாண - மாவட்ட எல்லைகள் ஆங்கிலேய ஆட்சியாளரால் நிர்ணயிக்கப்பட்டவையாகும். சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, வருமான சேகரிப்பு, செலவினைக்




படம்: 2

குறைத்தல் போன்ற நோக்கங்கள் கருதி காலனித்துவ ஆட் சியில் இந்நிர்வாக எல்லைகள் தீர்மானிக்கப்பட்டன.

இவற்றிற்கும் மேலாக கண்டிய மாகாணங்களின் தனித்துவத் தினை அழிப்பதும் ஆங்கிலேய அரசாங்கத்தின் பிரதான


நோக்கமாக இருந்தது. 1818ஆம் ஆண்டுக் கண்டிக் கலவரமும் அதனைத் தொடர்ந்த மக்கள் எழுச்சியும், ஆங்கிலேய ஆட்சி யாளர்களின் மனதில் பாதுகாப்பற்ற உணர்வு ஒன்றினை ஏற் படுத்திற்று. இதனால் கரந்தடிப் போர்முறையில் ஆற்றல் கொண்டிருந்த விடுதலை வீரர்களின் புகலிடமாக இருந்த மத்திய மலைநாட்டை, இலங்கையின் கரையோரப் பிரதேசங் களோடு இணைப்பது என அரசாங்கம் தீர்மானித்தது. இதன் மூலம் கண்டி மாகாணங்களில் காணப்பட்ட விடுதலைப் போராளிகளின் கிராமிய பொரளாதாரத்தினைச் சிதைக்க முடியும் என் ஆங்கிலேய அரசாங்கம் கருதியது.

கோல்புறூக் - கமரன் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைய 01.10.1833 இல், இலங்கையில் ஐந்து மாகாணங்கள் உருவாக்கப்பட்டன (படம் - 2).

1. வடமாகாணம்
2. கிழக்கு மாகாணம்
3. மேல்மாகாணம்
4. தென்மாகாணம்
5. மத்திய மாகாணம்

வடமாகாணம் பின்வரும் பிரதேசங்களை உள்ளடக் கியிருந்தது.

1. யாழ்ப்பாணம்
2. நெடுந்தீவு
3. மன்னார்
4. வன்னி
5. நுவரகலாவிய (அனுராதபுரம்)




படம்: 3

கிழக்கு மாகாணம் பின்வரும் பிரதேசங்களை உள்ளடக் கியிருந்தது.

1. மட்டக்களப்பு
2. திருகோணமலை
3. பிந்தன
4. தமன்கடுவ (பொலநறுவை)

01.09.1873 இல் வடகமாகாணத்திலிருந்த நுவரகலாவிய மாவட்டமும் (தற்போது அநுராதபுரம் மாவட்டம்) கிழக்கு மாகாணத்திலிருந்த தமன்கடுவ மாவட்டமும் (தற்போது பொலநறுவை மாவட்டம்) ஒன்றிணைக்கப்பட்டு, வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்டது. 05.02.1886 இல் ஊவா மாகாணம் உருவாக்கப்பட்டபோது, கிழக்கு மாகாணத் திலிருந்த பிந்தன பிரதேசம் ஊவா மாகாணத்தோடு இதனைத் தொடர்ந்து தற்போதைய வட மாகாண, கிழக்கு மாகாண எல்லைகள் உருவாகின (படம் - 3).

நன்றி: சி. வரதராஜன் (B.A) விடுதலைப்புலிகள் வைகாசி 1994




# அகம் சர்வதேச நிறுவனத்தின் ஊடக அறிக்கை

**அகம் சர்வதேச நிறுவனம்**
Akam International Foundation

05/05/2023

ஊடக அறிக்கை அகம் அனைத்துலக நிறுவன தொடக்க விழா

"அகத்தால் ஒன்றிணைவோம்"

எம் உயிரிலும் மேலான மக்களே வணக்கம். நாம் இன்று முக்கியமான காலத்தில் பலவகை சுமைகளுடன் வாழ்ந்துவருகிறோம். இத்தருணம் அகம் எனும் நிறுவனம் ஒரு முக்கியமான நன்னாளில் தொடங்கப்படுகிறது. இந்த நிறுவனமானது உலகத்தமிழர்களின் பலவித அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும், தமிழ் மக்களின் மொழி, கலை, பண்பாடுகளை பேணிப்பாதுகாக்கும் நோக்கோடும், புலத்தில் இயங்கும் எல்லாவகையான தாயக மக்கள்சார் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களை உள்வாங்கி பெரும் பலத்தோடு உலகப்பரப்பில் பரந்து வாழும் தமிழ் பேசும் மக்களை நோக்கி உலகம் முழுவதும் ஒன்றிணைந்து செயற்படும். அத்துடன் உலகப்பரப்பில் வாழ்ந்து வரும் எம் இளைய சமுதாயத்தினரையும் அகத்தோடு ஒன்றிணைத்து பலம் மிக்க தமிழர் நிறுவனமாக இயங்கும்.

அகம் நிறுவனமானது, தாயகம் மற்றும் அனைத்துலக நாடுகளில் சிறப்பான தமிழர் நிறுவனமாக இயங்கும். அகத்தின் முதன்மையான திட்டங்களாக,

- தாயக மக்களின் அடிப்படை வசதிகள், கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிப்பணிகள் போன்றவற்றை படிப்படியாக சீர்செய்வது.
- புலத்தில் எமது மக்கள் எதிர்நோக்கும் சவால்களைத் தீர்பதற்கு ஆக்கபூர்வமான வழிவகைகளை மேற்கொள்வது.
- உலகலாவிய ரீதியில் தமிழ் இளையோர்களை இணைத்து, அவர்களுக்கான ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்கி அவர்களின் நுட்ப அறிவையும் கொண்டு அவர்களை சிறந்த தலைமைத்துவம் கொண்ட எதிர்கால சிற்பிகளாக உருவாக்குவது.

27 Old Gloucester St, Holborn, London, WC1N 3AX
Email: info@akamfoundation.com
Tel: 02030626600

- சிதறிக்கிடக்கும் எமது தாயக அமைப்புக்களை, ஒரே நோக்கத்தோடு, ஒரே சிந்தனையோடு பயணிக்க வேண்டும் என்பதன் முக்கியத்துவம் பற்றி ஆலோசிப்பது.

அந்தவகையில் **அகம்** என்ற பெயர் சுமந்து தமிழ்மக்களின் அகத்துள் புதைந்து கிடக்கும் உணர்வுகளின் வெளிப்பாடாக "**அகம்**" என்னும் அனைத்துலக நிறுவனம் 05/05/2023 பிரித்தானியாவில் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கவிருக்கும் **அகம்** நிறுவனமானது, பிரித்தானிய நேரம் மாலை ஏழு மணிக்கு தென்கிழக்கு லண்டன் புறொம்பிளியில் (Bromley) , மங்கள விளக்கேற்றல், பிரித்தானியக் கொடி, தமிழீழத் தேசியக் கொடி மற்றும் அகம் அனைத்துலக நிறுவனக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் இசை, நடனம், கவிதைகள், தமிழர்களின் பாரம்பரிய கலையான சிலம்பம் மற்றும் சிறப்புரைகள் இடம்பெற்றது.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"


அகம் அனைத்துலக நிறுவனம்

27 Old Gloucester St, Holborn, London, WC1N 3AX
Email: info@akamfoundation.com
Tel: 02030626600


TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


New
RANGANAS
JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில் எங்கும் கண்டிடாத சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1% முதல் தங்க நகை அடைகு சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com kprranga@hotmail.com


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge, Private மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான
மோட்கேஜ், குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
SUBRA
MORTGAGE SOLUTIONS
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330
Canada Trust | Scotiabank | FIRST NATIONAL | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | RMG | MCAP
Off: 416-660-5656 / Fax: 647-351-3099 / 1585 Markham Rd, Unit 406, Toronto ON M1B 2W1


146, 679
Killed by Sri Lanka Government
Not Just War Crime, It's Genocide
Mr. Prime Minister, Don't Turn your Back!
REC GNIZE
TAMILEELAM GENOCIDE




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# 1981 ஆம் ஆண்டு மே, யூன் இனப்படுகொலை

1981 ஆம் ஆண்டு மே மாதமும் யூன் மாதமும் வடகிழக்கில் தேர்தல் பரப்புரை பின்னணியில் கொந்தளிப்பான அரசியற் சூழ்நிலைகள் காணப்பட்டன. இந்நிலையில் ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் ஓர் உயர்மட்ட அமைச்சர் குழுவை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தது. ஜே.ஆர் அரசாங்கத்தால் நயவஞ்சக நோக்கத்தோடு அனுப்பிவைக்கப்பட்ட இந்தக் குழுவில் மகாவலி அபிவிருத்தித்திட்ட அமைச்சர் காமினி திஸாநாயக்கா, விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்கள் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணம் சுபாஸ் விடுதியில் தங்கியிருந்தார்கள். இவர்களோடு யாழ்ப்பாண நகர் எங்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற காவற்றுறையினரும் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டனர். முப்படைகளும் யாழ்ப்பாண நகர் எங்கும் பரவலாக நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்களைவிடப் பெருந்தொகையான சிங்களக் குண்டர்கள், காடையர்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டு யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் யாழ்ப்பாண நகரை எரியூட்டுவதற்கு ஏற்ற வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக யாழ்ப்பாண நகரம் ஒரு கொதி நிலையில் இருந்தபோது 1981ஆம் ஆண்டு மே மாதம் முப்பத்தோராம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலுக்கு முன்னால் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றக் கொண்டிருக்கும்போது திடீரென வெடிச்சத்தம் கேட்டது. அடையாளம் தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு சிங்களக் காவற்றுறையினன் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்த யாழ்ப்பாணக் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிங்களக் காவற்றுறையினர் நாச்சிமார் கோயிலுக்குத் தீ மூட்டினார்கள். ஆலய சுற்றாடலில் நின்ற மக்கள் தாக்கப்பட்டார்கள். ஆலயத்திற்கு உள்ளே நின்ற பக்தர்கள் காவற்றுறையினரின் துப்பாக்கிப் பிடிகளாற் தாக்கப்பட்டார்கள். பலர் படுகாயமுற்றார்கள். ஆலயத்திற்குள்ளே இருந்த விக்கிரகங்கள், சுவாமிகாவும் வாகனங்கள் தாக்கப்பட்டன. ஆலயத்திற்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த தேர் முட்டியும், தேரும் தீ மூட்டி எரிக்கப்பட்டன. நாச்சிமார் கோயில் சுற்றாடலிலிருந்த வீடுகள், கடைகள், வீட்டு வேலிகள் என்பன எரிக்கப்பட்டன. இதன் பின்னர் யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்த சிறீலங்காக் காவற்றுறையினர் யாழ்ப்பாண நகருக்குத் தீ மூட்டினார்கள். யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு முன்னாலிருந்த மகாத்மா காந்தி சிலை, யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு முன்னாலிருந்த சோமசுந்தரப் புலவர் சிலை, யாழ்ப்பாணம் ஹட்டன் நெசனல் வங்கிக்கு முன்னாலிருந்த திருவள்ளுவர் சிலை, யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியிலிருந்த ஔவையார் சிலை என்பன அடித்து நொருக்கப்பட்டன. யாழ்ப்பாணம் முற்ற வெளியிலிருந்த தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளின் நினைவுத் தூபிகள் சிதைக்கப்பட்டன.

இதன் பின்னர் பருத்தித்துறை வீதி வழியாக அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிவேல் யோகேஸ்வரனின் வீட்டுக்குச் சென்று அவரிடமே அவரைப் பற்றி விசாரித்திருக்கிறாஉகள். நிலைமையைப் புரிந்து கொண்ட யோகேஸ்வரன் தன் வீட்டுப் பின் மதிலால் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு ஓடி மயிரிழையில் உயிர்தப்பினார். நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடும் வீட்டினுள்ளேயிருந்த அவரது காரியாலயமும் சிங்களக் குண்டர்களால் தீயிட்டுப் பொசுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு தரைமட்டமாக்கப்பட்டது. யோகேஸ்வரன் அவர்கள் 1981ஆம் ஆண்டு யூன், யூலை மாதம் வெளியான இந்தியா டுடே சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் தனது வீட்டைக் கொளுத்தியவர்கள், கட்டைக் காற்சட்டையும் அரைக்கை பெனியனும் அணிந்து மதுபோதையிற் காணப்பட்டார்கள் என்றும், அவர்கள் சிங்களத்தில் கதைத்தார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.


House and car of Mr. V. Yogeswaran, Jaffna MP, razed as fires burned citywide.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# 15.05.1985 குமுதினிப் படுகொலை






யாழ் தீபகற்பத்தின் தனித்துவமானதும், நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்டதுமாக, 47.4 சதுர கி.மீ நிலப்பரப்பில் நெடுந்தீவுப் பிரதேசம் அமைந்துள்ளது. தீவுகளில் பெரும் விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்தார்கள். நெடுந்தீவில் வாழும் மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கடல் கடந்து படகுகளில் பிரயாணம் செய்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. நெடுந்தீவு மக்களின் கடல் போக்குவரத்திற்கு குமுதினிப் படகுச் சேவையே பெரிதும் உதவியது. இப்படகுச் சேவை நாளாந்தம் காலை 7.00 மணிக்கு நெடுந்தீவு துறை முகத்திலிருந்து குறிகட்டுவானுக்கும் பின்னர் மாலை 5.00 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுத் துறை முகத்துக்கும் பயணிக்கும்.

1985ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் திகதி குமுதினிப் படகு வழமை போல தனது சேவையை ஆரம்பித்தது. அன்று ஏறக்குறைய இப்படகில் அறுபதிற்கும் மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய்தார்கள். நெடுந்தீவுத் துறைமுகத்திலிருந்து குறிகட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த சமயம், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ள நயினாதீவில் முகாமிட்டிருந்த கடற்படையினரின் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரண்டு விசைப்படகுகள் குமுதினிப் படகினை அண்மித்த போது அதில் பயணித்த மக்கள் அச்சம் கொள்ளத் தொடங்கினர். அவ்விரண்டு விசைப்படகுகளில் கடற்படையினர் தங்களுடன் கோடரி, கத்தி, அரிவாள் போன்ற கூரிய ஆயுதங்களையும் எடுத்து வந்திருந்தனர். இதைப் பார்த்த மக்கள் செய்வதறியாது கதறி அழுதார்கள். வந்த கடற்படையினர் குமுதினிப் படகினுள் இருந்த மூன்ற மாதக் குழந்தை உட்பட அனைத்துப் பயணிகளையும் ஒவ்வொருவராகக் கீழ்தளத்திற்கு அழைத்து மற்றவர்கள் அறியாமல் தாங்கள் எடுத்து வந்த கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொன்றனர். இத்தாக்குதலில் நாற்பத்திரண்டிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அங்கங்களை இழந்தார்கள். அவர்கள் அனைவரும் மாலை கரையொதுங்கிய குமுதினிப் படகிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்






செல்லப்பட்டார்கள் சம்பவம் தொடர்பாக நெடுந்தீவைச் சேர்ந்த எஸ். புஸ்பராணி தெரிவிக்கையில்,

"அனுரதபுரத்தில் நடைபெற்ற கொடூரச் சம்பவத்திற்குப் பதிலடியாகவே இக் குமுதினிப் படுகொலை நடைபெற்றது. இதில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். இதில் எனது உறவினர் பலர் இறந்துள்ளனர். இச் சம்பவத்தில் நான் வெட்டிக் காயப் படுத்தப்பட்டேன். கர்பிணித் தாய்மாரைத் தாக்கும் போது வயிற்றிலுள்ள குழந்தை "கொட்டியா"என்ற கூறித் தாக்கினார்கள். பெண்கள், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி பலர் தாக்கப் பட்டனர்".

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

1. பசுபதி நிர்மலாதேவி, 20, -
2. கந்தையா சதாசிவம், 26, ஆசிரியர்
3. ஜேசுதாசன், 46, கடற்றொழில்
4. மாரியம்மா, - , -
5. ஆ.கனகலிங்கம், 34, கடற்றொழில்
6. தில்லைநாதன், 32, கடற்றொழில்
7. ஞானப்பிரகாசம் மரியமாணிக்கம், 45, கடற்றொழில்
8. சடையர் கோவிந்தன், 46, கடற்றொழில்
9. செபமாலை அந்தோனிப்பிள்ளை, 45, கடற்றொழில்
10. செபமாலை கிருக்ஷ்டி, 24, -
11. நிமிலி, 18, -
12. அனுக்ஷியா, 23, -
13. பேர்ணாட் கிறார் பூரணம், -
14. வெ.கந்தையா, 44, கடற்றொழில்
15. செ.சந்திரகுமார், 30, கடற்றொழில்
16. தருமலிங்கம் பாபு, 13, -
17. குமாரசாமி விநாயகம், 38, கடற்றொழில்
18. சபாபதி தெய்வானை, 68, கடற்றொழில்
19. ஞானப்பிரகாசம் தேவசகாயம், 42, கடற்றொழில்
20. வைத்திலிங்கம் சதாசிவம், 45, கடற்றொழில்
21. இராமன் முருகன், 52, கடற்றொழில்
22. கரையூர் சின்னையா, 35, அரச ஊழியர்
23. முத்தன் மணிவண்ணன் , 13, -
24. றொகேசியன் சந்திரகுமார், 18, மாணவன்
25. தொப்பை நாகேந்திரம், 23, -
26. சின்னவன் அந்தோனி, 65, -
27. இராமநாதன், 16, -
28. வேலுப்பிள்ளை புஸ்பராசா, 22, -
29. ஞானசேகரம், 28, தபால்அதிபர்
30. விசுவலிங்கம் சுபாஜினி, 07 மாதம், -
31. கனகம்மா, 55, கடற்றொழில்
32. பழனி மோகநாதன், 27, கடற்றொழில்
33. தர்மலிங்கம் அமிர்தலிங்கம், 18, -
34. பசுபதி நிர்மலாதேவி, 19, மாணவி
35. நவசிவாயம் கந்தையா, 45, ,.போ.சலூட்டுநர்
36. இராமலிங்கம் பரலோகநாதன், 35, கமம்
37. கார்த்திகேசு, 45, -
38. க.பார்வதிப்பிள்ளை, 40, -
39. சி.நாகேந்திரன், 32, கடற்றொழில்
40. குசலகுமாரி, 28, -
41. சாந்தலிங்கம், - , -
42. ஞா.சரோஜாதேவி, 24, ஆசிரியர்



# பெரியபுல்லுமலை படுகொலை – 20 மே 1980

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார். 1980ம் ஆண்டு மே மாதம் இருபதாம் திகதி இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப் பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங்களாகக் கொல்லப்பட்டனர்.

நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர். அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 1986.11.10 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்துமூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு பின்னர் இடைநிறுத்தப் பட்டது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# தோணிதட்டாமடு படுகொலை – 27 மே 1987

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தோணி தட்டாமடு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தின் எல்லைக் கிராமங்களாகச் சிங்களக்கிராமங்கள் அமைந்துள்ளது. இயற்கை வளம் மிகுந்த இக்கிராம மக்கள் தமக்கான தனித்துவமான கலை, கலாச்சார, முறைகளையும் பாதுகாத்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக அயல் சிங்கள கிராமத்திலேயே தமது அத்தியாவசிய தேவைப பொருட்களைக் கொள்வனவு செய்து வந்தார்கள்.

25.05.1987 அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோணிதட்டாமடு மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் அச்சமடைந்த மக்கள் வீடுகளிற்குள் பதுங்கிக்கொண்டனர்.

பின்னர் 27.05.1987 அன்று இரவு இரண்டு மணியளவில் இக்கிராமத்தை சுற்றிவளைத்து உள் நுழைந்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சுட்டும் வெட்டியும் மக்களைப் படுகொலை செய்தனர். இச்சம்பவத்தில் பதின்மூன்று பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் செல்வீச்சு – 29 மே 1987

யாழ் மாவட்டத்தில் கரவெட்டிப் பிரதேசத்தில் அல்வாய்க் கிராமம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்தது. விவசாயக் குடும்பத்தை சேர்ந்த வள்ளிநாச்சியார் என்பவர் இந்தியாவிலிருந்து தருவித்த கருங்கற்சிலையைத் தனக்குச் சொந்தமான வேவிலந்தை என்ற காணியில் வைத்து வழிபட்டு வந்தார். ஆரம்பகாலத்தில் அச்சிலையை வழிபட்டு வந்த மக்கள் காலப்போக்கில் பெரிய ஆலயமாகக் கட்டினார்கள். வீதியின் முன்பாக பெருவிருட்ச மரங்கள் காணப்படுவதோடு, வடமராட்சிப் பகுதியில் இந்துக்களின் பிரசித்தமான ஆலயங்களில் இதுவும் ஒன்றாகவுள்ளது.

1987 மே இருபத்தாறாம் நாள் சிறீலங்கா இராணுவத்தினர் வடமராட்சிப் பகுதிமீது கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க மற்றும் இராணுவ அதிகாரிகளான லலித் கொத்தலாவல, கொப்பேகடுவ போன்றோர் தலைமையில் ஒப்பிரேசன் லிபரேசன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். பலாலி இராணுவத் தளத்திலிருந்து எறிகணை வீச்சு, கடற்தாக்குதல், ஆகாய தாக்குதல் என மும்முனைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை உலங்கு வானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்களைப் போட்டதுடன், பலாலியிலிருந்து ஒலிபரப்புச் செய்யப்பட்ட வானொலிச் சேவை மூலமும் மக்களைப் பாதுகாப்பாக ஆலயங்களில் இருக்கும்படி இராணுவத்தினர் அறிவித்தார்கள்.

29.05.1987 அன்று இராணுவத்தின் இந்த அறிவிப்புகளைச் செவிமடுத்த மக்கள் அச்சமடைந்து, கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு முத்துமாரியம்மன் கோயிலில் பாதுகாப்புக்காகத் தஞ்சமடைந்தனர். இதில் அல்வாய்க் கிராமத்தை சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இன்பருட்டி, திக்கம், வதிரி, நெல்லியடி, தம்பசிட்டி, புலோலி, கரவெட்டி ஆகிய இடங்களிலிருந்தும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இவ் அம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர். ஆலயம் பெரிய ஆலயமாகவும், விசாலாமான வீதிகள், பெரிய மர நிழல்கள் கொண்டிருந்தமையாலும் அத்தனை மக்களும் அங்கு தங்கக் கூடியதாக இருந்தது.

29.05.1987 அன்றையதினம் மாலை 7மணிக்கு அம்மன் கோயில் உள்மண்டபம் மக்களால் நிறைந்திருந்தது. இரவு 9.00 மணியளவில் வெளிவீதி எங்கும் ஒரே மக்கள் கூட்டம். இரவு 11.00மணியளவில் இராணுவத்தினரால் வீசப்பட்ட எறிகணை ஆலயத்தின் முன்னுள்ள வேப்பமரத்தில் வீழ்ந்து வெடித்தது. இதில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. அடுத்த எறிகணை உள்மண்டபத்தில் கொடிக் கம்பத்தின் அருகில் வீழ்ந்து வெடித்ததில் அங்கிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து வந்த எறிகணை வசந்த மண்டபத்தில் வீழ்ந்ததினால் அவ்விடத்திலிருந்த இளைஞர்கள் உயிரிழந்தார்கள். இவ்வாறு மூன்று எறிகணைகள் ஆலயத்தில் வீழ்ந்து வெடித்ததால், ஆலயத்தில் ஒரே அவலக்குரல் எழுந்தது.

அச்சமடைந்ததால் பாதுகாப்பைத் தேடிய மக்கள் நான்கு திசைகளிலும் சிதறி ஓடினார்கள். ஆலயம் இரத்த வெள்ளமானது. இதில் யார் யார் உயிரிழந்தார்கள் என்று அடையாளம் காண முடியாதளவிற்கு உடல்கள் சிதைந்திருந்தன. இராணுவத்தின் அறிவுறுத்தலின்படி பாதுகாப்பைத் தேடி ஆலயத்தில் தஞ்சமடைந்த பொதுமக்களில் நாற்பது பேர் வரை எறிகணை வீச்சில் உயிரிழந்தாஉர்கள். இருபத்திரண்டு பேர் வரை காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இரத்தினம் மாணிக்கம் வீட்டுப்பணி 65
02. நாகமுத்து சோதிலிங்கம் கடற்றொழில் 63
03. நற்குணம் சந்திரசேகரம் மாணவன் 08
04. க.சட்டநாதன் கமம் 54
05. கந்தர் மார்க்கண்டு தொழிலாளி 67
06. கதிர்காமு கிட்ணபிள்ளை வியாபாரம் 61
07. கதிர்காமத்தம்பி யோகானந்தன் மாணவன் 12
08. கதிர்காமத்தம்பி செல்வானந்தன் மாணவன் 14
09. கதிரித்தம்பி வள்ளிப்பிள்ளை 77
10. குமாரன் நல்லதம்பி தொழிலாளி 60
11. கணேஸ் அம்பிகாபதி 48



12. கணேசபதி சதாகரன் கமம் 16
13. கணபதிப்பிள்ளை சின்னத்துரை கமம் 60
14. கணபதிப்பிள்ளை சிவகாமி 69
15. பிறேமானந்தராசா தொழிலாளி 27
16. பஞ்சாட்சரம் தர்மகுலராசா கமம் 28
17. துரைசிங்கம் கலாவதி 26
18. தம்பிஜயா றமணன் மாணவன் 18
19. தங்கமயில் சுஜாதா மாணவி 16
20. தவராசசிங்கம் கமலேஸ்வரி 38
21. தவராசசிங்கம் அனுபாமா மாணவி 06
22. தணிகாசலம் தர்மேந்திரம் மாணவன் 08
23. மார்க்கண்டு நகுலேஸ்வரன் தொழிலாளி 34
24. மார்க்கண்டு செல்லம்மா கைப்பணி 58
25. மாசிலாமணி சுதன் குழந்தை 01
26. மாணிக்கம் உசாராணி குழந்தை 03
27. மாணிக்கம் நாகேந்திரராஜா மாணவன் 13
28. மாணிக்கம் மல்லிகாதேவி வீட்டுப்பணி 41
29. யோகராசா ரதி 2.5
30. செல்லையா நாகம்மா வீட்டுப்பணி 50
31. சி.மாணிக்கம் தொழிலாளி 57
32. சிவனடி இராமநாதன் வைத்திய ஊழியர் 22
33. சிவலிங்கம் அன்னம்மா வீட்டுப்பணி 65
34. சண்முகம் பூலோகநாதன் மாணவன் 16
35. வ.மாரிமுத்து தொழிலாளி 54
36. விசுவலிங்கம் இராசகோபால் விவசாயம் 30
37. ரவீந்திரன் செல்லமணி வீட்டுப்பணி 30

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இ.குணசேகரன் மாணவன் 12
02. நகுலன் மாணவன் 06
03. கு.இராசலிங்கம் கடற்றொழில் 51
04. க.குணரட்னம் வீ.பணி 32
05. கந்தையா கலைமதி மாணவி 06
06. குலநாயகம் விஜயசோதி வீட்டுப்பணி 35
07. தம்பிஜயா புவனேஸ்வரி வீட்டுப்பணி 46
08. ம.வேல்மணி தொழிலாளி 32
09. மாணிக்கம் யோகராணி வீட்டு வேலை 17
10. மாணிக்கம் சுவேந்திரராஜா மாணவன் 05
11. ஆழ்வாப்பிள்ளை இராஜமலர் மாணவி 09
12. ஆழ்வாப்பிள்ளை சரச்சந்திரன் மாணவன் 13
13. ஜெனார்த்தனன் மாணவன் 07
14. வே.இந்திரராணி வீ.பணி 30
15. வேலுப்பிள்ளை தம்பிஜயா குருதி பரிசோதகர் 46
16. சு.கந்தசாமி தபாலதிபர் 54
17. ச.கண்ணதாசன் மாணவன் 08
18. சு.செல்வதி வீ.பணி 24
19. சு.செல்வராசா மாணவன் 06
20. ச.சண்முகதாசன் மாணவன் 10
21. சி.வசந்தாதேவி வீ.பணி 38
22. விக்கினேஸ்வரன் இந்திராணி வீட்டுவேலை 21

# வற்றாப்பளைப் படுகொலை – 18 மே 1992

வடகிழக்கு மாகாணத்திலேயே சைவ மக்கள் மத்தியில் புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் ஓரத்தில் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் வைகாசியில் வருகின்ற பூரணை தினத்தன்று பொங்கல் நிகழ்வு சிறப்புற நடைபெறுவதும், அதில் சிறீலங்காவின் பல பாகங்களிலிருந்தும் இலட்சக் கணக்கான பக்தர்கள் வந்து பொங்கலைச் சிறப்பிப்பதும் வழக்கமாக இருந்த காலத்தில் 1990ஆம் ஆண்டிலிருந்து இராணுவ அச்சுறுத்தல் காரணமாக குறிப்பிட்ட ஒரு தொகைப் பக்தர்களைக் கொண்டே வருடாந்தப் பொங்கல் நிகழ்வு நடைபெறலாயிற்று.

வழமைபோல 18.05.1992 அன்று வற்றாப்பளைப் பொங்கல்தினம். சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர் உச்சிக்காலப் பூசை நடைபெற்றுக்கொண்டிருந்த பி.ப 12:45 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் அவ்விடத்திலேயே உடல் சிதைக்கப்பட்டு உயிரிழந்ததுடன், ஏனைய ஐந்து பேர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்கள் அறுபது பேர்வரை காயமடைந்தார்கள்.

இத்தாக்குதலில் கணவரையிழந்த யோகேஸ்வரி சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கையில்,

“வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கற் திருவிழா நேரத்தில் காவடிகளை வைத்து வாடகைக்கு வழங்கி வந்தோம். வழமை போல் அன்றும் கணவரும் மகனும் காவடி எடுக்கும் இடத்திலும் நானும் மற்றப் பிள்ளைகளும் கோயிலுக்கு உட்புறத்திலும் நின்றிருந்தோம். அந்த வேளைதான் சிறீலங்கா இராணுவம் முல்லைத்தீவு முகாமிலிருந்து எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டது. ஓடிச் சென்று பார்க்கும்போது உடல் முழுதும் காயங்களுடன் மகனைக் கிடத்தியிருந்தார்கள். மகனுடன் அழுதுகொண்டிருக்கும் போது தகப்பனைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். தகப்பன் இறந்துவிட்டதால் அழுது புலம்பத்தான் முடிந்தது. அப்படியே நானும் மயக்கமுற்று விழுந்துவிட்டேன். கணவர் இறக்கும்போது மூன்று மாதக் கர்ப்பிணியாகவும் மூன்று பிள்ளைகளின் தாயாகவும் இருந்தேன். எல்லோரும் சின்னப் பிள்ளைகள். சரியாகக் கஸ்ரப்பட்டுத் தான் பிள்ளைகளை வளர்த்தேன். தகப்பனின் காவடித் தொழிலையும் விடாமல் கூலி வேலை செய்து சீவித்து வருகின்றோம். பிள்ளைகளும் வளர வளர செலவுகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. தற்போதுகூட சரியான கஸ்ரத்தின் மத்தியிற் சீவிக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப˙பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. நவரத்தினசாமி யுவராசினி மாணவி -
02. நவரத்தினசாமி சிவசேகரம் - -
03. நவரட்ணம் இந்துஜா மாணவர் 12
04. நவரட்ணம் சிவனேசம் வீட்டுப்பணி 32
05. நவரட்ணம் ராஜிதா மாணவர் 10
06. குழந்தைவேலு ஜெகதீஸ்வரன் தொழிலாளி -
07. குழந்தைவடிவேல் ஜெகதீஸ்வரன் விவசாயம் 24
08. கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் மாணவர் 17
09. தம்பிராசா சிறீஸ்கந்தராசா விவசாயம் 33
10. மரியபிரகாசம் அந்தோனி தனியார்தொழில் 35
11. யோகராசா வதனி வீட்டுப்பணி 19
12. சதாசிவம் நவரட்ணம் கடற்றொழில் 36
13. சிறிஸ்கந்தராசா மாணவர் 09
14. சண்முகலிங்கம் - 42



காயமடைந்த்தவர்க்களின் விபரம் (இல பெயர் தொழில் வயது)

01. இந்துஜா மாணவி 06
02. ஈஸ்வரன் - 21
03. கனகேஸ்வரன் - 20
04. கார்த்திகேசு நித்தியராசா - 18
05. குமாரசாமி கணேசசுந்தரம் - 16
06. கணேசலிங்கம் புனிதா குழந்தை 03
07. முருகையா - 24
08. நேசம் - 32
09. வெற்றிவேலு மதிவதனம் - 13
10. றெஜித் - 27
11. சாந்தினிதேவி - 16
12. சண்முகலிங்கம் சந்திரசேகர் - 16
13. வடிவேலு - 40
14. விஜயரட்ணம் மாணவன் 07

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# புல்லுமலை படுகொலை – 1986 ... 1990

புல்லுமலைக் கிராமமானது, செங்கலடி-மகாஓயா வீதியில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின் புல்லுமலைக் கிராமம் பல இன்னல்களைச் சந்தித்தது. நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பற்றிய இந்துக் குருக்கள் ஒருவர் கொல்லப்பட்டார்.

20.05.1980அன்று இராணுவத்தினரும், ஊர்காவற்படையினரும் ஒன்று சேர்ந்து புல்லுமலையிலுள்ள கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை உடைத்து எரியூட்டினர். இச் சம்பவத்தின் போது கேணல் வீரதுங்கவினால் இருபத்தைந்து இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்புக்கென அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் கொடுவாமடுவில் வைத்துக் கொலைசெய்யப்பட்டனர்.

1986ஆம் ஆண்டு எட்டாம் திகதி அக்கிராமத்திலிருந்த இராணுவத்தினரும், மகாஓயாவிலிருந்து வந்த முந்நூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் அக்கிராம மக்கள் மீது தாக்குதலை நடாத்தினர். இதன் போது பதினெட்டுப் பொதுமக்கள் நிரலில் நிறுத்தி வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். முத்தையா உட்பட ஐம்பத்தொரு பேர் கைது செய்யப்பட்டுக் காணாமற்போயினர். பலர் குடும்பங் களாகக் கொல்லப்பட்டனர். நாகலிங்கம் இராஜரட்ணம் என்பவரின் எட்டு மாதக் குழந்தை, நான்கு சிறுவர்கள், அவரின் மனைவி என்பவர்கள் உயிரிழந்தனர். சிறுவர்கள் சப்பாத்துக் கால்களால் மிதிபட்டு உயிரிழந்தனர். பீற்றர் லக்ஸ்மி என்பவரின் வீட்டில் ஒரு குழந்தை தவிர அனைவருமே கொல்லப்பட்டனர். கந்தசாமி என்பவரும் அவரது மனைவியான ஒரு சிங்களவரும் அவர்களது குழந்தையும் உயிரிழந்தனர். இங்கு தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் தெரிந்த இருவரை மட்டும் தப்பியோடும்படி விட்டுவிட்டனர்.

அவ்வாறு தப்பியவர்கள் செங்கலடியை வந்தடைந்தனர். 10.11.1986 அன்று மூன்று மாத குழந்தை, பெண்கள், இருபத்துமூன்று ஆண்கள் என இராணுவத்தினரின் நடவடிக்கையால் உயிரிழந்தனர். இவ்வாறு உயிரிழந்த ஆறு பெண்களில் இருவர் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர். கைது செய்து காணாமற்போனோரில் இருபத்துநான்கு பேர் அடங்குகின்றனர். இத்தாக்குதலை நடாத்திய இராணுவத்தினரைஅடையாளம் காண்பதற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அடையாள அணிவகுப்பு பின்னர் இடைநிறுத்தப்பட்டது.

# தெல்லிப்பளை ஆலயப் படுகொலை – 30 மே 1992

யாழ்ப்பாணத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியிலுள்ள தெல்லிப்பளைப் பிரதேசத்தில் துர்க்காபுரம் எனும் கிராமம் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க பல ஆணடுகள் பழமைவாய்ந்த தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

பலாலி இராணுவத்தள விரிவாக்கத்திற்காக பலாலி முகாமை அண்மித்த பகுதிகள் மீது எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதல் நடத்தியவாறு சிறீலங்கா இராணுவத்தினர் முன்னேறிப் படைமுகாமை விரிவாக்கினார்கள். இவ்விராணுவ நடவடிக்கைக்கு அஞ்சிய வசாவிளான், குரும்பசிட்டி, தையிட்டி, மயிலிட்டிப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்தார்கள். இவர்களில் பல குடும்பங்கள்அகதிகளாக தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தில் தஞ்சமடைந்ததுடன், ஆலயத்தில் வெள்ளைக்கொடியையும் பறக்கவிட்டனர்.

30.05.1992 நண்பகல் 12மணியளவில் விமானப்படையின் இரண்டு “அவ்ரோ” விமானங்கள் மக்கள் தங்கியிருந்த ஆலயம் மீது ஐந்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியது. அதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மொத்தம் ஐவர் உயிரிழந்தனர். பத்திற்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். ஆலயத்தின் கோபுரம், பொங்கல் மண்டபம், வசந்த மண்டபம், ஆலய சுற்றாடலிலுள்ள வீடுகளெனப் பல கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளானது. மீண்டும் இராணுவத்தினர் 1993ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஆலய வருடாந்த மகோட்சவ காலப்பகுதியில் சப்பறத் திருவிழா அன்று, பக்தர்கள் கூடியிருந்த வேளை காலை 10.00மணியளவில் ஆலயப் பகுதிநோக்கி பலாலியிலிருந்து எறிகணைவீச்சினை நடத்தினர். அதேநேரம் விமானப் படை விமானத்தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதல்களில் ஒரு பக்தரும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தங்கியிருந்த யுவதி, அருகிலுள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்த ஆசிரியர்களென ஐந்து பேர் உயிரிழந்தார்கள். ஐந்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆலயப்பகுதி மீண்டும் பலத்த சேதத்திற்கு உள்ளானது. அன்றையதினம் பலாலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சினால் ஆலய அன்னதான மண்டபத்தில் சமையலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசதுரை மனோகரன் சுருட்டு வேலை 28
02. ஜயம்பிள்ளை மகேந்திரன் கூலி 31
03. கந்தையா இளையதம்பி ஓய்வூதியர் 65
04. பத்மநாதன் மயூரன் மாணவன் 22
05. வைத்தியலிங்கம் வசீகரா வர்ணம் பூசுபவர் 23
06. செல்லத்துரை செல்வகாந்தராசா - 32
07. வேலாயுதம் நந்தகுமார் மாணவன் 11
08. வேலாயுதம் வினோதகுமார் குழந்தை 1
09. சுப்பிரமணியம் கனகராணி விற்பனையாளர் 38
10. சின்னக்குட்டி காசிப்பிள்ளை கமம் 71

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# தம்ப்பிராய் சந்தை குண்டுவீச்சு – 17 மே 1996

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கே இருபது கி.மீ. தூரத்தில் பூநகரி அமைந்துள்ளது. பூநகரிப் பிரதேசத்திற் காணபப்டுகினற் வயலும் வயல் சார்ந்த ஒரு சிறிய கிராமம் தம்பிராய் கிராமம் ஆகும். இங்குள்ளவர்களின் பிரதானதொழில் விவசாயமாகும்.

1996ஆம் ஆண்டு ஏ -9 பிரதான வீதியை மையமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கை நடைபெற்ற காலப்பகுதியாகும். அக்காலப் பகுதியில் 1996 மே பதினேழாம் திகதி காலை பூநகரி தம்பிராய்ப்பகுதி மக்கள் மீது முற்பகல் பத்து மணியளவில் பூநகரி வான் பரபப்பினுள் வந்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு “கிபீர்” விமானங்கள் பல தடவைகள் வானில் வட்டமிட்டன. இதனால் தம்பிராய்ச் சந்தையில் நின்ற மக்கள் அச்சத்தினால் அங்கு மிங்கும் ஓடினார்கள், இவர்களில் சிலர் ஒரு பனங்கூடலினுள் பாதுகாப்பு தேடி ஒழிந்து கொண்டார்கள். கிபீர் விமானங்கள் வீசிய குண்டுகள் பனங்கூடலினுள்ளும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் விழுந்து வெடித்ததால், ஐந்து பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகியதுடன், ஒன்பது பேர் காயமடைந்தார்கள். மேலும் படுகாயமடைந்தவர்களில் இரண்டு பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்தார்கள்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட தம்ப்பிராயைச் சேர்ந்நத்த சூசைப்பிள்ளை பிரான்சிஸ்சின் மனைவியான றீட்டம்ம்மா சம்பவத்தைப் பற்றி குறிப்பிடுகையில்,
“1996ஆம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதி வெள்ளிக்கிழமை என்னுடைய நான்கு பிள்ளைகளில் மூவர்பாடசாலைக்குச் சென்ற நிலையில் கடைசிப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு எமது தோட்டத்திற்குப் போனேன். என்னுடைய கணவர் பொருட்கள் வாங்குவதற்காக தம்பிராய்ச் சந்திக்குப் போயிருந்தார். அந்தவேளை வானில் வந்த குண்டுவீச்சு விமானங்கள் தம்பிராய் சந்தியிற் குண்டுகளைப் போட்டன. உடனே கணவர் மற்றும் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்று அஞ்சினேன். அயலவர்கள் வந்து தேற்றிய போதும் எனது பிள்ளையையும் கூட்டிக்கொண்டு சம்பவ இடத்திற்குப் போய்ப் பார்த்தவேளை எனது கணவரின் உடல் முழுதும் குண்டுச் சன்னங்கள் துளைத்த நிலையில் சடலமாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அதைப் பார்த்த நான் என்னசெய்வதென்றே தெரியாத நிலையில் மயக்கமடைந்து விழுந்து விட்டேன். பின்னர் என்னையும் எனது கணவரையும் என்னுடைய அண்ணா வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அதன் பின்னர் கணவரை அடக்கம் செய்தோம். இந்தக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் எனது கணவர் உட்பட ஐந்து பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்கள் என்பதுடன், மற்றும் ஒன்பது பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் இருவர் பின்னர் இறந்துவிட்டனர். பாதிக்கப்பட்ட அனைவரும் எங்களைப் போன்று வறுமையான குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை பிரான்சிஸ் சீவற்றொழில் -
02. இரத்தினம் பாலச்சந்திரன் கமம் 29
03. கந்தையா தேவராசா கமம் -
04. தங்கவேலு ரவிச்சந்திரன் சீவல் 34
05. அப்புத்துரை சௌந்தார் ராஜன் சீவல் 35
06. சின்னத்துரை கேதீஸ்வரன் கமம் 29
07. வீரகத்தி அலிஸ்ரின் கடற்றொழில் 28

இச்சம்பவத்தில் காயபட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயா் தொழில்)

01. துரைசாமி. தொழிலாளி 75
02. பொன்னம்பலம் - -
03. செல்லையா பூரணம் வியாபாரி 60
04. சந்திரபாலு ஈஸ்வரன் முகாமையாளர் 24

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் 23 மே 2008



கிளிநொச்சி இரணைமடு பாரதிபுரம், மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் 23.05.2008 அன்று ஹைஎஸ் வாகனம் ஒன்றில் முழுங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த உறவினர் ஒருவரைப் பார்வையிட்டுவிட்டு தமது வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வாகனத்தில் பல சிறவர்களும் பயணித்துக் கொண்டிருந்தனர். அவ்வேளை பிற்பகல் 2மணியளவில் திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் நோக்கிச் செல்லும் வழியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அவர்களின் வாகனம் மீது சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர்த்தாக்குதலினை மேற்கொண்டனர். இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த



05பேர் உட்பட 15பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப் பட்டவர்களில் நால்வர் சிறுவர்கள். படுகாயமடைந்த மூன்று பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்திசயாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் மேலும் ஒரு சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான குடும்பநிலைமையைப் பார்த்தால் மிகவும் பரிதாப நிலைமையை உணரமுடியும்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயா் வயது)

01. பெரியசாமி விஜயரட்ணம், 40
02. விஜயரட்ணம் லோகநந்தா, 39
03. விஜயரட்ணம் சிவகலா, 16
04. விஜயரட்ணம் தனு, 09
05. விஜயரட்ணம் விதுசன், 07
06. பன்னீர்ச்செல்வம் அழகுராணி, 42
07. கணேசன் தனராஜ், 34
08. சந்திரசேகரன் கீர்த்திகா, 10
09. சாமிக்கண்ணு கறுப்பையா, 40
10. கறுப்பையா அன்னலட்சுமி, 40
11. அழகன் சுப்பிரமணியம், 40
12. சுப்பிரமணியம் சரஸ்வதி, 40
13. செல்வராசா கலாதேவி, 34
14. சுப்பிரமணியம் தனலட்சுமி, 54
15. சந்திரசேகரம் கார்த்திகா, 10
16. இராஜேந்திரம் கலாவள்ளி, 29

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் 23 மே 2008
























# 25, 000 மேல் பட்ட பொது மக்கள் சிகிச்சை இன்றி உயிரிழப்பு - 17.05.2009

சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதலில் காயமடைந்த சுமார் 25,000 பொதுமக்கள் தற்போது மருத்துவ சிகிச்சை பெறாமல் உயிரிழந்து வருவதாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஞாயிறு நண்பகல் தெரிவித்தார். வட்டுவாகல் அல்லது இரட்டை வாய்க்கால் ஊடாக காயமடைந்தவர்களை வெளியேற்றுமாறு திரு.பத்மநாதன் ஊடாக ஐ.சி.ஆர்.சி யிடம் புலிகள் பலமுறை கோரிக்கை விடுத்தும், அதற்கு ஐ.சி. 2 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்குள், எல்லா இடங்களிலும் சடலங்கள் உள்ளன, மீதமுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் கொழும்பின் படைகளின் ஒவ்வொரு வகையான ஆயுதங்களையும் பயன்படுத்துவதற்கு மத்தியில் பதுங்கு குழிகளில் உள்ளனர். SLA ஆனது மக்களைத் தப்பியோட அனுமதிக்கவில்லை, ஆனால் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விரும்புகிறது, சூசை கூறினார்.

என்ன நடக்கிறது என்று ஐசி கவலைப் படவில்லை. 25,000 பேரைத் தவிர இன்னும் பல ஆயிரக்கணக்கானோர் இப்போது காயமடைந்து கொல்லப்படுகிறார்கள். குறைந்த பட்சம் இப்போது செயல்பட்டால் அவர்களைக் காப்பாற்ற முடியும். மீட்புக்கான அறிகுறிகள் இருப்பதால் நாங்கள் தொடர்ந்து பாதுகாத்து வருகிறோம், என்றார்.

இதற்கிடையில், வன்னியில் இருந்து வரும் சமீபத்திய தகவல்கள், பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் SLA யால் பிடிக்கப்பட்டதாகவும், ஆனால் முதலில் அவர்கள் மீது எதேச்சையாக துப்பாக்கிச் சூடு நடத்தியதன் பின்னரே, பலரின் மரணம் மற்றும் காயம் ஏற்பட்டது.

## 2009ல் தமிழ் மக்களின் தலையில் சிங்கள அரசால் போடப்பட்ட அழிவாயுதங்களின் தடயங்கள் தமிழீழ மண்ணில் இவைகள். உலகம் இன்னும் மவுனமாக ஏன் இருக்கிறது ? தமிழர்கள் என்றபடியாலா?
























# மே 18 146,679 ஈழத்தமிழர் படுகொலை


































# முள்ளிவாய்க்கால்

## வலி சுமந்த பதிவுகள்...



# மானுட வரலாற்றில் துயரமான அத்தியாயங்கள்!

# இனப்படுகொலையும் சர்வதேச சட்டங்களும்!

'இனப்படுகொலை' (Genocide) என்பது முறைப்படுத்தப்பட்ட மற்றும் விரிவான முறையில் இனவரையறை, நிற பேதமை, மதம் மற்றும் தேசியம் என்ற ஏதாவதொரு வகையில் ஒரு இனத்தை பாகுபடுத்தி, அந்த இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பது ஆகும்.

இனப்படுகொலைக்கு எதிராக ஐக்கிய நாட்டு அமைப்பின் புதிய சட்டம் 1951 ஆம் ஆண்டு அமலுக்கு வந்தபின், அதன் அப் போதைய 80 உறுப்பு நாடுகளும் அந்த சட்டத்தின் சரத்துக் களை தங்கள் நாட்டு சொந்த சட்டத்தில் இணைத்தன. இந்த செயலானது, குற்றவாளிகளை பரந்த அளவில் அடையாளம் காண்பதற்கு உதவி புரிந்தது எனலாம்.

உலகம் முழுவதும் பல நாடுகளிலும் கடந்த 250 ஆண்டுகளில் இனப்படுகொலைகள் என்ற பெயரில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஏராளமானோர் கொல்லப்பட் டுள்ளனர். இந்த எண்ணிக்கை லட்சமோ, கோடியோ அல்ல பல மில்லியன்களைத் தாண்டுகிறது என்பதுதான் உண்மை.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதி யாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படு கொலையாகக் கருதப்படுகிறது. ஓர் இனத்தைச் சேர்ந்த மக் களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுப்பதும் இனப்படுகொலை யாகப் பார்க்கப்படுகிறது.

**இனப்படுகொலையானது ஆங்கிலத்தில் (Genocide)**



ஜெனோசைட் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஜெனோசைட் என்ற வார்த்தையை ரஃபேல் லெம்கின் என்ற போலந்து நாட் டைச் சேர்ந்த யூத வழக்கறிஞர், நாஸி தாக்குதலிலிருந்து தப்பி, அமெரிக்காவில் தஞ்சமடைந்தபோது லத்தீன் - கிரேக்க - பிரெஞ்ச் மூலங்களிலிருந்து உருவாக்கினார் என அறியப் படுகிறது.

1933 ஆம் ஆண்டு ஈராக்கில் நடந்த அசீரிய (Assyrian) இனப் படுகொலையானது, ரஃபேல் லெம்கின் நினைவை முதலாம் உலகப் போரின்போது நடந்த ஆர்மீனியப் படுகொலையை நோக்கி நினைவு படுத்துச் சென்றது. எனவே இனப்படுகொலை என்ற காட்டுமிராண்டி செயலுக்கெதிரான சர்வதேச சட்ட வடிவுக் கான ஒரு முன்வரவை அவர் ஸ்பெய்ன் தலைநகர் மாட்ரிட்டில் இருந்த சர்வதேச நாடுகள் கூட்டமைப்பின் (லீன் ஆஃப் நேஷன்ஸ்) சட்ட கவுன்சிலுக்கு அப்போது வழங்கினார்.

உலகில் இனப்படுகொலை என்பதற்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படியான ஒரு விளக்கத்தை இன்று வரை பெறமுடி யாததற்கு இந்த அரசியல் பிரச்சனைகளே காரணம் என்றும், விமர்சிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் நலனுக்கேற்ப இந்த விஷயத்தில் நடந்து கொள்கின்றன.

ஒரு இனப்படுகொலை நடந்த முடிந்தபிறகு குற்றவாளிகளை தண்டிப்பதற்கு சர்வதேச அளவில் சில நாடுகள் நடவடிக்கை எடுக்கின்றன. ஆனால் அந்தப் படுகொலை நடவடிக்கையில் அந்த நாடுகள் ஏன் எதுவுமே செய்வதில்லை என்ற பாரதூர மான விமர்சனம் எப்போதும் உண்டு.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள்:**

இனப்படுகொலை ஒரு சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப்படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும் சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல் சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

ஈரானில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பஹாய் (Bahai) என்ற சமயத்தின் நம்பிக்கையாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேரை அந்நாட்டு ஹியா இஸ்லாமிய அரசாங்கம் கொன்று குவித்தது. அவர்களின் சொத்துக்களையும், உரிமைகளையும் பறித்தது. பலரை நாட்டை விட்டு விரட்டியது. இன்று வரை அந்நாட்டில் பஹாய்களுக்கு கொடுமைகள் நடந்தவண்ணம் உள்ளன.

தொடரும் துயரமாக முதலாம் உலகப்போர் சமயத்தில் ஆர்மீனியா நிலத்தில் துருக்கியர்களால் லட்சக்கணக்கில் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். ஈராக் மற்றும் துருக்கி பிராந் தியத்தின் ஆயிரக்கணக்கான குர்துக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது, பல லட்சம் யூதர்களை ஹிட்லரின் நாஸிச அரசு படுகொலை செய்தது.

**உலகப் போர்களில் இனப்படுகொலை:**

முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு சேர்ந்த துருக்கி தோல் வியடைந்தது. தோல்விக்கு பழிவாங்கும் முகமாக ஆர்மீனி யர்கள் மீது மிகவும் கோபமடைந்தது ஒட்டோமன் அரசு.

துருக்கு பேரரசைச் சேர்ந்த இராணுவத்தின் மூலம் ஆர்மேனி யர்கள் துரோகிகள் என அவர்கள் குற்றம் சாட்டப்பட்டு, கைது செய்து பலர் கொல்லப்பட்டனர். 1915இல் துருக்கி ஒட்டோமன் பேரரசு, முதல் உலகப்போர் தொடங்கும் சமயத்தில் தங்களது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள அந்தப் போரில் ஈடுபட முடிவு செய்தது.



ஏற்கெனவே இழந்த செல்வாக்கினை மீட்க இது உதவும் என்று நம்பி அவர்கள் அதில் இறங்கினர். முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு இணைந்து களம் கண்டது ஒட்டோமன் அரசு.

துருக்கியின் உள்நாட்டில் அதிகாரச்சண்டை அந்நாட்டிற்கு மற் றொரு தலைவலியாக அமைந்தது. இந்த நிலையில் நிறைய புரட்சி இயக்கங்கள், நாடு முழுவதும் பலவாறாகத் தோன்றின. இதற்கெல்லாம் காரணம் யார் என்று ஆராய்ந்தபோது, ஆர்மீனி யர்கள்தான் என்று குற்றஞ்சாட்டி அவர்களை படுகொலை செய்தது.

இவ்வாறாக 1915 முதல் 1918-ம் ஆண்டுவரை ஒட்டோமன் அரசால் 5 முதல் 12 லட்சம் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர்.

**ஹிட்லரின் யூத படுகொலை :**

யூதர்களை கொடுமைப்படுத்துவது, துன்புறுத்துவது, கொலை செய்வது என இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த சூழலில், தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. உண்மையில் ஹிட்லரால் ஜெர்மனியில் யூதர்கள் கொடூரமாக திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

யூதர்கள் நெருக்கடியான பகுதிகளில் அடைத்துவைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து சரக்குத் தொடர் வண்டிகள் மூலம் நூற்றுக் கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வதை முகாம் களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத் துக் கொல்லப்பட்டனர்.



இரண்டு வகையான முகாம்களை நாஜிக்கள் அமைத்தனர். ஒன்று, சாதாரண கைதி முகாம். இதில் கைதிகளை அடிமை போல் நடத்தி, அவர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்கு வார்கள். தேவையில்லாமல் கொல்லமாட்டார்கள். இன் னொன்று வதை முகாம்கள், இவை யூதர்களை கொல்வதற் காகவே உருவாக்கப்பட்டதாகும்.

**கம்போடியாவில் பொல் பொட் அரசின் கோரம் :**

கம்போடியாவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற



வேண்டும் என்று எண்ணினார் ஆட்சியேறிய பொல் பொட் (Pol Pot ) அரசு. அனைவரும் விவசாயம் செய்ய வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்பட்டனர். குறிப்பாக 1975-1979 காலகட்டத் தில், பொது மக்களின் சொத்துக்கள் அனைத்தும் பொது வுடைமை ஆக்கப்பட்டு, பொல் பொட் அரசால் கைப்பற்றப்பட்டது.

1953-ம் ஆண்டு கம்போடியா பிரான்ஸிடமிருந்து விடுதலை அடைந்த பின், சிஹானக் கம்போடியா அரசனாகப் பொறுப்பேற் றார். கம்போடியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (கிமேர் ரூஜ்) தலைவர் ஆன பொல் பொட் சிஹானக்கை பதவியிறக்கி, பின்னர் 1976-ல் பொல் பொட் பிரதமராகப் பதவியேற்றார். வணிகம், மருத்துவம், தொழில்துறை எனப் பல துறைகள் எல்லாம் நிறுத்தப்பட்டன.

ஆட்சியாளர்களை எதிர்த்து போராடிய மக்களைச் சிறையி லடைத்து சித்ரவதை செய்தும் பசி, பட்டினி மற்றும் சட்டவிரோத மான முறையிலும் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன.

குருட்டுத்தனமான கொள்கையும், செயல்முறைப்படுத்தாத திறனும் மக்களை வாட்டின. சுமார் 20 லட்சம் மக்கள் இம்முறையில் கொல்லப்பட்டனர்.

**தொடரும் படுகொலைகள்:**

1975-ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு இனப்படுகொலைகளாக முன்வைக்கின்றனர். அமெரிக்க செவ்வியந்தியர்கள், பாலஸ்தீனியர்கள், காங்கோ, சோமாலியா, கொசாவா என உலக நாடுகளின் வரலாற்றில் "இனப்படுகொலைகள்" தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக் கின்றன என்பது நிதர்சனம்.



பரவலாக பல நூற்றாண்டுகளில் நடந்த மத மோதல்கள் ஏராளமான மக்கள் தேவையின்றி அழிவதற்கு காரணமாயின. ஒரு மதம், தான் பரவ வேண்டும் என்பதற்காக இன்னொரு மதத்தை அழித்தது.

ஆயினும் உலகில் தோன்றிய எத்தனையோ மறைநெறிகள் இந்தக் கொடுமையை தடுப்பதற்கான போதனைகளை கூறிய போதிலும், மனிதர்கள் தொடர்ந்து அதை மறந்துவிடுகிறார்கள் என்பதே நிஜமாகும்.

**ருவாண்டா இனப்படுகொலை (1994)**

ஜெர்மனியின் காலனியாதிக்கத்தின்கீழ் இருந்த நாடு ருவாண்டா, புருண்டி. இங்கு டூட்சி, ஹூட்டு என்ற இரண்டு இன குழுக்கள் வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக டூட்சி இன மக்கள் ஆண்டுவர, பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பிறகு, 1972-ல் புருண்டியில் ஹூட்டுகளின் புரட்சி தொடங்கியது.



1994 ஏப்ரல் 7 அன்று ஹூட்டு இன மக்கள், டூட்சி இனத்தவரை கொல்லத் திட்டமிட்டனர். பெரியவர், சிறியவர் எனப் பாரபட்சம் இல்லாமல் அனைவரையும் கொன்று குவித்தனர் ஹூட்டு இனத்தினர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்தனர். அத்துடன் ஆயிரக் கணக் கானோர் முடமாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**போஸ்னியா இனப்படுகொலை**

பால்க்கன் பிராந்தியத்தில் யூகோஸ்லாவியாவிடமிருந்து பிரிந்த நாடு போஸ்னியா ஆகும். 1990களில் புதிதாக உருவாக்கப்பட்ட தேசம் என்பதால் நாடு முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. அங்கே போஸ்னியர்கள், செர்பியர்கள், குரேஷியர்கள் என மூன்று வகையான இன மக்கள் வாழ்ந்து வந்தனர். குரேஷிய அதிபருக்கும், போஸ்னிய அதிபருக்கும் ஓர் ஒப்பந்தத்தில் முரண்பாடு ஏற்பட, அங்கிருந்து தொடங்கியது இப்பிரச்னை.




போஸ்னியாவில் 1993-ம் ஆண்டில் 2000 பேர் கொலை செய்யபட்டனர். 64 இஸ்லாமியர்களைக் கைது செய்து பேருந்தில் அடைத்து, தீவைத்துக் கொளுத்தினர். இதில் 56 பேர் இறந்தனர்.

செர்பிய ராணுவ ஆட்சியில் 1992-1995 காலகட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சம் பேர் காணாமல் போனார்கள்.

**டார்ஃபுர் – சூடான் இனப்படுகொலை**

ஆப்பிரிக்காவின் சூடானில் உள்ள டார்ஃபுர் மாநிலத்தில் நடைபெற்ற இப்படுகொலை பொருளாதார ரீதியாக முக்கியமானதாகும். சூடானின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் சண்டையிட்டுக் கொள்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தன. இந்நிலையில் மேற்கு சூடானில் உள்ள டார்ஃபுரில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வடக்கு மற்றும் தெற்கு பிரச்னை மேலும் கொளுந்துவிட்டு எரிந்தது. இவ்வாறாக 1972-ல் உள்நாட்டு யுத்தம் முடிந்து, 1983-ல் மீண்டும் துளிர விட ஆரம்பித்தது.




கிட்டத்தட்ட 20 வருடங்களில் 20 லட்சம் பேர் உயிரிழந்தனர். 40 லட்சம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகினர். தென் சூடான் தனி நாடாக ஜூலை 2011-ல் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது சூடான் அரசு.

**ஈழத்தில் தமிழர் படுகொலை :**




ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலை பெரும் வலியையும்,



ஆற்றாமையையும் இப்போதும் எங்கள் ஈழமண் துயரங்களுடன் தேக்கி வைத்திருக்கிறது. விடியலுக்கான நீண்ட பயணம் தொடர்கிறது.

1983-ம் ஆண்டு "கறுப்பு ஜூலை" சம்பவம் இன்றளவும் நீங்காவடுவாக தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது. கண்ணில்பட்ட எல்லாரையும் கொன்று, பெண்கள் பலரும் பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், படுகொலையும் செய்யப்பட்டனர்.

1958, 1977, 1983-ம் ஆண்டுகளில் நடந்த இனக்கலவரங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. ஈழப் போராட்டம் ஆரம்பித்த



பின்பு வானூர்திகளிலிருந்து கண்மூடித்தனமாக குண்டு வீசுதல், ஏவுகணை வீச்சு, நேரடித் தாக்குதல் போன்றவற்றின் மூலம் இதுவரை சுமார் இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இலட்சக்கணக்கானோர் அகதிகளாயினர்.

இன்னமும் தொடரும் துயரமாக, அரசியல் மற்றும் பொருளாதார தேவைகள் மட்டுமே மனிதர்கள் அழிய காரணமாவதில்லை. பல சமயங்களில் அதைவிட சித்தாந்தம், கொள்கை, இனப்பெருமை போன்ற விஷயங்கள் பெரும்பாலான மனித அழிவிற்கு காரணமாகின்றன.



வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது




ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது. மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.

நன்றி: ஐங்கரன் விக்கினேஸ்வரா




JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' உண்போம்!






நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு லட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை "முள்ளிவாய்க்கால் கஞ்சி" என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# பதினாலாவது மே பதினெட்டு!

14.05.2023



எதற்காக தமிழ் மக்கள் உயிர்களை, உறுப்புகளை, சொத்துக்களை கல்வியை இன்னபிறவற்றைத் தியாகம் செய்தார்களோ, எதற்காக லட்சக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்களோ, காணாமல் ஆக்கப்பட்டார்களோ, அதற்குரிய நீதி தமிழ்மக்களுக்கு கிடைக்க வேண்டும். எந்தப் போராட்டத்தின் பெயரால் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டார்களோ, அந்தப் போராட்டத்தின் பலன் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். எனவே நினைவு கூர்தல் எனப்படுவது தமிழ்மக்கள் போராடியதன் பலனை பெறுவதற்கான ஓர் அரசியல் செயற்பாடுதான். நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டத்தில் அதுவும் ஒரு பகுதிதான்.

நவீன தமிழ் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள், அதிக தொகை மக்கள் கொல்லப்பட்ட ஒரு காலகட்டத்தை நினைவு கூர்வதே முள்ளிவாய்க்கால் நினைவுகூர்தல் ஆகும். எனவே முழுத் தமிழ் வரலாற்றிலும் நவீன காலத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய படுகொலை என்ற அடிப்படையில் அந்த உணர்ச்சிப் புள்ளியில் முதலாவதாக, ஈழத்தமிழர்களை ஒரு தேசமாக திரட்டலாம். இரண்டாவதாக, உலகெங்கிலும் பரந்துவாழும் தமிழர்களை இன அடிப்படையில் திரட்டலாம். அவ்வாறு திரட்டி அந்த கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் கோபத்தை, கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றினால் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெறுவதற்கான உந்துவிசையாக அது அமையும். எனவே நினைவுகூர்தல் எனப்படுவது நீதிக்கான போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி.

அதை அவ்வாறு வடிவமைக்க வேண்டும். இப்பொழுது நடைமுறையில் உள்ள பொதுக் ஏற்பாட்டுக் குழுவானது ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒரு குறிப்பிட்ட நாளில் நிர்வகிக்கும் ஒரு கட்டமைப்பே தவிர அது மேற்சொன்ன அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு பொதுக் கட்டமைப்பு அல்ல.

கடந்த 14 ஆண்டுகளாக பொருத்தமான ஒரு பொறிமுறையை, பொருத்தமான ஒரு பொதுக் கட்டமைப்பை தமிழ் மக்கள் உருவாக்கவில்லை. காலம் ஆற்றாத துக்கம் என்று எதுவுமில்லை. கூட்டுத் துக்கத்தை உரிய பொறிமுறைக்கூடாக கூட்டு ஆக்கசக்தியாக மாற்றவில்லை என்றால் அது வெறும் துக்கமாகச் சுருங்கிவிடும். எனவே ஒரு கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றி, அதை நீதிக்கான போராட்டத்தின் ஊக்க சக்தியாக மாற்ற வேண்டும். அதற்கு வேண்டிய பொறி முறையும் கட்டமைப்பும் உருவாக்கப்பட வேண்டும். இது முதலாவது.

இரண்டாவது, முள்ளிவாய்க்காலை நினைவு கூர்வது என்பது ஒரு யுத்த களத்தின் இறுதிக் கட்டத்தை நினைவு கூர்வதுதான். அந்த யுத்தகளத்தில் தமிழ் மக்களுக்கு தாமாக முன்வந்து தம் உயிர்களைக் கொடுத்தவர்கள், உறுப்புகளை இழந்தவர்கள், கல்வியை இன்னபிறவற்றை இழந்தவர்கள், என்று ஆயிரக்கணக்கானவர்கள் உண்டு. போரில் நேரடியாக சம்பந்தப்படாமலேயே கொல்லப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களும் உண்டு. அவர்களனைவர்க்கும் உதவி தேவை. நிவாரணம் தேவை. ஆறுதல் தேவை. ஆனால் கடந்த 14 ஆண்டுகளில் எத்தனை பேருக்கு அவ்வாறான உதவிகள் கிடைத்திருக்கின்றன?

புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் குறிப்பிடத்தக்க அளவிற்கு உதவிகளை செய்கின்றது. ஆனால் அது ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட்ட, ஒரு மையத்தில் இருந்து வழங்கப்படுகின்ற உதவி அல்ல. கடந்த 14 ஆண்டுகளில் போரால் பாதிக்கப்பட்ட பலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள். போரில் ஈடுபட்ட பலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள், அல்லது அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இறுதிக்கட்டப் போரில் தமது குடும்பத்தின் உழைக்கும் நபரை அல்லது நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவரை அல்லது வருமான வழியை இழந்த பல குடும்பங்கள் உண்டு. அக்குடும்பங்கள் யாவும் கடந்த 14 ஆண்டுகளில் தேறி எழுந்து விட்டனவா இல்லையா என்று பார்க்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் வீட்டில் அல்லது ஒரு தியாகியின் வீட்டில் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவரின் வீட்டில் அடுப்பு எரியவில்லை என்றால், முள்ளிவாய்க்காலில் ஏற்றப்படும் சுடர்களின் மகிமை குறைந்து விடும். எனவே போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஒரு பொருத்தமான பொறிமுறையும் அதற்கு வேண்டிய கட்டமைப்பும் தேவை.

புலம்பெயர்ந்த தமிழ்மக்களிடம் போதியளவு பணம் உண்டு. உதவுவதற்கு விருப்பமும் உண்டு. ஆனால் பொருத்தமான ஒரு பொறிமுறையை, பொருத்தமான ஒரு கட்டமைப்பை யார் உருவாக்குவது? கடந்த 14 ஆண்டுகளாக அவ்வாறான கட்டமைப்புகளை ஏன் உருவாக்க முடியவில்லை?

குறிப்பாக, முன்னாள் இயக்கத்தவர்களின் கதி என்னவென்று பார்க்க வேண்டும். நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். அல்லது நாட்டில் ஏதோ ஒரு விதத்தில் “செற்றில்ட்” ஆகிவிட்டார்கள். ஆனால் இப்பொழுதும் செற்றில்ட் ஆகாத பல குடும்பங்கள் உண்டு. 2009க்குப் பின் முன்னாள் இயக்கத்தவர்கள் மத்தியில் குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன. பிள்ளைகள் கைவிடப்பட்டுள்ளன. பெற்றோர் அனாதைகள் ஆகியிருக்கிறார்கள். போரில் பட்ட காயத்தின் விளைவாக ஏற்பட்ட நோய்க்கு மருத்துவம் செய்யக் காசு இல்லாமல் தத்தளிக்கும் பலர் உண்டு. என்ன நோய் என்று தெரியாமலேயே இறந்து போன பலர் உண்டு. இவர்களுக்கெல்லாம் உதவ ஏதாவது கட்டமைப்பு இருக்கிறதா? இல்லையென்றால் யார் பொறுப்பு?

இலங்கைத் தீவிலேயே போரால் பாதிக்கப்பட்ட தரப்புக்களில் இப்பொழுதும் அதிகம் ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய ஒரு வகுப்பினராக (Most Vulnerable) காணப்படுவது முன்னாள் இயக்கத்தவர்கள்தான். நாட்டின் சட்ட அமைப்பின்படி புனர்வாழ்வு ஒரு தண்டனை அல்ல என்பதனை கடந்த 14 ஆண்டு காலம் நிரூபித்திருக்கிறது. இந்நிலையில் மீண்டும் மீண்டும் ஒரே குற்றத்துக்காகத் தண்டிக்கப்படக்கூடிய ஒரு தரப்பாக முன்னாள் இயக்கத்தவர்கள் காணப்படுகிறார்கள். அது தொடர்பாக நமது சட்டத்தரணிகள் என்ன செய்திருக்கிறார்கள்? தனிப்பட்ட வழக்குகளில் தோன்றி குறிப்பிட்ட முன்னாள் இயக்கத்தவரை விடுதலை செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அதை ஓர் அரசியல் விவகாரமாக மாற்றி அதற்கு வேண்டிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு வர ஏன் ஒருவரும் முயற்சிக்கவில்லை?

அது மட்டுமல்ல, முன்னாள் இயக்கத்தவர்கள் புனர்வாழ்வின் பின் ஜனநாயக அரசியல் இறங்கினார்கள். அவ்வாறு இறங்கியவர்கள் கூட்டமைப்ப, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி போன்றவற்றில் இணைந்து தேர்தல் கேட்டார்கள். துயரம் என்னவென்றால் ஒருவருமே தேர்தலில் பெறுமதியான வெற்றிகளைப் பெறவில்லை. துயிலுமில்லங்களில் தமிழ்மக்கள் விட்ட கண்ணீர் யாவும் எங்கே போய் சேருகின்றது? அதை யார் வாக்குகளாக மாற்றுகிறார்கள்?

“உன்னுடைய சமூகத்திற்காக நீ கல்வியைத் துறந்தாய், உறுப்புகளை இழந்தாய், உயிரைக் கொடுக்கச் சித்தமாக இருந்தாய், ஆனால் உனக்காக இந்தச் சனம் குறைந்தது உள்ளூராட்சி சபையில் ஒரு வட்டாரத்துக்கு தேவையான ஆயிரம் வாக்குகளைக் கூடத் தரவில்லையே? அப்படியென்றால் உன்னுடைய இறந்த காலத்துக்குப் பொருள் என்ன?” என்று ஒரு முன்னாள் இயக்கத்தவரின் பிள்ளை கேட்டால், அதற்கு அந்த தகப்பன் அல்லது தாய் என்ன பதில் சொல்ல முடியும்? அதே கேள்விக்கு தமிழ் மக்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

முன்னாள் இயக்கத்தவர்கள் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் அவர்களை தடுப்பில் வைத்திருந்த தரப்பு அவர்களோடு உறவுகளைப் பேணும். அது ஒரு யதார்த்தம். அவ்வாறு பேணுவதன்மூலம் அரசாங்கம் இரண்டு விடயங்களைச் சாதிக்கலாம், ஒன்று, அவர்களைக் கண்காணிக்கலாம், இரண்டு, அவர்களோடு தொடர்ந்து தொடர்புகளைப் பேணினால், அவர்களுடைய சொந்த மக்களே முன்னாள் இயக்கத்தவர்களை சந்தேகிப்பார்கள். எதிரியின் ஆட்கள் என்று முத்திரை குத்துவார்கள். எந்த சமூகத்துக்காக அவர்கள் போராடினார்களோ, அந்தச் சமூகமே அவர்களைப் புறமொதுக்கி, அவமதித்து விலகிச் செல்லும் ஒரு நிலையை ஏற்படுத்தலாம்.

கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்க் கட்சிகளே அவ்வாறு முன்னாள் இயக்கத்தவர்களைக் குற்றம்சாட்டி வருகின்றன. முன்னாள் இயக்கத்தவர்களில் ஒரு பகுதியினர் அவ்வாறு அரசு புலனாய்வுத் துறையோடு சேர்ந்து செயல்படக்கூடும். ஆனால் அதற்காக எல்லாரும் அப்படியல்ல. கடந்த 14 ஆண்டுகளில் தேர்தலில் இறங்கிய முன்னாள் இயக்கத்தவர்களில் யாருமே பொருத்தமான வெற்றிகளை பெறாததற்கு என்ன காரணம்? இந்த விடயத்தில் முன்னாள் இயக்கத்தவர்களின் கட்சியை அரச புலனாய்வுத் துறையின் ஆட்கள் என்று விமர்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் நின்று தேர்தல் கேட்டவர்களும் இதுவரை வெற்றி பெறவில்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனவே இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது அவர்கள் கொல்லப்பட்ட யுத்த களத்தை நினைவு கூர்வதுதான். அந்த யுத்த களத்தில் தமது சமூகத்துக்காகப் போராடியவர்களை அவர்களுடைய நோக்கு நிலையில் இருந்து புரிந்து கொள்ள முயற்சிப்பதும்தான். இது இரண்டாவது.

மூன்றாவது, இறந்தவர்களை நினைவுகூர்வது என்பது, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நினைவுகளைக் கடத்துவது. நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டம் மேலும் நீண்ட காலத்துக்கு இழுபடலாம் அதுமட்டுமல்ல கடந்த 14 ஆண்டுகளில் தொழில்நுட்பப் பெருக்கம் காரணமாகவும், தலைமைத்துவ வெற்றிடம் காரணமாகவும், புதிதாக எழுந்து வரும் ஒரு தலைமுறை பெருமளவுக்கு அரசியல் நீக்கம் செய்யப்பட்டதாகவோ, அல்லது இலட்சிய நீக்கம் செய்யப்பட்டதாகவோ மாறிவருகின்றது. அந்தத் தலைமுறைக்கும், உலகெங்கிலும் புலம்பெயர்ந்து சிதறி வாழும் ஈழத்தமிழர்களின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் நினைவுகளைக் கடத்த வேண்டியிருக்கிறது. நினைவுகளின் தொடர்ச்சிக்குள் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அதற்கு நினைவு கூர்தல் அவசியம். இது மூன்றாவது.

நாலாவதாக, நினைவு கூர்தல் எனப்படுவது, ஒரு கூட்டுச் சிகிச்சை போன்றது. துக்கத்தை கொட்டித் தீர்க்கும் நாளும், இடமும் அது. வெளிவழிய விடப்படாத துக்கம் உள்ளுக்குள் கிடந்து குமைந்து அடங்காத கோபமாக மாறிவிடும். அல்லது நோயாக மாறிவிடும். எனவே உளவியல் அர்த்தத்திலும் பண்பாட்டு அர்த்தத்திலும் துக்கத்தை வெளிவழிய விடவேண்டும். அந்த அடிப்படையில் நினைவு கூர்தல் என்பது ஒரு குணமாக்கல் செய்முறை. ஒரு பண்பாட்டுச் செய்முறை.

மேற்கண்ட நான்கு முக்கிய காரணங்களையும் முன்வைத்து நினைவு கூர்தலை ஒழுங்குபடுத்த வேண்டும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக நினைவு கூர்தல் அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றதா? அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படவில்லை என்றால் அதற்கு யார் பொறுப்பு?

இந்தக் கேள்வியை மறுவளமாகக் கேட்டால் தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு? என்றுதான் கேட்க வேண்டும். ஏனென்றால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்களின் அரசியல் எனப்படுவது கட்சி அரசியலாகத்தான் காணப்படுகின்றது. கொழும்பு அல்லது வெளித்தரப்புகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பதில் வினை ஆற்றும் அரசியலாக தறுக்கணித்துப் போய்விட்டது. அது தேசத்தை கட்டியெழுப்பும் ஓர் அரசியல் அல்ல.

சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும், காணிப்பறிப்புக்கு எதிராகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகேட்டும் தமிழ்மக்கள் போராடுகிறார்கள்தான். ஆனால் அவற்றில் பெரும்பாலானவை, எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறியது போல, பதில் வினையாற்றும் (Reactive) நிகழ்வு மைய அரசியல்தான் (Event Oriented). அவை ஒரு தேசநிர்மாணத்துக்குரிய கட்டியெழுப்பும் (Proactive) அரசியல் அல்ல.

ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலில்தான் நினைவு கூர்தல், அதற்குரிய மகிமையோடும் அரசியல் அடர்த்தியோடும் அனுஷ்டிக்கப்படும். அதற்குரிய பல்வகைமையோடு அனுஷ்டிக்கப்படும். இல்லையென்றால் கட்சிகளாக பிரிந்திருக்கும் மக்கள் நினைவுகூர்தலை அதற்குரிய பெறுமதியுணர்ந்து அனுஷ்டிக்கப் போவதில்லை. மாறாக, அது ஒரு துக்க நிகழ்வாக, அல்லது செயலுக்குப் போகாத பிரகடனங்களை வாசிக்கும் ஒரு நிகழ்வாக, ஒரு சடங்காகச் சுருங்கிப் போய்விடும்.

இம்முறை, பல்கலைக்கழக மாணவர்கள் சமூகப்பங்களிப்போடு கஞ்சி காய்ச்சுவது ஒரு நல்ல முன்னுதாரணம். அதே சமயம் கட்சிகளுக்கு எதிராக கருத்துக்களைக் கூறாமல் விட்டால் அதுவும் ஒரு நல்ல முன்னுதாரணம். முள்ளிவாய்க்காலில் தாமாகத் திரளக்கூடிய மக்களை, கட்சிகளும் பொதுக்கட்டமைப்புகளும் மாணவர்களும் பிரிக்காமல் விட்டாலே போதும். இறந்தவர்களின் ஆத்மா இந்த ஒரு விடயத்திலாவது சாந்தி அடையும். ஏனெனில் மனநல மருத்துவ நிபுணர் சிவதாஸ் கூறுவது போல “நினைவுகூர்தல் எனப்படுவது காயங்களைக் குணப்படுத்துவது, காயங்களைக் கிளறுவது அல்ல”.

நன்றி: நிலாந்தன்




# எல்லாள மன்னன் அநுராதபுர இராசதானி காலத்தில் வெளியிட்ட தமிழ் நாணயம்!

இலங்கையின் பூர்வீக மக்கள், அவர்களது பண்பாடு தொடர்பாக கூறப்பட்டு வந்த நீண்ட பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகள் சமீபகாலத் தொல்லியல் ஆய்வுகளால் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம்.

விஜயன் வருகைக்கு முன்னரே இலங்கையில் நாகரிகயுகம் தோன்றிவிட்டதாகக் கூறும் இலங்கையின் மூத்த தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் சேனகபண்டாரநாயக இலங்கை மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் விஜயன் வருகைக்கு முந்திய பண்பாடுகளில் இருந்து ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார். இதற்கு விஜயன் தலைமையில் வடஇந்தியக் குடியேற்றம் நடந்தாகக் கூறப்படும் கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இலங்கையில் நாடோடிகளாக வாழ்ந்த கற்காலப் பண்பாட்டு மக்களும், நாகரிக உருவாக்கத்திற்கு காரணமான பெருங்கற்கால மக்களும் வாழ்ந்து வந்ததை நம்பகரமான தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்தி உள்ளதே காரணமாகும்.

இந்நிலையில் இலங்கையில் புழக்கத்தில் இருந்த தொன்மையான மொழிகளை அடையாளப்படுத்தும் முக்கிய சான்றான எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்னா (1962), பெர்ணாந்தோ (1969), ஆரியஅபயசிங்க (1975) போன்ற அறிஞர்கள் வடஇந்தியாவிலிருந்து பௌத்த மதத்துடன் வடஇந்தியப் பிராமி என்ற எழுத்து வடிவம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னரே தமிழ் மொழிக்குரிய தமிழ்ப் பிராமி என்ற எழுத்து வடிவம் புழக்கத்தில் இருந்ததாகக் கூறுகின்றனர். ˙. இத்தமிழ்ப் பிராமி எழுத்தின் பயன்பாடு இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் பயன்பாட்டிலிருந்து வந்ததைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன.


இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றை மட்டுமன்றி அவர்களிடையே தோன்றியிருக்கக் கூடிய அரச மரபு பற்றிய பாரம்பரிய நம்பிக்கைகளையும் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக்காட்டுகின்றன. இதற்கு இலங்கையில் புழக்கத்தில் இருந்த தொன்மையான தமிழ் நாணயங்களை முக்கிய சான்றாகக் காட்டலாம்.

நாணயங்கள் இலக்கியங்கள், கல்வெட்டுக்களைப் போல் விரிவான வரலாற்றுத் தகவல்களைத் தரக்கூடியவை அல்ல. ஆயினும் ஆட்சில் இருந்த ஒரு அரச வம்சத்தால் அல்லது ஒரு மன்னனால் வெளியிடப்படும் நாணயங்கள் அவர்களின் சமகாலத்திற்குரியதால் அவை நம்பகரமான சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றது. இதற்குப் பண்டைய இந்திய இலக்கியங்களில், கல்வெட்டுக்களில் சொல்லப்படாத சில அரச வம்சங்களை, மன்னர்களை, மற்றும் சிற்றரசர்களை நாணயங்களால் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டதை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்தநோக்கில் இலங்கையில் புழக்கத்தில் இருந்த பண்டைய தமிழ் நாணயங்கள் இதுவரை ஆராய்ந்து பார்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.

## எல்லாளன் வெளியிட்ட நாணயம்?


வரலாற்றுத் தொடக்ககாலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் தமிழகத்தில் சங்ககால மூவேந்தர் வெளியிட்ட சதுரவடிவ நாணய மரபை ஒத்ததாகக் காணப்படுகின்றது. சதுரவடிவில் நாணயங்களை வெளியிடும் மரபு சங்ககாலத்திற்குரிய தனிச் சிறப்பம்சமாகக் கூறப்படுகின்றது. இதனால் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட சதுர வடிவிலமைந்த நாணயங்கள் தமிழக மரபைப் பின்பற்றி வெளியிடப்பட்டவை எனக் கூறலாம்.

இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இந்நாணயத்தின் முன்பக்கத்தில் கோட்டுருவில் அமைந்த சதுரமான பெட்டிக்குள் நிற்கும் நிலையில் காளை உருவமும், அதன் தலைப்பகுதிக்கு கீழே பலிபீடம் போன்ற உருவமும் காணப்படுகின்றது. நாணயத்தின் பின்பக்கத்தில் சதுரமான கோட்டுக்குள் வட்டமும், அவ்வட்டத்திற்குள் சிலவற்றில் மூன்றும், வேறுசில நாணயங்களில் நான்கு புள்ளிகளும் காணப்படுகின்றன. இந்நாணயங்கள் பற்றி ஆராந்த அறிஞர்கள் பலரும் நாணயத்தின் வடிவமைப்பு சமகாலத்தில் சங்ககால மூவேந்தர்கள் வெளியிட்ட நாணய வடிவமைப்பை ஒத்திருப்பதால் இவை தமிழகத்துடன் கொண்டிருந்த அரசியல், வாணிபத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றனர்.



அவ்வாறு கூறியமைக்கு யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்னர் இலங்கைத் தமிழரிடையே அரச உருவாக்கம் தோன்றவில்லை என்ற நம்பிக்கையும் முக்கிய காரணமாகும்.

ஆயினும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சம் தமிழகத்தில் சங்ககால மூவேந்தர் வெளியிட்ட நாணயங்களின் பின்பக்கத்தில் பாண்டியருக்கு மீனும், சோழருக்குப் புலியும், சேரருக்கு அம்பும் வில்லும், அதியமான் போன்ற குறுநில அரசுக்கு ஆற்றுச் சின்னமும் அரச இலட்சனைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கையில் பயன்பாட்டிலிருந்த சதுர நாணயங்களின் பின்பக்கத்தில் இச்சின்னங்களைக் காணமுடியவில்லை. மாறாக நாணயத்தின் பின்பக்கத்தில் சதுரமான கோட்டுக்குள் வட்டமும், அவ்வட்டத்திற்குள் நான்கும் சில நாணயங்களில் மூன்று புள்ளிகளும் காணப்படுகின்றன.



தமிழகத்தில் சங்க காலம் தொட்டு வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையில் உபயோகத்தில் இருந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட மேற்குறித்த நாணயம் ஒன்றுதானும் தமிழகத் தில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உண்மையில் இந்நாணயம் சங்ககால மன்னர்களால் வெளியிடப்பட்டிருந்தால் இலங்கையைக் காட்டிலும் தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் கிடைத்திருக்க வேண்டும்.


இந்நாணயத்தில் காணக்கூடிய இன்னொரு அம்சம் பிற்பட்ட காலத்தில் அநுராதபுர ஆட்சியாளராக இருந்த சில சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் முன்பக்கத்தில் சிங்கமும், இந்நாணயத்தின் பின்பக்கத்தில் காளை உருவம் பொறித்த நாணயத்தின் பின்பக்கத்தில் காணப்படுவதை ஒத்த சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இருந்து அநுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்கள் காளை உருவத்தையும், சிங்கள மன்னர் சிங்க உருவத்தையும் தமது குலச் சின்னமாக அல்லது அரச சின்னமாக பயன்படுத்தியுள்ளனர் எனக் கூறலாம்.

நாணயங்களின் பின்பக்கத்தில் இரு மன்னர்களும் ஒரே வகையான சின்னங்களைப் பயன்படுத்தியமைக்கு இவை அநுராதபுர அரசை அல்லது நாட்டைக் குறிப்பதற்காக இருக்கலாம்.

சிங்கள மன்னர்கள் சிங்கத்தை தமது குலமரபாகவும், அரச சின்னமாகவும் கருதும் மரபு விஜயன் வருகை பற்றிய கதையுடன் இணைந்த ஒன்று. இச்சின்னத்தைப் பிற்கால சிங்கள மன்னர்களும் நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் காளையை அரச சின்னமாகவோ, புனித சின்னமாகவோ பயன்படுத்தியமைக்கு ஆதாரங்கள் காணப்படவில்லை. மாறாக அச்சின்னத்தை பௌத்த சிங்களப் பண்பாட்டில் ஒரு கலைவடிவாகவே பயன்படுத்தியுள்ளனர். இதற்கு உதாரணமாக பௌத்த ஆலயங்களில் வாசல் பகுதியில் காணப்படும் சந்திரவட்டக்கல்லில் மலர்கள், பறவைகள், மிகங்கள் முதலான சின்னங்களுடன் காளையும் ஒரு சின்னமாகச் செதுக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம் ஆனால் தமிழர் பண்பாட்டில் காளைப் புனிதச் சின்னமாகக் கருதும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

இதற்கு யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் காளை (நந்தி) ஒரு புனித சின்னமாகவும், அரச இலட்சனையாகவும் பயன்படுத்தி உள்ளதை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்நிலையில் அநுராதபுர அரசில் ஆட்சிபுரிந்த தமிழ்கள் வெளியிட்ட நாணயங்களில் காளை உருவம் பொறிக்கப்பட்டிருப்பது யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னரே அம்மரபு இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களால் பயன்படுத்தி வந்துள்ளதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளது.

அநுராதபுர இராசதானியில் முதல் 200 ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த பத்து தமிழ் மன்னர்கள் எண்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களுள் எல்லாள மன்னன் 44 ஆண்டுகள் (கி.மு 161---105) நீதி தவறாது ஆட்சி புரிந்தவன் எனப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. இவனே இலங்கையில் நீண்ட காலம் ஆட்சிபுரிந்த முதல் மன்



னனாவான். ஆயினும் தேரவாத பௌத்த மதத்தை முதன்மைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்கள் அம்மதத்திற்குப் பணி செய்த மன்னர்களின் வரலாற்றையே முதன்மைப் படுத்திக் கூறுகின்றன. உதாரணமாக 26 ஆண்டுகள் மட்டும் ஆட்சி செய்த துட்டகாமினி மன்னனின் வரலாற்றை 821 செய்யுளில் கூறும் மகாவம்சம் 44 ஆண்டுகள் ஆட்சி செய்த எல்லாள மன்னனின் வரலாற்றை வெறும் 21 செய்யுளில் மட்டுமே கூறுகின்றது.

இதனால் பாளி இலக்கியங்களில் இருந்து எல்லாளனின் வரலாற்றையும், அவனது வரலாற்றுப் பணிகளையும் குறைந்தளவுதானும் அறியமுடியவில்லை. ஆயினும் அவனது நீண்டகால ஆட்சிக்கு பலதரப்பட்ட மக்களின் ஆதரவு கிடைத்தமைக்கு அவன் மக்களுக்கு ஆற்றியபணிகளே காரணமாக இருந்துள்ளது எனக் கூறலாம். இதனால்தான் எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகாமினி அவன் இறந்த இடத்தில் சமாதி எழுப்பி அச்சமாதியை மக்கள் வழிபடவேண்டும் என ஆணை பிறப்பிக்க காரணமாகும்.

அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்ட சில நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


அவற்றுள் ஒரு நாணயத்தில் திஸபுரம் என்ற இடத்தில் ஆட்சி செய்த சடநாகராசன் என்ற வாசகம் காணப்படுகின்றது. இவற்றில் இருந்து தென்னிலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்தமையும், அவர்கள் நாணயங்கள் வெளியிட்டமையும், தெரியவந்துள்ளன. மகாவம்சத்தில் கூட எல்லாளன் ஆட்சிக்கு சார்பாக தென்னிலங்கையில் 32 தமிழச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்தது பற்றிக் கூறுகின்றது. தென்னிலங்கையில் சிற்றரசர்களாக இருந்த சிலரே பின்னர் அநுராதபுர மன்னர்களாக ஆட்சியைக் கைப்பற்றியதற்கு மகாவம்சத்தில் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இங்கே எல்லாள மன்னன் அநுராதபுரத்தில் ஆட்சியிலிருந்த காலமும் காளை உருவம் பொறித்த நாணயம் பயன்பாட்டிலிருந்த காலமும் ஏறத்தாழ ஒரே காலமாகக் காணப்படுகின்றது. இதனால் இந்நாணயத்தை எல்லாள மன்னன் அநுராதபுர மன்னனாக இருந்து வெளியிட்ட நாணயமாகக் கொள்வதே பொருத்தமாகும்.

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நன்றி: ப. புஸ்பரட்ணம்




15ஆம் ஆண்டு
வீரவணக்கம்
சமர்க்கள நாயகன்
பிரிகேடியர் பால்ராஜ்
பாலசேகரம் கந்தையா
கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு
(27.11.1965-20.05.2008)
மாரடைப்புக் காரணமாக 20.05.2008 அன்று சாவடைந்தார்.
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# வெடுக்குநாறி மலையிலிருந்து தையிட்டிக்கு!

மே 06, 2023

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். போலீசாரோடு முரண்பட்டதன் மூலம் அதை உணர்ச்சிகரமான ஒரு விவகாரமாக மாற்றியதும் அந்தக் கட்சிதான். அதன் விளைவாகத் தமிழரசுக் கட்சியும் உட்பட ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்பகுதிக்கு வரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நீதிமன்றம் தலையிடும் ஒரு நிலைமை உருவாகியது.



எனினும் போராட்டம் பெருமளவுக்கு கட்சிப் பிரமுகர்களின் போராட்டமாகவே இருந்தது. கொஞ்சம் தொண்டர்களும் காணப்பட்டார்கள். முன்னணி போலீசாரோடு முரண்பட்டதுங்கூட அதன் பாணியில் வளமையானது என்று சொல்லலாம். அரச படைகளோடு முரண்படுவதை ஒரு சாகசமாக முன்னணி செய்து வருகின்றது. இதுபோன்ற போராட்டங்களில் அவ்வாறான சாகசச் செயலுக்கும் ஒரு பொருள் உண்டு. அது போலீசாரை நிதானமிழக்கச் செய்யும். அதன் தக்கபூர்வ விளைவாக சிங்கள பௌத்த மயமாக்கல் மேலும் அம்பலப்படும் என்பது உண்மை. ஆனால் அறவழிப் போராட்டங்கள் மட்டுமல்ல ஆயுதப் போராட்டங்களும் சாகசங்களால் வெற்றி பெறுவதில்லை.





இதுவிடயத்தில் சில அடிப்படையான கேள்விகள் உண்டு. அந்த விகாரை திடீரென்று வானத்திலிருந்து தரைக்கு வரவில்லை. அது கடந்த நான்கு வருடங்களாக கட்டப்பட்டு வருகிறது. அதற்கு அத்திவாரம் வைத்தபோதே அது விவகாரம் ஆக்கப்பட்டது. அதைக் கட்டியெழுப்பும் வரையிலும் ஏன் தமிழ்க் கட்சிகள் பார்த்துக் கொண்டிருந்தன? இப்பொழுதும் விகாரை முழுமையாக திறக்கப்படவில்லை. அதற்கு கலசம் வைக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட பொழுதுதான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி களத்தில் இறங்கியது. நாவற் குழியிலும் அப்படித்தான்.

இதில் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அத்திவாரம் வெட்டப்படும் பொழுதும் அதைத் தடுக்க முடியவில்லை. அது கட்டி முடிக்கப்படுவதையும் தடுக்க முடியவில்லை. அது ஒரு மதம் சார்ந்த பொதுக் கட்டிடம் என்ற அடிப்படையில் அதை இனி அகற்றுவது மேலும் விவகாரமாகிவிடும். எனவே இங்கு தொகுத்துப் பார்த்தால் தெரியவருவது எனவென் றால், தமிழ்க் கட்சிகளின் இயலாமை தான். தமிழ்க் கட்சிகளின் நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியல்தான். (Event based)

நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டபொழுது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கு போனார். முரண்பட்டார். அதுபோலவே தையிட்டி விகாரை விவகாரத்திலும் தொடக்கத்திலேயே அது பிரதேச சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது விடயத்தில் 5 ஆண்டுகள் தூங்கிக் கிடந்துவிட்டு திடீரென்று விழித்த அரசியலை எப்படிப் பார்ப்பது ?

ஆயிரம் விகாரைகள் கட்டப் போவதாக ரணில் பல ஆண்டுகளுக்கு முன்பே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். அவர் சொன்னதைச் செய்கிறார். அது அரசுடைய தரப்பு. திணைக்களங்கள் அவர்களுடைய உபகரணங்கள். படைத்தரப்பு அதன் காவல்காரன். எனவே எல்லா வளங்களையும் கொட்டி அவர்கள் சொன்னதைச் செய்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு சொன்னதைச் செய்யும் சக்தி உடையவர்களா?




அதற்குத் தேவையான நீண்ட கால நோக்கிலான வழி வரைபடம் அவர்களிடம் உண்டா? இல்லையென்ற படியால்தான் அவர்கள் நிகழ்வுகளை மையமாக வைத்து எதிர்ப்பு அரசியல் செய்கின்றார்களா? அவர்கள் எதிர்த்த போதிலும் விகாரைகள், தாதுகோபங்கள் கட்டப்பட்டு கொண்டேயிருக்கின்றன.

தமிழ்க்கட்சிகளிடம் தெளிவான வழிவரைபடம் இல்லை என்பதைத்தான் தையிட்டி விவகாரம் நமக்கு உணர்த்துகின்றது. சிங்களபௌத்த மயமாக்கல் என்பது, தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதைச் சிதைக்கும் நோக்கிலானது. எனவே தமிழ்மக்கள் ஒரு தேசமாகத் திரண்டால்தான் அதைத் தடுக்கலாம். செல்வராஜா கஜேந்திரன் தையிட்டியில் வைத்து அதைச் சொன்னார். ஆனால் சொன்னால் மட்டும் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு யார் தடை ?

எனைய கட்சிகளைத் துரோகிகள், ஒட்டுக் குழுக்கள், கைக்கூலிகள் என்றெல்லாம் கூறிக்கொண்டு எப்படி ஒற்றுமைப்படுவது? இனி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவர முடியாது. ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு பிரதான நீரோட்ட கட்சியாக வளர்ச்சி பெற வேண்டும். அல்லது ஏனைய கட்சிகள் தாங்கள் ஒரு பெரிய கூட்டாக வளர்ச்சி பெற வேண்டும்.

எந்தக் கூட்டாக இருந்தாலும் அது தேசத்தை கட்டியெழுப்புவது என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட வேண்டும். நிச்சயமாக தேர்தல் வெற்றிக்கான கூட்டாக இருக்கக் கூடாது. அத்தகைய அடிப்படையில் கூட்டுக்களை உருவாக்கத் தவறியதன் விளைவாகத்தான் தேச நிர்மானத் திற்கான அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்குப் போக தமிழ் அரசியலால் முடியவில்லை.

தேசத்தை எப்படிக் கட்டியெழுப்புவது என்று சிந்தித்து அதற்குரிய வழி வரைபடத்தைத் தயாரித்து இருந்திருந்தால், சிங்கள பௌத்த மயமாக்கலை எதிர்கொள்வதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கியிருந்திருப்பார்கள். கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான், நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எதிர்ப்பு அரசியல் செய்ய வேண்டிவந்தது. அதை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்க வேண்டி வந்தது. இது ஒரு சட்ட விவகாரம் அல்ல. இது ஒரு அரசியல் விவகாரம். இதை அணுகுவதற்கு அரசியல் ரீதியான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். ஒரு கட்சியிடமும் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லை என்பதைத்தான் தையிட்டியில் குந்தி கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நமக்கு உணர்த்தினார்கள். சில தொண்டர்களைத் தவிர மக்களை அங்கே கொண்டுவர முடியவில்லை.

எனவே இங்கு தேவையானது என்னவென்றால், தேசத்தை நிர்மாணிப்பதற்குரிய கட்டமைப்புகள் எவை எவை என்று கண்டு அவற்றை கட்டியெழுப்புவது தான்.

இது பல ஆண்டுகளாக நான் எழுதிவரும் ஒரு விடயந்தான். ஒரு தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான கட்டமைப்புகள் எவையெவை? ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்களைப் பலப்படுத்துவதற்குரிய கட்டமைப்புக்களே அவை. ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்கள் எவை? நிலம் மொழி



இனம் அல்லது சனம் பொதுப்பண்பாடு பொதுப்பொருளாதாரம் போன்றவைதான். எனவே மேற்கண்ட அம்சங்களை பலப்படுத்தவும் பாதுகாக்கவும் தேவையான சுயகவசங்கள் என்று வர்ணிக்கத்தக்க கட்டமைப்புகளை புலம் பெயர் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்போடு உருவாக்கலாம். தேசத்தை நிர்மாணிக்க வேண்டும் என்று கூறும் ஒரு கட்சி அதற்கு தேவையான பொருத்தமான கட்டமைப்புகளை ஏன் இதுவரை உருவாக்கவில்லை ? அதற்கு பதில் வேண்டும்.

தையிட்டியில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக நிற்கவில்லை. கட்சிப் பிரமுகர்கள்தான் நின்றார்கள். அது ஒரு நிகழ்வு. அதுபோல பல நிகழ்வுகளை நாங்கள் கடந்த 14 ஆண்டுகளில் கண்டு விட்டோம். நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியலின் தோல்வியே இது. இப்பொழுது தேவையாக இருப்பது மூலோபாய ரீதியில் சிந்தித்து கட்டமைப்புகளை உருவாக்கி நீண்ட கால அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்புவதுதான். அவ்வப்போது நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்றும் அரசியல் எனப்படுவது தேசத்தை நிர்மாணிப்பதற்கு உரியதல்ல. தேசத்தை நிர்மாணிப்பது என்பது எதிர்ப்பு அரசியல் மட்டுமல்ல. அது கட்டியெழுப்பும் அரசியலுந்தான் (Constructive). எதைக் கட்டியெழுப்புவது? எதிர்க்கத் தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புவது.

இன்றைக்கு தையிட்டி. நாளைக்கு வேறொரு இடத்தில் வேறு ஒரு பௌத்த மதக் கட்டுமானத்துக்கு அத்திவாரம் வைக்கப்படும். அப்பொழுதும் அந்த நிகழ்வுக்கு எதிராக தமிழ்க்கட்சிகள் போராடக்கூடும். வழக்குத் தொடுக்கக் கூடும். போலீசோடு தள்ளுமுள்ளுப்படக்கூடும். வழக்கில் வெல்லவும்கூடும். ஆனால் அவை யாவுமே நிகழ்வுகள்தான். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தொடர் செயற்பாடுகளாக இருக்கப்போவதில்லை. சிங்களபௌத்த மயமாக்கலைத் தடுக்கப்போவதில்லை.

இப்பொழுது வெடுக்குநாறி மலையில் இருந்து கவனக் குவிப்பு தையிட்டிக்குத் திரும்பி விட்டது. அதுகூட சிங்கள பௌத்த மயமாக்கலுக்குச் சாதகமான ஒரு விடயம்தான். தமிழ்மக்களின் கவனத்தை, தமிழ்க் கட்சிகளின் கவனத்தை அவ்வப்போது வெவ்வேறு நிகழ்வுகளின் மீது திசை திருப்புவது. தமிழ் மக்களின் கூட்டுக் கவனத்தைச் சிதற விடுவது.



அண்மை வாரங்களாக தமிழ்ச் சமூகத்துக்குள் காணப்படும் சாதி ஏற்றத் தாழ்வுகளைக் குறித்தும் சாதி ஒடுக்குமுறைகளைக் குறித்தும் விமர்சனங்கள் வெளிவருகின்றன. தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையுந்தான். சமூக விடுதலை இல்லாத தேசிய விடுதலை, விடுதலையே அல்ல. இந்த விளக்கத்தோடு உள்ளூரில் காணப்படும் சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராட வேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் உண்டு. மத முரண்பாடு, சாதி முரண்பாடு நாவற்குழி, தையிட்டி வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை போன்ற அனைத்து அம்சங்களும் தமிழ் மக்களின் கவனத்தை அவ்வப்போது சிதறடிக்கின்றன. இவற்றிற்கு எதிராக தனித்தனியாக போராட்டத் தேவையில்லை. இவை அனைத்தும் தேச நிர்மானத்துக்கு ஏற்பட்ட சவால்களே. எனவே தேசத்தை ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது கட்டியெழுப்பும்போது இந்த விடயங்களை எதிர்கொள்வதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டு விடும்.

இது மே மாதம். 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மத்தியில் இருந்த ஒரு கருநிலை அரசு தோற்கடிக்கப்பட்ட மாதம். “யுத்தத்தை வெற்றி கொண்டவர்கள் நாங்கள்” என்று தையிட்டியில் வைத்து ஒரு போலீஸ் அதிகாரி கூறுகிறார். அதன் பொருள் இதுதான். நீங்கள் தேசமாக இருப்பதை நாங்கள் தோற்கடித்து விட்டோம் என்று பொருள். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்மக்கள் ஒரு தேசமாக மேலெழுவதைத் தோற்கடித்ததில் அரசாங்கத்தைவிடவும் தமிழ்க் கட்சிகளுக்கே பங்கு அதிகம். இதை மறுவளமாகச் சொன்னால் தமிழ்மக்களை ஓரளவுக்காவது தேசமாகத் திரட்டியது அரசாங்கந்தான். ஒடுக்குமுறைதான் தமிழ்க் கட்சிகளை ஓர் உணர்ச்சிப்புள்ளியில் சந்திக்க வைக்கின்றது. தையிட்டியில் அது நடந்தது. மு.திருநாவுக்கரசு, சிவத்தம்பி போன்றவர்கள் கூறுவதுபோல எதிரிதான் தமிழ்த் தேசியத்தின் பிரதான பலமா?


தியாகியாய், துரோகியாய், கைக்கூலியாய், ஒட்டுக் குழுவாய், வடக்காய், கிழக்காய், வன்னியாய், யாழ்ப்பாணமாய், கட்சியாய், சாதியாய், சமயமாய், இன்ன பிறவாய், சிதறிப்போகும் சிறிய தமிழ்மக்களால், அரசாங்கம் கட்டிக் கொண்டிருக்கும் விகாரைகளிலிருந்து ஒரு செங்கல்லைத்தானும் அசைக்க முடியுமா?

நன்றி: நிலாந்தன்



# இரண்டாம் உலகப் போரின் திரிபுபடுத்தப்பட்ட வரலாறும்: மேற்கத்தைய ஊடகங்களால் மழுங்கடிக்கப்பட்ட உண்மையும்!

(இவ்வாரம் உலகின் பல பாகங்களில் "வெற்றித் தினம்" - Victory in Europe Day - கொண்டாடப்பட்டு வருகிறது. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி தோல்வியடைந்து, சரணடைந்த வெற்றியை பறைசாற்றும் நாளாகும்.)




இரண்டாம் உலகப் போரின் இறுதியில் ஜெர்மனி தோல்வியடைந்து, சரணடைந்த செய்தி பரவி அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் 1945 மே 8ம் தேதி கொண்டாட்டங்கள் தொடங்கின. ஒவ்வொரு ஆண்டும் இந்த நாள் "வெற்றித் தினம்" (VE Day - Victory in Europe Day) என்று தற்போது கொண்டாடப்படுகிறது. சோவியத் ரஷ்யாவிலும் , கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மே 9 ம் தேதி வெற்றித்தினம் என்று பாரியளவில் கொண்டாடப்படுகிறது.

மேற்கும் - கிழக்குமாக, ஏன் முழு உலகமே ஓரணி திரண்டு போராடியே இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியை தோல்வியடையச் செய்தனர். ஆனால் இந்த வரலாற்று உண்மைகளை மழுங்கடித்து மேற்கத்திய ஊடகங்கள் ஒருபக்கச் சார்பாக வரலாற்றை திரிபுபடைத்து வெளியிடுகின்றனர்.

2020ம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் கூட்டு நினைவகம் மீதான போர்வெற்றி தினத்தின் 75 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட வாஷிங்டனின் அறிக்கையில், நாஜி ஜெர்மனியை வென்றவர்கள் அமெரிக்காவும் பிரிட்டனுமே என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளமை பாரிய வரலாற்று திரிபும் பொய்மையுமாகும்.

இதனை கண்டித்து ரஷ்யா கண்டனம் தெரிவிக்கையில், மறுக்கமுடியாத பாத்திரத்திற்கு மரியாதை செலுத்தும் தைரியமோ விருப்பமோ அமெரிக்க அரசுக்கு இல்லை. வெள்ளை மாளிகையின் அறிக்கையின் வாயிலாக மாஸ்கோ, வாஷிங்டன் "இருதரப்பு உறவுகளுக்கு ஒரு புதிய வரலாற்று பிரச்சினையாக மாற்ற வேண்டாம்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரில் சோவியத்- ரஷ்யாவின் தியாகத்தையும் பங்களிப்பையும் மேற்குலக ஊடகங்கள் (Western Media), குறிப்பாக அமெரிக்கா சார்பு ஊடகங்கள் எப்போதும் மறைத்தோ அல்லது குறைத்தே மதிப்பிட்டு வருகின்றன.

கோரமான நாஸி ஜெர்மனியை தோற்கடித்ததில் 27 மில்லியன் சோவியத் உயிர்களின் உன்னதத்தை - மதிப்பை கௌரவிக்காமல் தவறான வரலாற்றையே இந்த ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன.

நாஸி ஜெர்மனியை தோற்கடித்த இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவும், பிரிட்டனுமே ஜேர்மனியை தோற்கடித்த வெற்றியாளர்களாக இந்த ஊடகங்கள் காலங்காலமாக குறிப்பிட்டு வருகின்றன.

ஏன், கீழைத்தேச ஆசிய நாடுகளிலும் இந்த ஆங்கிலேய வரலாற்றையே கண்மூடிக் கொண்டு வரலாற்று புரிதலின்றி போதிக்கின்றனர்.
இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியன் செய்த பங்களிப்பை அமெரிக்கா தரப்பு ஊடகங்கள் வேண்டுமென்றே அங்கீகரிக்கமல், வரலாற்றை திரிபுபடுத்தி வெளியிடுகின்றனர்.

**வீரமிகு மார்ஷல் சூக்கோவ் :**

பெர்லின் மீதான இறுதி தாக்குதலுக்கு தலைமை தாங்கி, ஹிட்லரின் இராணுவ தலைமையகமான ரெய்க்ஸ்டாக்கில் (Reichstag) வெற்றிச் செங்கொடியை ஏற்றிய ரஷ்ய மார்ஷல் சூக்கோவ் (Marshal Zhukov) பற்றி இன்றைய வரலாற்று நூல்களில் சிறிதளவும் கூறப்படுவதில்லை.

அத்துடன் சோவியத் துருப்புகள் 1945 ஏப்ரலின் இறுதியில் புயலெனப் புகுந்து பெர்லினைக் கைப்பற்றிய வீரமிகு வரலாற்றை விட, ஆங்கில- அமெரிக்கர்களின் நோர்மண்டி (Normandy) தரையிறங்கியதையே பாரிய வெற்றியாக இந்த ஊடகங்கள் மிகைப்படுத்துவதையும் காணலாம்.


ஐரோப்பாவின் வெற்றி செய்தி ஏற்பட மூலகர்த்தா சோவியத் யூனியனின் மார்ஷல் கிரகோரி சூக்கோவ் ஆவார். இரண்டாம் உலகப் போரின் முடிவாக இத்தாலியில் 29 ஏப்ரல் அன்று நாஸிப் படைகள் சரணடையவும், இதன்பின் 30 ஏப்ரல் அன்று நாஸி தலைமையகம் 'ரெய்க்ஸ்டாக்' சோவியத் படைகளால் கைப்பற்றப்பட்டதற்கும் அவரின் நேரடிப் பங்களிப்பு அளப்பரியது.

மறைக்கப்பட்ட மார்ஷல் சூக்கோவின் வீரமிகு வெற்றிகரமான வரலாற்றுத் தகவல்கள் இன்றைய ஆங்கிலேய நூல்களில் இல்லை என்பது வருத்தத்திற்குரியது.

**யாரிந்த மார்ஷல் சூக்கோவ் ?**

சோவியத் யூனியனின் பிரபல்யமான மார்ஷல் சூக்கோவ் (டிசம்பர் 1, 1896-ஜூன் 18, 1974) ஜப்பானிய ஆக்கிரமிப்பை நிறுத்த, அன்றைய ரஷ்யத் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் செம்படையில் 1938முதல் மங்கோலிய-மஞ்சூரிய எல்லையில் ஜப்பானிய ஆக்கிரமிப்பை நிறுத்தும் பணியில், மார்ஷல் சூக்கோவ் சோவியத்தை காப்பாற்ற தொடர்ந்து போரிட்டு காசன் ஏரி போரில் வெற்றி பெற்றார்.





நாஸிகளின் ஜேர்மன் படைகளுக்கு எதிராக மாஸ்கோ, ஸ்டாலின்கிராட் மற்றும் லெனின்கிராட் ஆகியவற்றின் வெற்றிகரமான தாக்குதல்களுக்கு பொறுப்பேற்ற மார்ஷல் சூக்கோவ், இறுதியில் ஜெர்மனி பேர்லினில் வெற்றிகரமான செங்கொடியை ஏற்றியவரும் அவரே.

போருக்கு பின்னர் மாஸ்கோவில் மார்ஷல் சூக்கோவ் பல்வேறு இராணுவ பணிகளை மேற்கொண்டார். குருசேவ் ஆட்சிக்கு வந்த பிறகு, அவர் துணை அமைச்சராகி பின்னர் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு தலைமை தாங்கினார்.

மார்ஷல் சூக்கோவ் போருக்குப் பிறகும் ரஷ்ய மக்களுக்கு மிகவும் பிரபல்யமாக இருந்தார். 1939, 1944, 1945 மற்றும் 1956 ஆகிய ஆண்டுகளில் அவருக்கு சோவியத் யூனியனின் நாயகன் (Soviet Hero Award) விருது நான்கு முறை வழங்கப்பட்டது. மேலும் ஆர்டர் ஆஃப் விக்டரி (இரண்டு முறை) மற்றும் ஆர்டர் ஆஃப் லெனின் உட்பட பல சோவியத் விருதுகளைப் பெற்றார்.

அத்துடன் கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லெஜியன் டி"ஹானூர் (பிரான்ஸ், 1945) மற்றும் தலைமை தளபதி, லெஜியன் ஆஃப் மெரிட் (யு.எஸ்., 1945) உட்பட பல வெளிநாட்டு விருதுகளையும் பெற்றார். அத்துடன் 1969 இல் அவர் தனது சுயசரிதையான "மார்ஷல் ஆஃப் விக்டரி" எனும் நூலை வெளியிட்டு உலகம் போற்றிய வீரனாவார்.

ஓர் வரலாற்று நாயகனின் உண்மையான அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் புறக்கணித்து திரிபுபடுத்தப்பட்ட மேற்குலக ஊடகங்களின் செயலானது, எதிர்கால சந்ததியினருக்கு அப்பட்டமான பொய்களையே வரலாறு என போதிப்பது கவலைக்குரியதாகும், கண்டனத்துக்குரியதாகும்.

நன்றி: ஐங்கரன் விக்கினேஸ்வரா

## CORPORATION AND PERSONAL TAX & MORTGAGE

நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்!

சகல விதமான நிதி கணக்கியல் வருமானவரி சம்பந்தமான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள அழையுங்கள்

- Accounting
- Financial & Tax Services
- Personal & Corporation Taxes
- Bookkeeping
- Payroll
- New Business Registration
- Incorporation Open & Business Start Up

மோட்கேஜ் ஒழுங்குகள் செய்து தரப்படும்

1st and 2nd Mortgage
Private Mortgage
Refinancing



**Thilak Nallathamby**

Email: nthilak@ymail.com

**647 896 7252**

## அகரம் Akaram

### வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
### Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல் (Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும், தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call): **437.345.4203**



## DEBT SOLUTIONS GTA INC.

### CREDIT CARD & DEBT SOLUTIONS

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**

கடன் அட்டைகளினது தொல்லையா? வங்கிக்கடன் தொல்லையா? சம்பளத்தில் பறிமுதலா?
CREDIT CARD PROBLEMS, BANK LOAN PROBLEMS, WAGE GARNISHEE PROBLEMS

உங்கள் வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவது சதவீதத்தில் (PERCENTAGE) தீர்மானிக்கப்படமாட்டாது.

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், கடன் தொடர்பான சட்டப் பிரச்சனை.
COLLECTION COMPANIES PHONING AT WORK OR HOME, LAWSUITS

உங்கள் வருமானம் (INCOME), செலவு (EXPENSES), என்பவற்றை வைத்து உங்கள் கடன்களில் (DEBTS) சிறிய மாதாந்தத்தொகையை மட்டும் செலுத்தும் முறை மூலம் உங்கள் மொத்தக் கடன்களில் (TOTAL DEBTS) இருந்து விடுதலை பெறலாம்.

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்.
We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIG, Life Insurance, Stocks, Bonds & Shares)



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

DSC DEBT SOLUTION CANADA

Head Office Location:
10 Milner Business Court, Suite 300
Scarborough ON M1B 3C8
(One Block North of 401 on Markham)

2 Robert Speck Parkway, Suite 750
Mississauga ON, L4Z 1H8

2 Country Court Blvd, Suite 400
Brampton ON, L6W 3W8

**Tel: 647-274-2832**
www.debtsolutioncanada.ca

# பொதுவாக்கெடுப்பு அல்லது சர்வஜன வாக்கெடுப்பும் தமிழரும்!

01.05.2023



ஜனநாயகத்தின் அடிப்படை விதிமுறைகளில் ஒன்றானது தேர்தலும், வாக்களிப்பும். இவை இராண்டும் ஜனநாயக நாடுகளென கூறப்படும் மேற்கு நாடுகளிலும், வேறு சில ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளிலும் நடைமுறை படுத்தப் படுகின்றன. தேர்தலும், வாக்களிக்கும் முறைகளும், நாட்டுக்கு நாடு, நிலைமைகளிற்கு ஏற்ப உலகளவிய ரீதியில் வேறுபடும்.

தேர்தலுக்கும் வாக்களிப்பிற்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்னவென்றால், தேர்தல் என்பது பலரின் கருத்தைப் பெறுவதற்கான ஒரு முறைசாரா செயல்முறையாகும். மறுபுறம், வாக்களிப்பது என்பது ஒரு குறிப்பிட்ட தலைப்பில் மக்களின் கருத்தைத் தேடுவதற்கான ஒரு முறையான செயல்முறையாகும்.

இவ் அடிப்படையில், நாம் முதலில் தேர்தல் என்ற விடயத்தை ஆய்வு செய்வோமானால், தேர்தல்கள் - ஜனதிபதி, பாரளுமன்றம், மாநிலம், மாகாணம், பிராந்தியம் என பல வகையின் அடிப்படையில் நாட்டிற்கு நாடு வேறுபட்ட விதிமுறைகளை கொண்ட அடிப்படையில் நடாத்தப்படுகின்றன.

இதனது இயல்பு என்னவென்றால், வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள், மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள். மேலும் அவர்கள் பதவியில் நீடிப்பதனால் அவர்கள் மீண்டும் மக்கள் ஆணையைப் பெற வேண்டும். இவ் சந்தர்பத்தை மேற்கு நாட்டு வாக்களர் நன்றாக பாவிப்பது வழமை. தேர்தல் வேளைகளில் மக்களிற்கு கொடுத்த ஆணையை மீறும் நிலையில், அவர்கள் மீண்டும் தேர்தலில் வேட்பளராக முன்னிற்கும் வேளையில், அவர்களை மக்கள் நிராகரிப்பதை மேற்கு நாடுகளில் காணகூடியதாகவுள்ளது.

பலவீனமான ஆட்சியைக் கொண்ட பல நாடுகளில், அதாவது அசாதாரண ஜனநாயகம் அல்லது சர்வாதிகார வழிமுறைகள் மூலம், தன்னிச்சையான முறையில், சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யாத தேர்தல்கள் முறையில் தேர்தல்கள் நடைபெறுவதையும் பல நாடுகளில் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

'வாக்களிப்பு' என்பதனை ஆய்வு செய்வோமானால், வாக்களிப்பவர்கள் விவாதங்கள் அல்லது பொது விவாதங்களின் அடிப்படையில் தேர்தல் பிரச்சாரங்களைத் தொடர்ந்து ஒரு கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக செயற்படுத்தும் முறையாகும். இது - ஒற்றை வாக்களிப்பு, இரட்டை வாக்களிப்பு போன்ற விதிமுறைகளின் அடிப்படையில் நடைபெறுகிறது. இவை யாவும் இரகசிய முறையிலே வாக்களிக்கப்படும்.

இதேவேளை வாக்கெடுப்பு என்பதனை ஆராயும் வேளையில், இதுவும் நாட்டுக்கு நாடு மாறுபட்ட அடிப்படையில, கட்டாய வாக்கெடுப்பு (Mandatory Referendum), விருப்ப வாக்கெடுப்பு (Optional Referendum) சர்வசன, பொது போன்ற பலவிதப்பட்ட சொற் பிரயோகத்தின் அடிப்படையில் நடைபெறுகின்றன. இவ் வாக்கெடுப்பு என்பது கூடுதலாக 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பதிலை கொண்டதாக காணப்படுகிறது.

"வாக்கெடுப்பு" என்ற சொல் பல்வேறு அர்த்தங்களை உள்ளடக்கியது, மேலும் நிலைமைகளை பொறுத்து சொற்கள் வேறுபட்டவை. ஒரு வாக்கெடுப்பு கட்டுப்பாடாகவோ அல்லது ஆலோசனையாகவோ இருக்கலாம். சில நாடுகளில், இந்த இரண்டு வகையான வாக்கெடுப்புக்கு வெவ்வேறு பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ் நிலையில், இவை உலகில் எப்படியாக பார்க்கப்பட்டது பார்க்கப்படுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். உலகில் சில அரசியல்வாதிகள் அரசியல் செயற்பாட்டாளர்களிற்கு இவ் விடயங்களில் சரியான புரிந்துணர்வோ அறிவோ அனுபவமோ உள்ளதாக தெரிவாதில்லை. ஆனால் அரசியல் பேசுவது போன்று இவற்றையும், உண்மை நிலைக்கு மாறாக கூறி மற்றவர்களையும் குழப்புகிறார்கள் என்பது உண்மை.

வடக்கு கிழக்கு வாழ் மக்கள், கடந்த பதின் நான்கு வருடங்களாக திக்கு தெரியாத காட்டில் நடைபெறும் சிலருடைய களியாட்டங்களை பார்த்து சலித்து, நம்பிக்கையை இழக்காது, என்று விடிவெள்ளி தோன்றும் என்ற எதிர்பார்ப்பில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## மக்கள் ஆணை

வடக்கு கிழக்கு வாழ் மக்கள், 1948ம் ஆண்டு முதல் வேறுபட்ட தேர்தல்களில் வாக்களித்து களைத்து போயிருந்தாலும், 1977ம் ஆண்டில், யாரும் நினைக்க முடியாத பெரும்பான்மை வாக்குகளால், தமது வெளிவாரியான சுயநிர்ணய உரிமையை அங்கிகரித்தனர் என்பது சரித்திரம்.

அத் தேர்தலை, எதிர்கொண்ட கட்சியான தமிழர் கூட்டணி, மக்கள் ஆணையிலிருந்து விடுபட்டு செல்ல முயற்சித்த வேளையில், முப்பது வருட காலமாக ஓர் ஆயுத போராட்டம் மூலம், மக்கள் கொடுத்த தேர்தல் ஆணையை, தமிழீழ விடுதலை புலிகள் நிறைவேற்றியிருந்தனர். இவ் நடைமுறை அரசு தமிழர் தாயக பூமியான வடக்கு கிழக்கில் சிறிலங்கா அரசிற்கு நிகராக பல கட்டமைப்புக்களை உள்ளடக்கியிருந்தது என்பதும் சரித்திரம்.



அரைத்த மாவை மீண்டும் அரைக்க விரும்பாத காரணத்தினால், அவ் நடைமுறை அரசு முடிவிற்கு வந்துள்ளதை தொடர்ந்து, 2009ம் ஆண்டு மே மாதம் முதல் இன்று வரை, நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும், நடக்கும் களியாட்டங்கள் பற்றி இங்கு குறிப்பிடுவதை தவிர்கிறேன்.

நாட்டில் புதிய கட்சிகள் உருவாக்கப்பட்டு, செயல் வடிவம் அற்ற புதிய புதிய அரசியல் சிந்தனைகள், சித்தாத்தங்கள் பேசப்படுகின்றது. இதே வேளை புலம்பெயர் தேசத்தில் - புதிய புதிய அமைப்புக்கள், தேர்தல்கள் வாக்களிப்புக்கள், கையெழுத்து வேட்டைகளும் நடைபெறுகின்றன.

இன்றுவரை - நாட்டில் அரசியல்வாதிகளினாலும், புலம்பெயர் தேசத்து அமைப்புக்களினாலும், தமிழ் மக்கள், பாதிக்கப்பட்ட மக்களிற்கு கிடைத்தது ஒன்றுமில்லை.

அன்று நாட்டில், அரசியல் அனுபவம் சாணக்கியம் கொண்ட எமது அரசியல்வாதிகளினால் "வட்டுக்கோட்டை தீர்மானம்" என்ற அரசியல் சித்தாத்தை உருவாகினார்கள். அதனை அடுத்து 1977ம் ஆண்டு சிறிலங்காவின் பாரளுமன்ற தேர்தலில், வட்டுகோட்டை தீர்மானத்தை அடிப்படையாக கொண்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழர் கூட்டணியினர் மக்கள் முன் வைத்து, தமிழ் மக்களின் வெளிவாரீயான சுயநிர்ணய உரிமைக்கு மக்கள் மிக பெரும்பான்மையாக வாக்களித்தனர்.

சில வருங்களிற்க முன் புலம்பெயர் தேசத்தில், வட்டுகோட்டை தீர்மானத்திற்கு வாக்கிளிக்குமாறு சிலர் முன் வைத்தனர். இங்கு யாருக்கும் புரியாத புதிர் என்னவெனில், இவ் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு புலம்பெயர் தேசத்தில் வாக்களித்து, என்ன பலன் என்பதை, இதை முன்னின்று நடத்தியவர்கள் விளங்கி கொள்ளவில்லை.

இதே போல் வட்டுகோட்டை தீர்மானம் இரண்டு என இன்னுமொரு வேலை திட்டம் நிறைவேறி முடிந்தது. இவை பற்றி எழுதுவதனால் பக்கக் கணக்கில் எழுதலாம்.

## சுயநிர்ணய உரிமை

இதனை அடுத்து ஒரு பகுதியினர், லட்ச கணக்கான கையெழுத்தை சேகரித்த அவ் கையெழுத்து மனுவை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பினால், ஐ.நா. உடன் தமிழர் விடயத்தில் கவனம் கொள்வார்கள் என்று கூறி, கையெழுத்து வேட்டை நடைபெற்று இன்று ஏறக்குறைய ஐந்து ஆறு ஆண்டுகளை தண்டியுள்ளது. ஐ.நா.வில் வழமையான மனித உரிமை சபை, குழு கூட்டங்கள் (Treaty bodies and special rapporteurs), தீர்மானம் தவிர்ந்து, தமிழர் விடயத்தில் வேறு ஒன்றும் நடைபெற எந்த வாய்ப்பும் இல்லை.

நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் மேற்கொள்ளப்படும் பெரும்பாலான செயற்பாடுகள், ஓர் பாடசாலையின் இல்ல விழையாட்டு போட்டி போன்றே நடைபெறுகிறது. இவை யாவும் தசாப்தங்களாக அரசியல் உரிமையற்று, இலங்கைதீவில் வாழும் தமிழ் மக்களிற்கு, இன்று வரை எதை சாதித்துள்ளது? மேலாக, 1948ம் ஆண்டில் கிழக்கு மாகணத்தில் கல்லோயவில் ஆரம்பமாகிய சிங்கள குடியேற்றம், சிங்களமயம், இன்று காங்கேசன்துறை கீரிமலை வரை வியாபித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமை சபையில் ஆரம்பத்திலிருந்தே, அதவாது 2006ம் ஆண்டு முதல் இதனது நிகழ்ச்சி நிரலில் சுயநிர்ணய உரிமை என்று ஒரு விடயம் அறவே கிடையாது. இவ் நிலையில், வேறு நிகழ்ச்சி நிரலிற்கு கீழ், தமிழ் மக்களின் சுயநிர்ண உரிமை பற்றி உரையாற்றுவது பிரயோசனம் அற்ற ஓர் விடயம். இப்படியாக அரசியல்வாதிகள் உரையாற்றிய பின்னர், ஊடகங்களிற்கு கொடுத்து விளம்பரம் செய்வதனால், பெரும்பாலன மக்கள் ஐ.நா.மனித உரிமை சபை மூலம் ஏதோ அரசியல் தீர்வு தமிழ் மக்களிற்கு கிடைக்கவுள்ளதாக எண்ணுகின்றனர்.

இது மிக தவறான செயற்பாடு. இது மக்களை ஏமாற்றும் முன்னெடுப்புக்கள். இதற்குள் சிலர் பணம் வாசூலிப்பதற்காக ஐ.நா. மனித உரிமை சபை மூலம் தமிழீழத்தை பெற்று எடுக்கலாமென மக்களை ஏமாற்றும் கபடமான நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றனர்.

இப்படியான செயற்பாடுகளினால், தமிழ் மக்களிற்கு ஏதோ அரசியல் தீர்வு ஐ.நா.மனித உரிமை சபை மூலம் கிடைக்க போவதாக பலர் எதிர்பார்த்துள்ளனர். நாம் உண்மையை சொல்லி எமது செயற்பாடுகளை முன்னெடுக்கவிடில் மேலும் மேலும் நாம் பல தோல்விகளையே சந்திப்போம். இதனால் மக்கள் வேறுப்பும் சலிப்பும் அடைவார்கள். இது சிங்கள பௌத்த அரசினால் நன்றாக திட்டமிட்ட செயல்.

## நடைமுறை அரசு

ஒரு நாட்டில் ஆட்சியிலிருந்த அரசை அல்லது அரசாங்கத்தை, அவ் நாட்டில் மக்கள் புரட்சியால் அல்லது இராணுவ புரட்சியால் அல்லது வெளிநாட்டு படைகளினால் ஆட்சி கவிழ்க்கப்பட்ட அரசாங்கத்தை விரட்டியடிக்கும் பொழுது, அவ் அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்கள் வேறு ஒரு நாட்டில் தஞ்சம் புகுந்து நடத்துவதை நாடுகடத்தப்பட்ட அரசாங்கம் (சுருக்கமாக Government in Exile - GIE) என பொருள்படும். அவர்கள் தம்மை துரத்தியவர்கள் ஆட்சியில் இல்லாத பொழுது, நாடு திரும்பி தமது நாட்டில் தமது அரசை மீண்டும் நிறுவுவார்கள்.

நாடுகடத்தப்பட்ட அரசாங்கம் என்பது ஒரு அரசியல் குழுவாகும். அது ஒரு நாடு அல்லது அரை-இறையாண்மை மாநிலத்தின் சட்டபூர்வமான அரசாங்கம். ஆனால் சட்டப்பூர்வ அதிகாரத்தை செயல்படுத்த முடியாது, அதற்கு பதிலாக ஒரு வெளிநாட்டில், நாடுகடத்தப்பட்ட அரசாங்கங்கள் அமைத்து, தாம் ஒரு நாள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பி, முறையான அதிகாரத்தை மீண்டும் பெற்று கொள்ளும் வகையில் செயற்படுவார்கள்.

இதற்கு பல ஆபிரிக்கா நாடுகள் ஊதரணமாக காணப்பட்டாலும், இராண்டாம் உலக மாகயுத்தத்தை தொடர்ந்து பிரான்ஸில் ஆட்சியிலிருந்தவர்கள், பிரித்தானிய சென்று, அங்கு தளபதி சாள்ஸ் டி கொல்லின் தலைமையில் ஓர் நாடுகடத்தப்பட் அரசாங்கத்தை (Free French Forces) எனப்படும் நாடுகடத்தப்பட்ட அரசாங்கத்தை உருவாக்கியிருந்தார்கள். இறுதியில் வெற்றிபெற்று நாடு திரும்பி பிரான்ஸில் தமது ஆட்சியை நிலை நிறுத்தினார்கள்.

இதே போல் ஆகஸ்ட் 1990ல் ஈராக்கின் ஜனதிபதி சதாம் குசேயின் தனது இராணுவத்தை அனுப்பி குவைத் நாட்டை கைப்பற்றிய பொழுது, குவைத்தில் ஆட்சியிலிருந்தவர்கள், சவூதி அரேபியவில் தஞ்சம் புகுந்து, தமது நாடுகடத்தப்பட்ட அரசாங்கத்தை நடத்தினர்கள். அவர்கள் மார்ச் 1991ல் அமெரிக்காவின் தலைமையில் கூட்டுபடைகள் ஈராக்கிய படைகளை வெற்றி கொண்டதை அடுத்து, குவைற்றிக்கு திரும்பி தமது அரசை மேற்கொண்டு நடத்துகின்றனர்.

இதேபோல் முன்னாள் ஈரானியா அரசன் ஷாவின் புதல்வர், றேசா பாலாவி அமெரிக்காவில் வாழ்ந்து வந்தாலும், ஓர் நாடு கடந்தப்பட்ட அரசாங்கத்தை, பிரான்ஸில் பதிவு செய்து இன்றும் நடாத்தி வருகிறர். இவர் மிக அண்மையில் ஈரானிற்கு பரம எதிரியான இஸ்ரேவிலிற்கு சென்று, அவ் அரசாங்கத்திடம் தமது செயற்பாடுகளிற்கு அவர்களது உதவியை கோரியுள்ளார்.

மேலே கொடுக்கப்பட்ட நாடுகடத்தப்பட்ட அரசாங்கங்களிற்கு சற்று மாறுபட்ட நிலையில் நைஜீரியாவில் பையபோற (Republic of Biafra) விளங்குகிறது.

## பையபோற குடியரசு

நைஜீரியாவில் கிழக்கு பிராந்தியத்தில் வாழும் பெரும்பான்மை ஈக்கோ இனத்தவர்கள், நைஜீரியா நாட்டிலிரந்து பிரிந்து, பையபோற குடியரசை 1967ம் ஆண்டு உருவாக்கினர்கள். இவ் புதிய நாட்டை, பல ஆபிரிக்கா நாடுகள் அங்கீகரித்திருந்ததுடன் பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல், நோர்வே, இஸ்ரேல், சிம்பாபே (அப்போதைய ரோடிசியா), தென்னா ஆபிரிக்கா, வத்திக்கான் போன்ற நாடுகள் பையபோற குடியரசை அங்கீகரிக்காவிடிலும், இவ் புதிய நாட்டிற்கு இராணு, ராஜதந்திர உதவிகளை வழங்கினர்கள்.

துர்அதிஸ்டவசமாக அவ்வேளையில் நைஜீரியாவில் ஆட்சியிலிருந்த இராணுவ தளபதி ஜகுபூ கோ போன் (General Yakubu Gowon) தனது இராணுவ பலத்தினால், பையபோற குடியரசை, 1970ம் ஆண்டு இல்லாது அழித்தார். இவ் தளபதி ஜகுபூ கோ போனை, 2007ம் ஆண்டு யூன் மாதம், வீயன்னாவில் நடைபெற்ற ஐ.நா.மாநாட்டில், நேரில் சந்தித்து உரையாடியுள்ளேன். (படம் இணைக்கப்பட்டுள்ளது).

பையபோறவில் ஆட்சியிலிருந்தவர்கள் தற்பொழுது அமெரிக்கவை தளமாக கொண்டு, ஓர் நாடுகடத்தப்பட்ட அரசாங்கத்தை நடத்தி வருகிறார்கள். ஆனால் இவர்கள் சரித்திரம் சோகம் நிறைந்தது மட்டுமல்லாது, படிப்படியாக சர்வதேசத்தில் இவர்களது விடயங்கள் முக்கியத்துவம் குறைந்து செல்வதை காணுகிறோம்.

பையபோற குடியரசின் தோற்றத்தையும் அழிவை, சில விடயங்களில் இலங்கைதீவில் வடக்கு கிழக்கில் ஏறக்குறைய இராண்டு தசாப்தங்களிற்கு மேலாக திகழ்ந்த எமது தமிழீழ நடைமுறை அரசின் சரித்திரத்துடன் ஒப்பிடலாம்.

இவ் நாடு கடத்தப்பட்ட அரசாங்கங்களிற்கு வேறுபட்டதாக, நாடுகடந்த அரசாங்கம் என்ற பெயரில், விடுதலையை வேண்டி நிற்கும் மாறுபட்ட இன மக்கள், தாம் அரசியல் தஞ்சம் புகுந்த நாடுகளில், நாடு கடந்த அரசுகளை உருவாக்கி நடாத்தி வருகின்றனர். நாடுகடந்த அரசாங்கம் என்னும் விடயத்தில் மேலும் உப குழுக்கள் உண்டு.

இவர்களது சிந்தாந்தம் என்னவெனில் - ஒரு அரசு இல்லாத இனம், தமது விடுதலை போராட்டங்களில் தமது பிரதேசங்களில் தோல்லி கண்டுள்ள நிலையில், தற்காலிகமாக ஒரு நாட்டிற்கு நகர்ந்து, அங்கு நாடுகடந்த அரசை நிறுவி, அதன் மூலம் ராஜதந்திர பரப்புரை வேலை திட்டங்களை மேற்கொள்வது. இவை வெற்றி காணும் நிலையில், அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்கு திரும்பி, அங்கு ஓர் நிஜமான அரசை உருவாக உறுதுணையாக நிற்பார்கள்.

இவற்றில் சில, இனங்களின் நாடுகடந்த அரசாங்கள், சில நாடுகளின் அங்கீகரம் பெற்று அவர்கள் உதவியுடன் நடாத்துகின்றனர்.

## நாடுகடந்த அரசு

இதற்கு தீபெத்தின் ஆண்மீக தலைவர் டலாலா லாமா நல்ல ஊதரணமாக இந்தியாவில் காணப்படுகிறார். இவர் உலகளவிய ரீதியில் தனது பயணங்களை மேற்கொண்டு, வேறுபட்ட நாட்டின் தலைவர்களை சந்தித்து, தமது இனத்திற்கான விடுதலையை நோக்கிய ஆதரவிற்கான செயற்பாடுகளை மேற்கொள்கிறார். இதே போல் பல நாடு கடந்த அரசாங்கங்கள், பாரீய உயர்மட்ட பரப்புரைகளை மேற்கொண்டு, தமது விடுதலைக்கான நாடுகளின் அக்கீகரத்தையும் பெற்று வருகின்றனர்.

இப்படியாக உலகில் மற்றைய இனங்களின் நாடுகடந்த அரசாங்கம் பயணிக்கும் வேளையில், தமிழர்களது நாடுகடந்த அரசு ஆரம்பிக்கப்பட்டு இன்று பதின் மூன்று ஆண்டுகளாகியுள்ளது. உண்மையான ஓர் நாடுகடந்த அரசாங்காத்தால் செய்யப்பட வேண்டிய வேலை திட்டங்களை, இவர்களால் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பலரால் முன்வைக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கில், இரண்டு தசாப்பதங்களிற்கு மேலாக ஓர் நடைமுறை அரசு (De-Facto) திகழ்ந்த வேளையில், அங்கு பொறுப்பாளர்கள் தவிர்ந்த வேறு எந்த பதவிகளும் - ஜனதிபதி, பிரதமர், அமைச்சர்கள் போன்று யாருக்கும் வழங்கப்பட்டது கிடையாது.

ஆனால் தமிழர்களது நாடுகடந்த அரசிற்கு - பிரதமர், அமைச்சர்கள், சபாநாயகர் போன்ற பதவிகள் கொடுக்கப்பட்டுள்ளதனால், தமிழ் மக்கள் இவ் அமைப்பை ஏதோ தானோ என்று எண்ணினார்கள். ஆனால் இது, “கதை பல்லக்கு தம்பி கால் நடையாக செல்கிறது”.

இன்றுவரை இந்த நாடுகடந்த அரசை எந்த நாடும் அங்கிகரரித்தோ அல்லது இவர்களை அழைத்து தமிழர்களது பிரதிநிதிகளாக உத்தியோகபூர்வமாக உரையாடியதோ கிடையாது. புதிதாக உருவாகிய தென் சூடான், இவர்களை கௌரவப்படுத்த முன்வந்த நிலையில், அங்கு நடந்தேறிய சம்பவம் பற்றி இங்கு எப்படி என்னால் எழுத முடியும்!

சில வருடங்களிற்கு ஒரு முறை, அவர்களது அங்கத்தவர்களை தேர்தெடுப்பதற்காக தேர்தல் நடைபெறுகிறது. இதனை தொடர்ந்து சில மாதங்களிற்கு ஒருமுறை நாடு நாடாக காணொளி (சூம் Zoom) மூலம் கூட்டங்கள் நடைபெறுகிறது. இவ் அமைப்பு உருவாகிய காலம் முதல் இன்று வரை, ஒரே நபர் பிரதமராக கடமையாற்றுவதுடன், இவர் வாழும் நாட்டிலிருந்து இவர் வேறு நாட்டிற்கு செல்ல முடியாத காரணத்தினால், சில சந்தர்பங்களில் பாரீய போக்குவரத்து செலவுடன், அவர் வாழும் நாட்டிலேயே கூட்டங்கள் நடைபெறுகிறது.

இவர்களுடன் எனக்கு எந்தவித தனிபட்ட கோபதாகங்கள் ஒரு பொழுதும் கிடையாது. இன்று காலம் கடந்து இவற்றை எழுதுவதன் முக்கிய காரணம், நாட்டிலும் புலம்பெயர் தேசத்திலும் மக்கள் எதிர்பார்பது போல், தமிழர்களது நாடுகடந்த அரசு எதையும் செய்யவில்லை என்ற ஆதங்கம், விடுதலை வேட்கை கொண்ட யாவருக்கும் உள்ளது.

ஏழு தசாப்தங்களிற்கு மேலாக சிங்கள பௌத்த அரசினால் ஏமாற்றப்பட்ட மக்களிற்கு, இவ் அமைப்பு ஏதோ விமோசனம் பெற்று கொடுப்பார்கள் போன்ற தோற்றத்தை கொடுத்து, இவர்களே அவ் மக்களிற்கு ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளார்கள் என்பதே உண்மை.

ஐக்கிய நாடுகள் சபை விடயத்தில் லட்சகணக்கான கையெழுத்துடன் மனு சமர்பித்தால், ஐ. நா. வை தலையீட வைக்க முடியுமென கையெழுத்து சேகரித்த இவர்கள் - எங்களுக்குள், காதோடு காதாக, இது உண்மையில் மக்களை விழீப்பாக வைக்கும் வேலை திட்டமென கூறி, என்னிடமும் கையெழுத்து பெற்றார்கள். இது இன்று பழைய கதையாகியுள்ளது.

## பொதுவாக்கெடுப்பு

தற்பொழுது பொதுவாக்கெடுப்பு என்று ஒரு படலம் ஆரம்பமாகியுள்ளது. இவை யாவும் மக்களை கற்பனை உலகிற்கு முன்னெடுத்து செல்லும் வேலை திட்டங்களேயே அல்லாது, சிறிலங்கா பௌத்த அரசு பீதிகொள்ளும் அளவிற்கோ அல்லது இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துமளவிற்கு அங்கு ஒன்றும் விசேடமாக நடைபெறவில்லை. பொதுவாக்கெடுப்பு பற்றி இவர்கள் கூறும் ஊதரணங்கள், அரசியல் தெரிந்தவர்களிடம் செல்வாக்கு பெற முடியாது.

கனடாவில் மொன்றியல் மாநிலம் தனி நாடாக பிரிவதற்கு இரண்டு தடவை கனடிய அரசாங்கமே வாக்கெடுப்பபை நடத்தியது. அதை மக்கள் ஏற்காத காரணத்தினால் தோல்வி கண்டது. இதே போல் பிரித்தானியாவிலிருந்து ஸ்கோட்லாந்து தேசம் தனி நாடாக பிரிவதற்கு பிரித்தானிய அரசாங்கமே ஒரு வாக்கெடுப்பை நடத்தியது. இது பிரித்தானிய அரசாங்கத்தின் பலத்த பிரச்சாரத்தால் தோல்வியானது. ஆனால் ஸ்கோட்லாந்து மக்கள் இன்னுமொரு தடவை இதை நடத்துமாறு வேண்டி நிற்கிறார்கள்.

ஏரித்தீரியா, கிழக்கு தீமோர், தென் சூடான் ஆகிய மூன்று நாடுகளில் நடைபெற்ற வாக்கெடுப்பபையோ, அல்லது பப்புவா நியூ கினியிலிருந்து போகன் வில் நடைபெற்ற வாக்கெடுப்புக்கள் ஐ.நா.வழிவகுத்து கொடுத்த பாதைகள். இவற்றை இவர்களால் நடத்தப்படும் வாக்களிப்புடன் ஒத்து பார்க்க முடியாது.

கோசவிவின் வாக்கெடுப்பு என்பது பல நாடுகளின் ஆதரவுடன் நடைபெற்று, இன்று அவர்கள் ஐ.நா. அங்கத்துவம் பெறவிடிலும், நூற்றுக்கு மேற்பட்ட ஐ.நா.அங்கத்துவ நாடுகள் கோசவாவை அங்கீகரித்துள்ளது.

இதேவேளை, ஸ்பெயினில் கத்தலோன், ஈராக்கில் குருடிஸ்தான், இத்தாலியில் லோம்பாடி மற்றும் வேனிற்ரோ மக்களால் நாட்டுக்குள்ளேயே நடத்தப்பட்ட வாக்கெடுப்பை, அந்த நாட்டு மத்திய அரசாங்கமோ அல்லது சர்வதேசமோ, அங்கீகரிக்கவோ ஆதரவு வழங்கவோ இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆகையால் தமிழர்களது நாடுகடந்த அரசு - விளையாட்டு மைதானங்களிலும், விழாக்களிலும், மக்கள் நிறைவாக காணப்படும் சமய விழாக்களிலும் கூட்டங்களிலும் நடதப்படும் வாக்கெடுப்போ, பொதுவாக்கெடுப்பு, ஏழு தசாப்தங்களிற்கு மேலாக அரசியல் உரிமைக்கு போராடி வரும் மக்களிற்கு, இது உருப்படியான செயல் திட்டம் அல்ல. “யார் குத்தினாலும் அரிசி ஆகுவதை” மக்கள் நிட்சயம் வரவேற்பார்கள். ஆனால் மக்களில் சாவாரி செய்யும் செயற்பாடுகளை இனியும் வாய் மூடி அனுமதிப்பது, அழித்து கொண்டிருக்கும் இனத்திற்கு நாம் செய்யும் தூரோகமாகும்.

தற்பொழுது எம்முடம் உள்ள ஆயுதங்கள் இரண்டு. ஒன்று உண்மை, மற்றையது யாதார்தம். இவை இராண்டையும் மேலும் நாட்கள் கடத்தது பாவிப்போமானால், தமிழினம் இலங்கைதீவில் அழிந்தே போகும்.

1977ம் ஆண்டு, பெரும்பான்மை தமிழ் மக்களால் கொடுக்கப்பட்ட, வெளிவாரீயான சுயநிர்ணய உரிமைக்கான ஆணையை, ஏன் இவர்களால் முன்னெடுத்து செல்ல முடியாதுள்ளது என்பது பலராலும் கேட்கப்படும் வினா (முற்று)

நன்றி: ச. வி. கிருபாகரன், பிரான்ஸ்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# சாகாத பிணங்கள்!

## உண்மைக் கதை

**இன்று எமது வரலாற்று பகைச் சக்தியான சிங்களப் பேரினவாதம் தற்போது தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நமது மக்களுக்குச் செய்யும் இரத்தத்தை உறைய வைக்கும் கொடுமைகள் நாளாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.**

**இதேபோலவே தமிழீழ மண்ணை முழுமையாக விழுங்கிய இந்தியப் படையெடுப்பு. எமது போராட்டத்தின் இருண்ட காலமாக என்றைக்கும் இருக்கும் அந்த ஆக்கிரமிப்புக் காலகட்டத்தின் போது நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளை கதை வடிவில் – உணர்வு பூர்வமாக நமது தமிழீழ எழுத்தாளர்கள் எமது இனத்திற்கு ஏற்பட்ட கொடுமைகளின் வரலாற்றுப் பதிப்பாக – நூல் வடிவில் வெளியிட்டுள்ளனர். முதலாவது தொகுதி "அம்மானைக் கும்பிடுறானுகள்...!" என்ற பெயரிலும். இரண்டாவது தொகுதி "வில்லுக்குளத்துப் பறவை" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டுள்ளன.**

**சிங்கள வெறிப்படை ,**


**"அமைதிப் படை" – ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்துச் செயற்பட்டதில் தம்மைப் பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து. அவர்களைக் காப்பாற்றத் துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள்...**

**எல்லாமே நாம் வாழ்ந்த காலத்தின் உண்மைகளை நெஞ்சிற் பதியுமாறு நெருக்கமாய்ச் சொல்கின்றன.
அவற்றில்... இருந்து.**

தமிழீழத்தில்...

மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்ததுபோல்...

நவசோதி அழுதுகொண்டே இருந்தாள்.



## சாகாத பிணங்கள்!

1987 ஒக்ரோபர் 19.

காலை 10 மணிக்கு ராசம்மா தண்ணீர் அள்ளிவரக் கிணற்றடிக்குப் போனவள், 12 மணி ஆகியும் இன்னும் திரும்பவில்லை.

வீட்டிலிருந்து 150 யார் தூரத்தில்தான் தோட்டக்காணி – அங்கே தான் கிணறு.

வெளியே வரமுடியாதவராய் வேலி மறைப்பில் நின்றபடியே, சொக்கலிங்கம் ஐந்து பத்துத் தடவைகள் வீதியை எட்டிப் பார்த்தார் – அவள் இல்லை.

முற்றத்தில் நவசோதி விசும்பி அழுவது கேட்கிறது.

"சும்மா இரவ புள்ள... உங்கின இந்திய ஆமிக்காரனுகளைப் பார்த்துட்டு அம்மா ஆரின்ர வீட்டுக்குள்ளயாவது போய் இருப்பா."

மகளையும் தேற்றி – தன்னையும் தேற்றிக்கொண்டார் சொக்கலிங்கம்.

ஆனாலும் –

நெஞ்சு அடித்துக்கொண்டது. வெளியே இந்தியப் படையின் "ஜீப்" வண்டிகள் உறுமிப் பறந்தன. மிருகத்தனமான துப்பாக்கிகளின் வேட்டோசை கேட்டது.

பனை மரங்களைப் போலவே காலம்காலமாய் யாழ்ப்பாணத்தில் வேரூன்றிய தமிழ்க் குடும்பம் அது.

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் தெருவில் வீடு.

இரண்டு பெண்பிள்ளைகள்.

முத்தவள் நவசோதிக்கு 26 வயது.

திருமணம் ஆகாத நவசோதிக்கும் தங்கச்சிக்கும், அப்பாவும் அம்மாவும்தான் உலகம். அடக்கமான பெண்கள். அம்மாவையும், அப்பாவையும் சுற்றிக்கொண்டே இருப்பார்கள்.

நவசோதி அம்மாவைப் பார்த்துச் சொல்வாள்: "இந்த உலகத்திலை எங்களுக்கு எதுவுமே தேவையில்லை அம்மா... நீயும் அப்பாவும் எங்களின்ர வீட்டில் இருந்தாப் போதும்."

சொக்கலிங்கமும் ராசம்மாவும் குளிர்ந்துபோவர்கள்.

காலையில் வீடுவாசல் பெருக்கி கோப்பி போடுவது முதல் – பின்பு நடுப்பகலும் இரவும் சமையல் முடித்து, தட்டில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஆனைக்கோட்டை நல்லெண்ணெய் ஊற்றிச் சோறு பரிமாறுகிற வரை, எல்லாமே நவசோதியின் வேலை தான்; தங்கச்சியும் கூட உதவுவாள். "இப்படியும் ஒரு குடும்பம்!" என்று ஊரை பொறாமைப்பட்டது.

பூவின் இதழ்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு பக்கத்திலேயே நெருக்கமாக இல்லையா? அப்படி ஓர் உறவு.

எத்தனை மகிழ்ச்சியான பொழுதுகள்... நிகழ்வுகள்...!

இரவில் –

அப்பா முற்றத்தில் நாற்காலி போட்டு உட்கார்ந்து கொள்வார்.

பழைய காலத்தில் அவருடைய அப்பா அம்மாவோடு வாழ்ந்த வாழ்க்கை – பழைய கோயில் திருவிழாக்கள் – பழைய அரசியல் – பழைய யாழ்ப்பாணம் – எல்லாமே பழைய நினைவுகளாய் உதிரும்.

கோயில் திருவிழாக்களில் அந்தக் காலத்தில் சின்னமேளம், கூத்து நடக்குமாம். ஓவியக் கலையின் எழில் சிரிக்க திருவிழாக் காரர்கள் வானை முட்டும் "சிகரங்களை" எழுப்புவார்கள். காவடி ஆட்டத்தில் மேனி சிலிர்க்கும். சின்ன வயதிலேயே மறைந்து போன தவில்மேதை தட்சணா மூர்த்தியின் மேளத்தைப்பற்றி அப்பா சொல்லுவார்.

பழைய தமிழ்க் கலைகளைப் பற்றியெல்லாம் விளக்கி – யாழ்ப்பாணத்தின் பொருமைகளைக் கூறிக்கொண்டே வரும் போது அப்பா, அவரைப்பெற்ற மண்ணோடு முழுமையாக ஒன்றிப் போவார்.

பொழுது போவதே தெரிவதில்லை.

அப்பாவோடு பிள்ளைகள் முற்றத்தில் உட்கார்ந்தால் அம்மா சமையலறைக்குப் போய்விடுவாள். சுடச்சுட அம்மா அவித்துக் கொண்ட வரும் பனங்கிழங்கை, அப்பாவோடு முற்றத்தில் உட்கார்ந்து சாப்பிடும் இன்பமே தனி!

நவசோதி 26 வயது ஆகியும் இன்னும் குழந்தையாகவே இருந்தாள்.

விளக்கை அணைத்துப் படுக்கைக்குப் போனால்கூட அம்மாவுக்குப் பக்கத்திலேயே சுருண்டு கொள்வது வழக்கமாகிவிட்டது.

எல்லோரும் கலகலப்பாகவே இருந்தார்கள்.

ஆனால்...

அம்மாவுக்கு எப்போதும் கவலைதான்.

நவசோதியின் திருமணத்தை நடத்துவது எப்படி? தங்கச்சிக்கு வயது வேறு ஏறிக்கொண்டு போகிறது. பிள்ளைகளைப்பற்றியே இரவும் பகலும் அம்மா பேசிக்கொண்டிருப்பாள்.

சீதனக் கொடுமையால் யாழ்ப்பாணம் அழுகிக் கிடக்கிறது எத்தனையே பெண்கள் நாற்பது – நாற்பத்தைந்து வயதுவரை திருமணத்துக்காகக் காத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவே வராதா?

சொக்கலிங்கம் சொல்லுவார்:

"இப்ப இருக்கிற சமுதாய அமைப்பே மாறவேணும். விடுதலைப் புலிகள் வித்தியாசமா சிந்திக்கினம். பெடிகளின்ர ஆட்சி வந்தால்தான் எல்லாமே மாறும்."

ஆம்!

விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களின் நெஞ்சில் பெரிய நம்பிக்கையை விதைத்திருந்தார்கள்.

சிங்கள ஏகாதிபத்தியத்திடமிருந்து மட்டுமல்ல – தமிழீழத்தில் காலங் காலமாக ஊறிய சாதிக் கொடுமை – சீதனம் – ஏற்றத்தாழ்வு – முதலாளித்துவத்தின் மூலதன முடக்கங்கள் – அனைத்திலும் இருந்தே தமிழீழத்துக்கு விடுதலை தேடும் இயக்கமாகப் புலிகள் அமைப்பு விளங்கிற்று.

பிரபாகரன் தமிழீழத்தின் புதிய வழிகாட்டி ஆனார்.

நஞ்சைச் சாப்பிடும் இளைஞர்கள் பிறந்தார்கள்.

ஓ!

புலிகளின் தியாகம் எத்தனை பெரியது!

வீட்டு முற்றத்தில் - இரவில் உட்கார்ந்து பேசும் அந்த மறக்கமுடியாத பொழுதுகளில் - ஒரு முறை சொக்கலிங்கம் சொன்னார் -

"குழந்தைகள், மனைவி எல்லோரையும் தவிக்கவிட்டு இளங்கோ என்ற விடுதலைப் புலி, வெருகல் ஆற்றில் சிங்ளப் படைகளோடு மோதிச் செத்துப் போனானாம்..."

நவசோதிக்குத் தொண்டை அடைத்தது. அவள் கேட்டாள் -

"பிள்ளைகளை விட்டுப்போட்டு அப்பா சாகிறது எவ்வளவு கொடுமை... சிங்களவனுகளின்ர இந்தக் கொடுமைகளுக் கெல்லாம் முடிவே இல்லையா?"

திடீரென்று -

ஒருநாள், ஏதோ ஒரு முடிவு வந்தாற் போலத்தான் தோன்றிற்று.

வடமராட்சியைச் சிங்களப் போர் விமானங்கள் தாக்கியதைத் தொடர்ந்து - இந்தியப் போர் விமானங்கள் யாழ்ப்பாணத்தில் உணவுப் பொதிகளைப் போட்டபோது, சிங்களவனின் கொடுமைகளுக்கு ஒரு முடிவு வந்துவிட்டதாகவே மக்கள் எண்ணினார்கள்.

"இந்தியா வாழ்க!" என்று யாழ்ப்பாணத் தெருக்களில் முழக் கங்கள் எழுந்தன.

பின்பு -

"ஜீப்" வண்டிகளிலும் "ட்றக்" வண்டிகளிலும் வெள்ளைக் கொடிகளோடு இந்தியப்படை யாழ்ப்பாணத்துக்குள் நுழைந் தபோது, மக்கள் நெஞ்சம் கூத்தாடிற்று.

புலிகளுக்கு உறுதுணையாக இந்தியப்படை வருகிறது என்று மக்கள் பூரித்தார்கள்.

ஆனால் -

எத்தனை விரைவில் தமிழீழ மக்களை "ராஜீவ் அரசு" ஏமாற்றி விட்டது.

சிங்களவர்களை விடக் கொடுமையாகத் தமிழர்களைக் கொல் லும் துப்பாக்கிகள் - ஷெல்கள் - டாங்கிகள் - குண்டுகள்...

தமிழீழத்தில்...

மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்ததுபோல்...

நவசோதி அழுதுகொண்டே இருந்தாள்.

ஆனைக்கோட்டையில் துப்பாக்கி வேட்டோசை இன்னும் அடங் கியதாய்த் தெரியவில்லை. எங்கோ "ஷெல் விழுந்து வெடித் ததில், சொக்கலிங்கத்தின் வீட்டு முற்றத்தில் முருங்கைமரம் குலுங்கிற்று. தூரத்தில் அழுகுரல்கள் எழுகின்றன. வானத்தில் ஒரு கொடிய "ஹெலிகொப்டர்" உறுமி வட்டமிட்டது. அடிக்கடி நாய்களின் கத்தல்கள்.

3 மணி ஆகிறது.

காலை 10 மணிக்குத் தண்ணீர் அள்ளப் போன ராசம்மா இன் னும் விரவில்லை.

"ராசம்மா... ராசம்மா..." என்று தலையில் அடித்துக்கொண்டே, அறையில்குறுக்கும் நெடுக்குமாக உலாத்திக்கொண்டிருந்தார் சொக்கலிங்கம்;
அவர் குரல் இறங்கிவிட்டது.

நவசோதியும் தங்கச்சியும் கதறி அழுவதைப் பார்த்து, "அழ தீங்கோ மக்காள்... அம்மா வந்திருவா" என்று அழுது சொன் னார் அவர்.

நவசோதி தலையைச் சுவரில் அடித்துக்கொண்டாள்.

சொக்கலிங்கத்தால் அதற்கு மேலும் அங்கே நிற்க முடிய வில்லை. விறுவிறென்று படலையைத் திறந்துகொண்டு, ராசம் மாவைத் தேடி வெளியே கிளம்பினார் அவர்.

இரவு ஆயிற்று.

எதையும் செய்ய இலாதவளாக நவசோதி இருந்தாள்.

முருங்கை மரத்தில் இரவில் தூங்கும் சேவல் பறந்து தன் வழக்கமான இருக்கையில் தங்கிற்று.

மணி 4, 5, 6 என்று காலம் கரைந்து இரவு ஆகிவிட்டபின்பும், அம்மாவைத் தேடிப் போன அப்பா இன்னும் வரவில்லை.

மின்சாரம் இல்லாமல் இருண்டு கிடந்த யாழ்ப்பாணத்தின் வீடு களில் எல்லாம், எண்ணெய் விளக்குகள் "பளிச் பளிச்" என்று எரியத் தொடங்கின.

தங்கச்சிக்கு எந்த ஆறுதலும் சொல்ல முடியாமல் தவித்தாள் நவசோதி.

அம்மா காலையில் நறுக்கி சுளகில் வைத்துவிட்டுப் போனகத் தரிக்காயத் துண்டுகள் காய்ந்துபோய்க் கிடந்தது. அவை இன் னும் கூடுதலாக - அழுத்தமாக - நினைவு படுத்தி நெஞ்சைக் குடைகின்றன.

துப்பாக்கி வேட்டோசை தொடர்ந்து கேட்டது. ஒவ்வொரு குண் டும் தன் நெஞ்சைத் துளைப்பதாகவே நவசோதி உணர்ந்தாள். அப்பா உட்கார்ந்து பேசும் முற்றம் அனாதையாகக் கிடக்கிறது. முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மினாள் நவசோதி.

எப்போது காலை விடியும்?

உள்ளறையில் இருந்த பழைய மணிக்கூட்டின் "டிக்டிக்" ஓசை, சம்மட்டி அடியாய் தலையில் விழுகிறது.

அவளுக்கு இருப்புக்கொள்ளவில்லை.

அறையில் உலாவிப் பார்த்தாள்; முற்றத்தில் வந்து நின்று, தெருவின் இருபுறம் பார்த்தாள். மீண்டும் தலையைப் பொத்திப் பிடித்துக்கொண்டு முற்றத்தில் வந்து உட்கார்ந்தாள்.

ஓ!

எத்தனை கொடிய இரவு.

நெருப்பில் மனிதனைத் தோய்த்தெடுக்கும் கொடிய மணித் துளிகள்.

காலத்தின் ஓட்டத்தில் இரவு நகர்ந்தது. சாமக் கோழிகள் கூவின. வெளியே துப்பாக்கி வேட்டோசைகள் அடங்கி கொஞ்சம் அமைதிகூட நிலவுவது போல் தோன்றிற்று.

பாதி மயங்கியவளாய் பாயில் கிடந்த தங்கச்சியை எழுப்பி, "இன்னும் கொஞ்ச நேரத்தில் விடிஞ்சிரும் தங்கச்சி" என்று சொன்னவள் திரும்பவும் தெருவுக்கு வந்து நின்றுகொண்டாள். யாராவது ஊர்க்காரர்களின் நடமாட்டம் இருந்தால் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் காலைக் குளிரில் அவள் உடல் படபட என்று நடுங்கிற்று.

கொஞ்சம் கொஞ்சமாக இருள் விலகி - காக்கைகள் சிறகு தட்டிப் பறக்கின்றன. வேலி மூலையில் இரத்தச்சிவப்பாய் செம்பருத்திப் பூ விரிகிறது.

வெடித்துவிடும் போலிருந்த நெஞ்சைக் கைகளால் பொத்திப் பிடித்துக் கொண்டே தெருவில் இறங்கித் தோட்டக் காணியை நோக்கி நடந்தாள் நவசோதி.

நூறு, யார் தூரம் தான்...

என்ன கொடுமை!

தெருவிலேயெ உறைந்துபோன இரத்தச் சேற்றில் பிணமாகக் கிடந்தார் சொக்கலிங்கம் துப்பாக்கிக் குண்டுகள் அவர் உடலைச் சல்லடை போட்டிருந்தன.

முகம் கன்னங்கரேலென்று...

"ஐயோ அப்பா!" என்று வானம் வெடிக்கக் கத்தினாள் நவசோதி.

யாழ்ப்பாணத்தின் அழகிய கலைகளை நேசித்த - யாழ்ப்பாணத் தின் சமூகக் கேடுகளை வெறுத்த - ஒரு நல்ல யாழ்ப்பாணத் தானின் கதை முடிந்துவிட்டது!

அவர் காணத் துடித்த விடுதலை பெற்ற தமிழீழத்துக்கு, அவரும் பசளையோடு பசளையாக...

நவசோதி வெறிபிடித்தவளாய் அம்மாவைத் தேடித் தோட்டக் கிணற்றை நோக்கி ஓடினாள்.

அங்கே -

கிணற்றுக்குப் பக்கத்திலேயெ மண்டை ஓடு சிதறி உருத் தெரியாமல் கிடந்தாள் அம்மா.

இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் ஏற்படுத்திய "பேரமைதி யில்" இரண்டு தமிழுயிர்களும் இரண்டறக்கலந்துவிட்டன.

"அம்மா அம்மா!" என்று பதறித் துடித்தாள் நவசோதி.

சேதி அறிந்து புலம்பி அடித்துக்கொண்டே ஓடிவந்த, தங்கச் சியைக் கட்டிப்பிடித்து, "அம்மாவும் அப்பாவும் போற்றினம் தங்கச்சி!" என்று நெஞ்சு வெடிக்கக்கத்தினாள் அவள்.

உண்மைதான்.

சொக்கலிங்கமும் ராசம்மாவும் இறந்து பிணங்களாய்ப் போய் விட்டார்கள்.

ஆனால் -

நவசோதியும் தங்கச்சியும்...?

- தமிழீழம், பங்குனி 1989





# சிங்கள அரசின் அடிவருடிகளா Ex-WTM & NCCT

## [கனடியத் தமிழர் சமூகமும் மாணவர் சமூகமும்?]




2023 மே மாத ஆரம்பத்தில் தமிழ் வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட அல் லது ஒட்டப்பட்ட மே 18 முள்ளி வாய்க்கால் தமிழ் இனப்படு கொலையை நினைவூட்டும் வகையில் பணத்தை செலவு செய்து, அச்சிடப்பட்டு ஒட்டப்பட்ட பதாதைகள் கிழித்தெடுக்கப்பட்டும், எமது பத்திரிகையின் சின்னத்தை கறுப்பு மை கொண்டு மறைத்தும், ஒட்டப்பட்ட பதாதைகளை மறைத் தும் வேறொரு பதாதை ஒட்டப்பட்டுள்ளது.




ஆனால், சிங்கள இனவாத அரசின் செயற் பாடுகளுக்கு துணை போகும் செயற்பாடாகவே இதனை பார்க்க வேண்டி உள்ளது. எனென்றால் சமாதான காலப்பகுதியில் அரசியல் துறை பொறுப் பாளர் அண்ணன் தமிழ்ச்செல்வனால் சொல்லப்பட்டது போன்று எந்தெந்த நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றீர்களோ அந்தந்த நாட்டு அரசியல் வாதிகளுக்கும், அங்கு வாழ்ந்து கொண் டிருக்கும் தமிழ் மக்களுக்கும், தமிழீழத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள அரசினாலும், சிங்கள அதி காரவர்க்கத் தினரலும் இழைக்கப்பட்ட, இழைக்கப்படுக் கொண்டிருக்கும் தமிழ் இனஅழிப்பை எடுத்துச் சொல்லி ஞாபகப் படுத்திக் கொணடே இருக்கவேண்டும் என்று கூறியது இந்த NCCT யினருக்கு தெரியாதா? அல்லது தமிழ்ச் செல்வன் அண்ணன் கூறியது விளங்கவில்லையா? அத்துடன் அவர் கூறியது, “நீங்கள் தனிமனிதனாகவோ, அல்லது அமைப்பாகவோ, எந்த வடிவத்திலாவது தமிழீழத்திற்கான வலுச்சேர்கும் செயற் பாடுகளில் ஈடுபடலாம் எனக்கூறியது” அவர் களுக்கு (NCCT, Ex-WTM) தெரியாதா? அல்லது தெரிந்தும், தாங்கள் தான் கனடாவில் தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகள், என்ற நினைப்பில் இருக்கிறார்களா?

அப்படியான ஒரு மாயை நினைப்பில் இருந்தால் இருந்து விட்டு, ஏமாற்றக்கூடிய தமிழ் மக்களை ஏமாற்றி உங்கள் உங்கள் குடும்பங்களை மட்டும் வாழவைத்துக் கொண்டு போங்கள்.

ஆனால், Ex-WTM ( NCCT Shadow Operators) ஆனலும் சரி, NCCT




ஆனலும் சரி ஒட்டு மொத்த தமிழ் மக்களின் தலையிலும் மிள காய் அரைப்பதற்கு இனிமேல் காலத்திலும் உங்களால் முடியும் என்பதை கனவிலும் நினைத்துப்பார்க்காதீர்கள். அமைதியான முறையில் அறிக்கை மூலம் தொடர்ச்சியாகவே இதனை தெரியப்படுத்துகிறோம். தனிமனிதனாக இருந்தாலும் சரி, அமைப்புகளாக இருந்தாலும் சரி, ஈழ நலன் சார்ந்த செயற் பாடுகள் வரவேற்கத் தக்கவையே.

அந்த வகையில், பதாதைகள் மேல் பதாதை ஒட்டுவது, ஒரு வரை ஒருவர் எதிரிகளாக பார்ப்பது, துரோகத் தனமான செயற் பாடுகளில் ஈடுபடுவது போன்ற செயற்படுகள் நிறுத்தப்பட வேண்டும்.

உங்கள் உங்கள் வழிகளில் சென்று தமிழீழத்தின் எதிர்கால நலனுக்காகவும், தமிழீழத்தின் கடந்தகால, நிகழ்கால, எதிர் கால செயற்பாடுகளை புதிய தலைமுறையினருக்கும், அந்தந்த நாட்டு அரசியல் தரப்பினருக்கும் பரப்புரை செய்யுங்கள். அதை விட்டுவிட்டு, குடியேறிய நாடுகளில் தமிழீழத்திற்காக சேகரிக் கப்பட்ட பணத்தில் கூடிக் கும்மியடிப்பதும், தூய சிந்தையோடு நாட்டின் நன்மை கருதி செயற்படுபவர்களை ஏளனம் செய் வதையும் தவித்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள் கிறோம்.

அப்படி இல்லை இப்படித்தான் செய்வோம் என்றால், கடந்த காலங்களில் எப்படி ஏமாற்றினோமோ அப்படியேதான் தொடர் வோம் என்றால், அதற்கான பின் விளைவுகளையும், பொறுப் புக்களையும் இவ்விரு அமைப்புக்களுமே ஏற்றுக்கொள்ள வேண்டி வரும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் மீண்டும். தயவு செய்து இனிமேல் காலத் திலாவது இப்படியான செயல்பாடுகளில் ஈடுபடவேண்டாமென (மக்கள் நலனில் அக்கறை இருந்தால்) தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.







மேலும் 14 ஆண்டுகளுக்குப் பின், இனியாவது ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சொல்வதும் அவதூறுகள் பரப்புவதும், கண்டனங்கள் தெரிவிப்பதும், நான் பெரிது நீ சிறிது என்கின்ற சிந்தனைகளில் இருந்து விடபட்டு, தமிழீழம் நோக்கிய - தமிழினம் சார்ந்த எந்த நல்ல செயற்பாடுகளையும் யாரும் செய்யலாம் என்கிறன்ற சிந்தனை எல்லோருடைய சிந்தை யிலும் வரவேண்டும். இப்படியான சிந்தனையும், செயற் பாடுகளும் தான் எமது மக்களின் நல்ல வாழ்வாதாரத்திற்கும், அடுத்த கட்ட தமிழீழத்திற்கான செயற்பாடாகவும் இருக்கும் என கருதுகிறோம்.

இதை விடுத்து, மறைவிலிருந்து செயற்படுகிறோம் என தமிழீழ அடையாளங்களை நீக்கி விட்டும், பெயர்களை மாற்றியும், வரலாற்று தடங்களை அழிக்கும் செயற்பாட்டுடன் மக்களுக்கு படம் காட்டாதீர்கள் என கேட்டுக் கொள்கிறோம்.

ஆகவே மீண்டும் பேதங்களை விட்டு தனி மனிதனாகவோ, குழுக்களாகவோ, அமைப்புக்களாகவோ, அவதூறு செய் யாதீர்கள், அசிங்கமான வார்தைப்பிரயோகங்களை பயன் படுத் தாதீர்கள். ஈழம் சார்ந்த செயற்பாடுகள் ஒரு சில அமைப்புகளுக் குத்தான் தாரை வார்த்து கொடுக்கப்பட்டது என்று யாரும் கருதி விடாதீர்கள். அவரவர் வழியில் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படு வோம்.

-உமாகரன், ஐரோப்பா-

# அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டம் தமிழர் சுயநிர்ணய உரிமையை நசுக்குகிறது!

***தமிழ மக்கள் இலங்கையின் அரசியலமைப்புகளையே ஏற்றுக்கொள்ளவில்லை***

இலங்கைத்தீவு முழுவதும் என்று ஒரே அரசியலமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை,

1. கோல்புறூக் - கமெரன் அரசியல் திட்டம் - 1833
2. குறூ — மக்கலம் அரசியல் திட்டம் - 1910
3. மானிங் தற்காலிக அரசியல் திட்டம் - 1921
4. மானிங் அரசியல் திட்டம் - 1924
5. டொனமூர் அரசியல் திட்டம் - 1931
6. சோல்பரி அரசியல் திட்டம் - 1947
7. கொல்வின் அரசியல் திட்டம் - 1972
8. ஜெயவர்த்தனா அரசின் அரசியல் திட்டம் - 1978

என எட்டு அரசியல் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை எவையும் தமிழ் மக்களின் ஒப்புதலுடனேயோ அல்லது ஒத்துழைப்புடனேயே கொண்டுவரப்பட்டவை அல்ல.

மாறாக, 1931 இல் கொண்டு வரப்பட்ட டொனமூர் அரசியலமைப்பிலிருந்து நடைமுறைக்கு வந்த எல்லா அரசியலமைப்புச் சட்டங்களும் தமிழ் இயக்கங்களின், தமிழ் மக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே தமிழ் மக்களின் உணர்வுகளை உதாசீனம் செய்துவிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

மேற்படி அரசியலமைப்புகளை ஆதரித்த தமிழ் பேசும் தலைவர்களோ உறுப்பினர்களோ பின்னர் நடந்த தேர்தல்களின் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். 1972-ம் ஆண்டு சிறீமாவோ ஆட்சியினால் கொண்டுவரப்பட்ட ஏற்கெனவே இருந்துவந்த தமிழ் மக்களின் அரை குறை உரிமைகளையும் புறக்கணித்த குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் கடுமையாக எதிர்த்தன. சிங்கள கட்சிகளிலிருந்த தமிழ் பேசும் உறுப்பினர்களும், சுயநலங்களுக்காக தமிழ் இயக்கங்களில் இருந்து கட்டுப்பாட்டை மீறிய சில தமிழ் பேசும் உறுப்பினர்களும் அந்த அரசியலமைப்பை ஆதரித்துக் கையெழுத்திட்டனர். அவர்கள் அனைவரும் தமிழீழ மக்களால் (வடகிழக்கு மாகாண மக்களால்) அடுத்த தேர்தலில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டனர்.

மேற்படி அரசியலமைப்பை ஆதரித்து கையெழுத்திட்ட ராஜன் செல்வநாயகம், சி. எக்ஸ். மார்ட்டின், குமாரசூரியர், அருளம்பலம், தியாகராஜா, பதியுதீன் மொகமட், எம்.சி. அகமட், ஏ.எல். அப்துல்மஜீத் ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி சிறீமாவோவின் அரசியலமைப்பையும் ஆட்சியையும் ஆதரித்த தம்பிராசா, M.M. முஸ்தபா ஆகியோரும் அடுத்து வந்த 1977-ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது தமிழீழ மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் கட்டுப்பணத்தைக்கூடப் பெற முடியாத அளவுக்கு பரிதாபகரமான முறையில் தோல்வியைத் தழுவினர்.

அதேபோன்று 1978-ல் ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த ஆளுங் கட்சியைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகளும், பின்னர் அரசயில் சட்டத்துக்கும் ஜெயவர்த்தனா அரசுக்கும் ஆதரவாகச் செயற்பட்ட தமிழ் பேசும் பிரதிநிதிகளுமான K. அப்துல் மஜீத், ராஜதுரை, K.W. தேவநாயகம், மன்சூர், மஃரூப் ஜலால்தீன், ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோர் 1989-ம் ஆண்டு தேர்தலில் தமிழீழ மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். அல்லது தேர்தலில் போட்டியிட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

எனவே கடந்தகால வரலாற்று நிகழ்வுகளிலிருந்து தமிழீழ மக்கள் சிறீலங்காவின் அரசியலமைப்பை ஏற்றோ, அதற்குக் கட்டுப்பட்டோ தாம் நடக்க விரும்பியவர்களல்லர் என்பதை தமக்குக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

***தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கவே ஆறாவது திருத்தச் சட்டம்***

ஒரு தேசிய இனத்துக்கு உரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனித்துவமான அரசொன்றை அமைத்து தமது தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என்று தெளிவான முடிவெடுத்த தமிழீழ மக்கள் அதற்காக உறுதியாக நின்று போராடிவரும் விடுதலைப்புலிகளுக்கு தங்களின் பேராதரவையும் ஒத்துழைப்பையும் கொடுத்துவருகின்றனர்.

அடக்கு முறைகளுக்கு எதிராக வரலாற்று ரீதியாக தொடர்ந்து வரும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புகளை முனை மழுங்கச் செய்யவும், தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை நசுக்கவும், தமிழ் பேசும் மக்களை தொடந்து அடிமைகளாக வைத்திருக்கவும் ஒரு கருவியாகவே ஜெயவர்த்தனா ஆட்சியாளரால் 1983 ஆகஸ்ட் 08-ம் நாள் அரசியல் அமைப்பில் 06-வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

அத்திருத்தச் சட்டத்தின்படி,

157 A

(1) எந்த மனிதனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தனிநாடு ஒன்றை சிறீலங்காவின் எல்லைக்குள் அமைக்க, சிறீலங்காவின் எல்லைக்கு உள்ளேயோ வெளியேயோ இருந்து தூண்டவோ, நிதியளிக்கவோ, ஊக்கப்படுத்தவோ, பிரச்சாரம் செய்யவோ, ஆலோசனை தரவோ ஆதரவளிக்கவோ கூடாது.

(2) சிறீலங்காவின் எல்லைக்குள் தனி நாடு அமைப்பதை எந்தவொரு அரசயிற் கட்சியோ - சங்கமோ - அமைப்போ தன் கொள்கைகளிலொன்றாகக் கொண்டிருக்கக் கூடாது.

என்று கூறப்பட்டுள்ளது. இவற்றை மீறுபவர்கள் நீதிமன்றில் விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால்,

- மீறும் தனநபர் ஏழு ஆண்டுகள் அரசயில் உரிமையை இழப்பார்.
- அவரது சொத்துக்கள் நீதிமன்றத் தீர்ப்பினால் பறிமுதலாகும்.
- பாராளுமன்ற உறுப்பினராயின் அவர் பதவி பறிக்கப் படும். பின்னர் 7 ஆண்டுகளுக்கு உறுப்பினராகும் வாய்ப்பை அவர் இழப்பார்.
- கடவுச்சீட்டைப் பெறும் உரிமை, பரீட்சைகள் எதிலும் பங்குபற்றும் உரிமை, அசையாச் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை, சட்டத்துக்கு அமைய அனுமதிப் பத்திரமோ, பதிவோ அன்றி அரசின் ஒப்புதலோ தேவைப்படும் வணிகத்திலோ தொழிலிலோ ஈடுபடும் உரிமை இவைகளை நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்து அவர் இழப்பார்.

பிரிவினைக் கொள்கையைக் கொண்டிருப்பதாக அரசியற் கட்சியொன்றோ - அமைப்போ - சங்கமோ குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து மேலே குறிப்பிட்ட தண்டனைகள் அக்கட்சியின் - அமைப்பின் - சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படும்.

அதுமட்டுமல்ல, இச்சட்டம் நடைமுறைக்கு வந்து ஒரு மாத காலத்துக்குள், பாராளுமன்ற உறுப்பினர்களோ அரசு அதிகாரிகளோ “இலங்கை அரசின் அரசயிலமைப்புச்சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்குப் பாதுகாப்பாகச் செயற்படுவதுடன் சிறீலங்காவின் ஆட்சிப் பகுதிக்குள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, சிறீலங்காவுக்கு உள்ளேயொ, வெளியேயோ இருந்து கொண்டு தனி நாடொன்றை உருவாக்கும் கொள்கையைக் கொண்டிருக்கவோ, அதற்கு நிதியுதவியளிக்கவோ, ஊக்கம் கொடுக்கவோ ஆதரவாக பிரச்சாரம் செய்யவோ மாட்டேன்” என்று சத்தியப்பிரமாணம் எடுத்தல் வேண்டும். இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின் நியமனம் பெறும் பாராளுமன்ற உறுப்பினரோ, அரசு அலுவலகர்களோ, நியமனம் பெற்ற ஒரு மாத காலத்துக்குள் மேற்படி சத்தியப்பிரமாணத்தை எடுக்க வேண்டும்.

அப்படி சத்தியப்பிரமாணம் எடுக்கத் தவறினால் அவர்கள் பதவியை இழப்பார்கள் என்றும் அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டம் கூறுகிறது.

***இந்தச் சட்டமானது தமிழர்களின் உரிமைகளைமட்டும் பறிக்கவில்லை; நசுக்கவில்லை. தமிழர்கள் தம் உரிமைகளுக்காகப் போராடும் உரிமைகளையும் கூட இச்சட்டம் நசுக்குகிறது.***

1983-ம் அண்டு ஆகஸ்ட் மாதம் அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டத்துக்கு அமைய அரசியலமைப்புக்கு விசுவாசமாக பிரிவினைக்கு எதிராகச் சத்தியப்பிரமாணம் செய்ய சூழ்நிலை சாதகமாக, பாதுகாப்பாக இல்லாததால் பதவி பறிபோனாலும் சத்தியப் பிரமாணம் எடுக்கமாட்டோம் என்று பத்தினி வேடம் போட்டு வீரம் பேசி வெளிநாட்டுக்கு ஓடிவிட்டு, அதனால் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்த கூட்டணித் “தம்பிரான்கள்” தாம் பிரிவினைக்கோஷத்தை முன்வைத்து எம்.பி. பதவியைப் பெற்றதையும் மறந்து, கொண்ட கொள்கைகளைக் கைவிட்டு, இன்று தமிழ் மக்களின் நலன்களைப் புறக்கணித்து எம்.பி. பதவிக்காக சிங்கள ஏகாதிபத்தியவாதிகளிடம் சரணடைந்து, பிரிவினை கேட்கமாட்டோம் பிரிவினைக்கு ஆதரவளிக்கமாட்டோம். அது எங்கள் கொள்கை அல்ல நாம் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு விசுவாசமாக இருப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்து தேர்தலில் நின்றனர். இவர்கள் அனைவரையும் தமிழீழ மக்கள் தேர்தலில் படுதோல்வி அடையச் செய்திருக்கின்றனர்.




தமிழீழ மக்கள் விழிப்புடனேயே இருக்கிறார்கள். அவர்களை சுயநலவாதிகளும் பச்சோந்திகளும் என்றும் ஏமாற்றிவிட முடியாது. திம்பு பேச்சுவார்த்தையின்போது “இலங்கை அரசுடன் சமரசம்பற்றி பேசுவதானால் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிக்கப்படவேண்டும்” என்பது உட்பட நாலு நிபந்தனைகளை விடுதலைப் புலிகளுடன் கூட்டணியும் மற்றும் நான்கு அமைப்புக்களும் இலங்கை அரசுக்கு விதித்தன. பின்னர் இந்திய அரசின் நெருக்குதல் காரணமாக இலங்கை அரசு நிபந்தனை எதையும் நிறைவேற்றாத போதிலும் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நடைபெற்ற தேர்தல்களில் பங்கேற்றன.


தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு படிமேலே போய் திம்பு பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகள் நான்கும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை உட்பட நிறைவேற்றப்பட்டால்தான் இலங்கை அரசியல் அமைப்பின் 06-வது திருத்தச் சட்டத்துக்கு அமைய தாம் சத்தியப்பிரமாணம் எடுக்க முடிவெடுத்ததாக தமது தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருந்தனர்.

சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? ஒரு தேசிய இனம் தன் தலைவிதியைத் தானே முடிவு செய்யும் உரிமை அதாவது பிரிந்து செல்லும் உரிமை. அந்த உரிமையை இலங்கை அரசு வழங்கிவிட்டதாக பொய் கூறிய கூட்டணியினர் தமிழர்களை ஏமாற்ற முனைந்தனர்.

ஆனால் சுட்டணியினர் ஏற்றுக்கொண்ட அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டம் கூறுவதெனன்? இலங்கை ஆட்சிப் பகுதிக்குள் பிரிவினை ஏற்படுத்தும் கொள்கையை எவரும் எந்த அமைப்பும் கொண்டிருக்கக்கூடாது. அப்படிக் கொண்டிருப்பவர்கள் கொண்டிருக்கும் இயக்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் குடியுரிமையை இழப்பர், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும், பதவிகள் பறிக்கப்படும், இதில் எங்கே தமிழர்களின் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது? தமிழர்கள் சுயநிர்ணய உரிமை கேட்கக்கூடாது - அதன் அடிப்படையில் தனியரசு அமைக்க எண்ணக்கூடாது - அதைக் கொள்கையாகக் கொண்டிருக்கக்கூடாது என்றுதானே 06-வது திருத்தச் சட்டம் கூறுகிறது.

நன்றி: தமிழீழம் - ஏப்ரல் 1989 - குரல் 10



எமக்கு ஒரு நாடு வேண்டும்
எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்
எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும்
என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே,
மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள் எனவே எமது
மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின்
விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப்
பிரகடனமாகவே சம்பவிக்கின்றது

*தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்